# ஆசிரியர் வழிகாட்டி

# சைவநெறி

2026 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கானது

## தரம் - 01



முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
இலங்கை.

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

ஆசிரியர் வழிகாட்டி,
சைவ நெறி,
தரம் 1.

முதற்பதிப்பு 2025

© தேசிய கல்வி நிறுவகம்

பதிப்புரிமையுடையது

ISBN:

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
இலங்கை,

இணையத்தளம் : www.nie.lk

வெளியீடு : கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
அச்சிடுதல் : .......................................................

## தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கைப் பொதுக் கல்வியின் காத்திரமான மறுசீரமைப்பு முயற்சியானது, கற்போர் ஒவ்வொருவரினதும் தேவைகளைத் பூர்த்தி செய்வதற்கான தீர்க்கமான ஒரு பாதையை இலக்காகக் கொண்டுள்ளது.

தேர்ச்சிகள் சார்ந்த பகுத்தறிவுச் சிந்தனை, ஆக்கத்திறன், 21 ஆம் நூற்றாண்டுத் திறன்கள், தொழிநுட்ப முனைப்பு, விழுமிய பண்புகள் போன்ற பல துறைகளை வலியுறுத்தத்தக்க வகையில், கலைத்திட்டம் கற்றல் - கற்பித்தல் முறைகள், கணிப்பீட்டு நடைமுறைகள் போன்றவற்றின் நவீனமயமாக்கம் முதலியன மறுசீரமைப்புச் செயன்முறையின் அடிப்படை அம்சங்களாக அமைந்துள்ளன.

கல்வியியலாளர்கள், பாடத்துறைச் சிறப்பறிஞர்கள், ஆசிரியர்கள் உட்பட பல்வேறு தரப்பினர்களுடன் இடம் பெற்ற உரையாடல்களின் ஊடாக, தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம், 2026 ஆம் ஆண்டில், தரம் 01, தரம் 06 ஆகிய வகுப்புக்களுக்கு சாதனங்களினது தரத்தை உறுதிப்படுத்துவதற்காக, விசேட ஒத்துழைப்புகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய பிரதமர், கல்வி செயலாளர், கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்கள், பாடப் பொறுப்பதிகாரிகள், பரீட்சை ஆணையாளர் நாயகம் மற்றும் பணியணியினர், கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகமும் அவரது பணியணியினர், முதலியோர் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது. மேலும், இப்பணியின் போது விசேடமாக செயற்பட்ட, தேசிய கல்வி நிறுவகப் பேரவை, கல்விசார் அலுவல்கள் சபை ஆகியவற்றின் அர்ப்பணிப்பை நன்றியுடனும் கௌரவத்துடனும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இப்பணியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தேசிய கல்வி நிறுவகப் பணியணியினர் அனைவருக்கும், தேசத்தின் கௌரவம் உரித்தாகும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

பேராசிரியர் மஞ்சுளா வித்தானபதிரண.

பணிப்பாளர் நாயகம்,

தேசிய கல்வி நிறுவகம்.

## தேசிய கல்வி நிறுவகப் பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

எமது நாட்டின் புதிய கலைத்திட்டம், மாறிவரும் உலக மற்றும் நாட்டில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கு அவசியமான திறன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதேபோல் காலத்திற்குக்காலம் மாறிவருகின்ற உலகிற்குப் பொருத்தமான திறன்களை வளர்த்து, நிலைபேண்தகு அபிவிருத்திக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்கும் நாட்டு மக்களிடம் காணக்கூடிய இயலுமையையும் மேற்கிளம்பச் செய்கின்றது. தற்போதைய கலைத்திட்டத்தில் புத்தாக்கங்களையும் புதிய பாடங்களையும் அறிமுகப் படுத்துவதன் மூலம், கற்றல் - கற்பித்தல் செயல்முறையை நவீன காலத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை இது அங்கீகரிக்கிறது. 2026 ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் புதிய கலைத்திட்டத்திற்கு இணங்க ஒவ்வொரு பாடத்திற்கும் கற்றல் திறனை விருத்தி செய்யக்கூடிய செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் இப்புதிய கலைத்திட்டமானது. 2026 ஆம் ஆண்டு தரம் 01, தரம் 06 2027 ஆம் ஆண்டு தரம் 02, தரம் 07 2028 ஆம் ஆண்டு தரம் 03, தரம் 08 2029 ஆம் ஆண்டு தரம் 04, தரம் 09 2030 ஆம் ஆண்டு தரம் 05 மற்றும் கனிஷ்ட இடை நிலைப் பிரிவுகளுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந்த செயற்பாட்டு நூலானது மாணவர்களுக்கான புதிய கற்றல் முறைகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளதோடு இச்செயற்பாடுகளின் ஊடாக அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை ஆசிரியர் வழங்குவார். மேலும் இச் செயற்பாட்டு நூலானது மாணவர்களின் சுய கற்றலுக்கு அவசியமான சூழலை உருவாக்குகின்றது. இவற்றின் ஊடாக மாணவர்கள் பாட உள்ளடக்கம் பற்றிய அறிவைப் பெறுவதோடு, பெற்ற அறிவைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பிரயோகிப்பார்கள் என நாங்கள் நம்புகிறோம். இக்கற்றற் சந்தர்ப்பங்களில் 21 ஆம் நூற்றாண்டின் திறன்களான எழுத்தறிவு (Literecy) ஆளிடைத்தொடர்புத் திறன்கள், (Intrpersonal Skills) மற்றும் விழுமியங்கள் (Values) முதலியனவற்றை வலுப்படுத்துவதற்கு பெரிதும் உதவும்.

ஒவ்வொரு செயற்பாட்டு நூல்களிலும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்ததுவதற்கான வழிகாட்டுதல்களோடு, மாணவர்கள் தாங்கள் அடைந்த செயல்திறன் மற்றும் கல்வி இலக்குகளைச் சுயமாக மதிப்பிடுவதற்குத் தேவையான மதிப்பீட்டுக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. புதிய திறன்களையும் அறிவையும் பிரயோகிப்பதற்கான வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம், யதார்த்தமான கற்றலுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை இச்செயற்பாட்டு நூல்கள் வழங்குகின்றன.

இச்செயற்பாட்டு நூல் அடைப்படையிலான கற்றல் முறையைத் தயாரிக்கும் முதன்மைப் பணிகளை மேற்கொண்ட, கல்வி அமைச்சின் முன்னாள், செயலாளர் பேராசிரியர் உபாலி சேதர, தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகங்களான பேராசிரியர் சுனில் ஜயந்த நவரத்தின், பேராசிரியர் பிரசாத் சேதுங்க ஆகியோரின் அர்ப்பணிப்பான முன்னெடுப்பினை நாங்கள் கௌரவமாக மதிக்கின்றோம். மேலும் இச் செயற்பாட்டு நூல்களை தயாரிப்பதில் பங்களித்த பணிப்பாளர், விரிவுரையாளர்கள், ஏனைய பணியணியினர் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பல்வேறு துறைசார்ந்தோரின் உயர்மட்ட சேவையினையும் நாம் மகிழ்ச்சியுடன் நினைவு கூர்கின்றோம். இந்த செயற்பாட்டு நூலை பயன்படுத்தும் போது நீங்கள் பெறும் அனுபவங்களும் ஆலோசனைகளும் எங்களுக்கு மிகவும் அவசியமானவை. எனவே எதிர்காலத்தில் இச்செயற்பாட்டு நூல் மேம்பாட்டிற்காக உங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எமக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கலாநிதி எஸ். ஏ.டி, சமரவீர.

பிரதிப் பணிப்பாளர் நாயகம்,

மொமிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்,

தேசிய கல்வி நிறுவகம்,

மகரகம,

இலங்கை.

## கலைத்திட்டக்குழு

**ஆலோசனை**

பேராசிரியர் மஞ்சுளா விதானபதிரண.
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

கலாநிதி தர்சன சமரவீர. பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

**மேற்பார்வை**

ஆர்.எம்.கே. த. சில்வா.
பணிப்பாளர்,
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட இணைப்பாக்கம்**

கனகநாதன் மகேந்திரன். உதவி விரிவுரையாளர்,
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**எழுத்தாக்கம்**

**உள்வாரி**

கனகநாதன் மகேந்திரன். உதவி விரிவுரையாளர்,
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

வெளிவாளி

லலிதாம்பிகை சண்முகநாதன். உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)
(ஓய்வு நிலை)
ஆரம்பக் கல்வி கிளை கல்வி அமைச்சு.
(முதலாம் தவணை மாத்திரம்)
இ. கணேசலிங்கம். உதவிக் கல்விப் பணிப்பாளர், (ஆரம்பக்கல்வி)
வலயக்கல்வி அலுவலகம் யாழ்பாணம்.
(முதலாம் தவணை மாத்திரம்)

**பதிப்பாசிரியர்**

பேராசிரியர் எஸ். கேசவன், (ஓய்வு)
முன்னாள் தலைவர்,
இந்து நாகரிகத் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**மொழிச் செம்மையாக்கம்**

வி.என்.எஸ். உதயச்சந்திரன். பணிப்பாளர், (ஓய்வு நிலை)
தமிழ் மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**சரவை நோக்கு**

**சித்திரம்**

எஸ். முரளி ஆசிரியர். ( ஓய்வுநிலை)
ம.மா/க/சரஸ்வதி இந்து தேசியக் கல்லூரி,
புஸ்சல்லாவ.

**கணினி வடிவமைப்பு**

வி. சுதேஸ் குமார்.
ஆசிரியர்.
மே.மா./ஹோ/ வகவத்தை தமிழ் கனிஷ்ட வித்தியாலயம்.
தும்மோதரை

ரத்னராஜா தனுஷா.
தேசிய கல்வி நிறுவகம்.

**அட்டைப்பட வடிவமைப்பு**

ரஜித சம்பத்.
வரைகலை வடிவமைப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்.

# அறிமுகம்

## பாட அறிமுகம்

சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்வி என்பது மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சி, ஒழுக்கம் மற்றும் சமூகப்பண்புகளை வளர்க்கும் ஒரு கல்வி முறையாகும்.

இது தனி மனித முன்னேற்றம், நல்ல நடத்தை மற்றும் நெறிமுறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அனைத்து பாடத்திட்டங்களிலும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். கல்வி, ஒழுக்கம், என்பன மாணவர்களை நேர்மை, பொறுமை, மற்றும் பண்புசார்ந்த வாழ்க்கைக்கு வழிப்படுத்துகிறது.

ஒவ்வொரு சமயமும் சிறந்த ஒழுக்க நெறிகளைக் கற்பிக்கிறது. சமயம் மற்றும் கலாசாரத்தை கற்பது மாணவர்களைத் தீய வழிகளில் செல்லாமல் தடுக்க உதவுகிறது மட்டுமல்லாமல் அன்பு, இரக்கம், பரிவு. நேர்மை, உதவிசெய்தல், அகிம்சை போன்ற நல்ல பண்புகளை வளர்க்கிறது.

உடல், மனம், ஆன்மீக வளர்ச்சியை ஒன்றிணைத்து, மனித வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் அன்பை வெளிப்படுத்த உதவுகிறது.

ஆரம்ப காலத்திலிருந்த ஒழுக்க விழுமியங்களைக் கற்பிப்பது பொதுக் கல்வி முழுமைக்கும் அவசியமாகும்.

ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறக்கும் வரை தமது வாழ்வில் விழுமிய பண்புகளும், கலாசார பண்புகளுடனும் சமய நம்பிக்கைகளுடனும் பயணிக்க கூடிய வகையில் ஒன்றிணைக்கப்பட்டதே எமது நெறி என்பதால் அதன் படி செயற்பட்டு வாழ்வில் வளம் பெறுவோமாக.

## சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்வி

எமது நாட்டில் காணப்படும் பல்வகையான சமூகக் கலாசாரச் சூழலில் சமய விழுமியப் பண்புகளைக் கற்பிப்பது இன்றியமையாத ஒரு அம்சமாகும். நாட்டில் காணப்படும் சமயங்களில் தத்துவ ரீதியாகவும் பிரயோக ரீதியாகவும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. ''எமது நாட்டுக் குடிமக்கள்'' என்ற வகையில் ஒரே வகைக்குள் கொண்டுவருதல் கடினமான செயற்பாடாகும். தேசிய பொருளாதாரத்துக்கும் அபிவிருத்திக்கும் இணக்கப்பாட்டுக்கும் அது அச்சுறுத்தலாக செல்வாக்கு செலுத்துகின்றது. எனவே வேறு வகையில் செயற்படுதல் தேசிய தேவையாகும். அதற்கேற்ப தேசிய கல்விக்குச் சமயம் மற்றும் ஒழுக்கவியல் பண்புகளை வளர்க்க உதவும் வழிமுறைகளை எடுத்துக் காட்டுதல் தேசிய பாடத்திட்டத்தின் பிரதான நோக்கம் ஆகும்.

சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்வியின் இறுதியான நோக்கம் பிள்ளைகளின் வயதுக்கு ஏற்ற வகையில் சமயக் கல்வியை வழங்குதல் ஆகும். எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் தலை, இதயம், கை, மனம் என்பனவற்றுடன் இணைந்து மனப்பாங்கில் விருத்தி பெற்று எதிர்கால உலகத்தை வெற்றியுடன் எதிர்கொள்ளும் ஆக்கபூர்வமான பிரஜையை சமூகத்துக்கு வழங்குதல் அவசியமாகும்.

முக்கியமான சமூக - சமய எண்ணக்கருக்கள் ஐந்தின் கீழ் கட்டியெழுப்பிய சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்விக்கான பாடத்திட்டம் ஆன்மீக விருத்திக்கும் தனிநபர் விருத்திக்கும் அவசியமான திறமைகளை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கேற்ப பாடத்திட்டத்தில் எதிர்காலச் சவால்களுக்கு ஊக்கத்துடனும் துணிவுடனும் முகம் கொடுக்கும் செயற்றிறன் உள்ள நபரை சமூகத்துக்குக் கொடையாக அளிப்பதற்குத் தேவையான அடித்தளம் ஆரம்பக்கல்வியில் இருந்து கட்டியெழுப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆரம்பக் கல்வி தொடர்பாகச் சைவநெறிப் பாடத்திட்டம் தயாரிப்பில் கற்கும் மாணவரின் வயது, வளர்ச்சி, விருத்தி, மொழி, திறன், விருப்பம், சமயப்பற்று மற்றும் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான அடிப்படைத்திறன்கள் என்பனவற்றில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நடைமுறை வாழ்வுச் செயற்பாடுகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களின் ஊடாக கற்றல் பேறுகளை அடைவதற்கு ஏற்ப பொருத்தமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்வி ஆரம்பக்கல்வியில் சைவப் பிள்ளைகளின் சமய உணர்வுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சைவசமயத்தின் மீது நம்பிக்கையையும் அதனால் கிடைக்கும் ஆன்மீக விருத்தியையும் பெறக்கூடியதாக அமைவதுடன் இறைவனின் படைப்பால் கிடைக்கக்கூடிய அனைத்து இயற்கை வளங்களையும் பாதுகாத்தல், உயிர்களிடத்தில் அன்பு காட்டல் போன்றவற்றைச் சமயவழிபாட்டில் வழக்கப்படுத்திக் கொண்டு சிறந்த பிரஜையாக வாழுதல் தொடர்பாக இப்பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவரின் நல்வாழ்வுக்கு முன்மாதிரியாக அமையும் வகையில் சைவசமய வாழ்வைக் கட்டியெழுப்புதல் ஆசிரியரின் கடமையாகும். கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் நேர அட்டவணையை ஒழுங்காகப் பயன்படுத்தினால் சகல மாணவர்களுக்கும் கற்றல் சூழல் சிறப்பாக அமைவதற்கு வழிகாட்டப்படுகின்றது.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

ஆரம்ப வகுப்புகளில் சைவநெறிப் பாடம் கற்பித்தலில் சிறு பிள்ளைகளின் விருப்பத்திற்கு அமைவான சமய வாழ்வு சார்ந்த செயற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். இறைவனால் அருளப்பட்ட இயற்கையின் கொடையான அழகிய இந்த உலகத்தையும் அதில் வாழும் உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல், அதனைப் பாதுகாத்தல், பராமரித்தல் போன்ற செயற்பாடுகளை அனுபவத்திற்கு ஏற்றவாறு திட்டமிடுதல் அவசியமாகும். அதே போன்று சைவசமயத்தின் பண்பாட்டினை விருத்தியடையச் செய்யும் செயற்பாடுகளான ஆலயத்திற்குச் செல்லுதல், இறைவழிபாடுகளில் ஈடுபடுதல், சமயச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்றவை செயற்பாட்டு ரீதியாக மாணவர்களிடத்தில் பல்வேறுப்பட்ட திறன்களை விருத்தி செய்ய உதவுகின்றன. புராணக்கதைகள், இறைவனின் இயல்புகள், நாயன்மார்களின் வாழ்வியல் நற்பண்புகள் போன்றவைகளும் நம் வாழ்வுக்கு முன்னுதாரணமாக அமையப்பெறுகின்றன.

இவை தொடர்பாகப் பாடுதல், நடித்தல், சித்திரம் வரைதல், குழுச்செயற்பாட்டில் ஈடுபடுதல், ஆக்கச்செயற்பாடுகளில் ஈடுபடுதல், இணைந்து செயற்படுதல், கலப்புக்கற்றல் மற்றும் தொழிநுட்ப ஒன்றிணைப்பு போன்றவற்றில் மாணவர்கள் ஈடுபடுவதில் அவதானம் செலுத்த வேண்டும். அப்போது கற்றல், கற்பித்தல் செயற்பாடானது இரசனையானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் சிறந்த அனுபவத்தைப் பெறக்கூடியதாகவும் தன் யதார்த்த வாழ்வின் நல்ல ஒழுக்கவியலைக் கடைபிடிக்கக் கூடியதாகவும் அமைவதுடன் மாணவர்களிடத்தில் சைவநெறிப் பாடத்தைக் கற்கும் ஆர்வத்தை உருவாகக்கூடியதாகவும் காணப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## பாடசாலை கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்கள்

பாடசாலை கலாசாரம் மற்றும் வேலைத் திட்டங்களில் சைவ பாடநெறிக்குப் பொருத்தமான எண்ணக்கருக்களைக் கட்டியெழுப்புவதில் புதிய ஆக்கம் குறித்து அதிபர்கள் விசேட அவதானம் செலுத்துதல் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆரம்பப் பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் சமய வேலைத்திட்டங்களில் இவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இந்த வேலைத்திட்டத்தில் தரம் 1 இல் எளிமையாக ஆரம்பித்து தரம் 5 வரை படிப்படியாக முன்னேற்றம் அடையச் செய்தல் விரும்பத்தக்கது. இதனால் மாணவர்கள் பல துறைகளிலும் பல்வேறுபட்டத் திறன்களை விருத்தியடைய செய்வதே இதன் அடித்தளமாக அமைகின்றது.

ஆசிரியர் வாரத்துக்கு ஒருமுறை மாணவரை ஆலயத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும். ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாடுகள் மூலமாக மாணவரில் ஆன்மீக தன்மை உருவாகும். இந்தச் செயற்பாடுகளினால் மாணவர்களிடத்தில் ஆன்மீக வளர்ச்சி ஏற்படுகின்றது. சிறந்ததொரு சமூக உருவாக்கத்திற்கும் இது ஒரு காரணியாக அமையும். தனிநபரின் தூய்மை கருணை, இரக்கம், சமத்துவம், நட்பு, ஒத்துழைப்பு. நேர்மை, சகிப்புத்தன்மை, ஒருமைப்பாடு போன்ற நற்பண்புகளினால் பாடசாலை கலசாரம் சிறப்படையும். அவ்வாறான கலாசாரத்தில் சமயம் மற்றும் ஒழுக்கவியல் பாடத்தில் எதிர்பார்க்கும் அத்தியாவசியக் கற்பித்தல் எண்ணக்கரு உறுதிப்படுதல் எளிதாகும். இவ்வாறான நிலைப்பாடு ஏற்படும் வேளையில் பாடத்தில் கற்றவைகள் அனைத்தும் நடைமுறை வாழ்வில் பயன்படுத்தும் தேவை உருவாகும்.

ஆரம்பப்பிரிவு மாணவர்களிடத்திலிருந்தே சிறந்த சமூகமொன்றினைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டினை ஆரம்பித்தல் வேண்டும். இச்செயற்பாடுகளை ஆரம்பித்து, பாரிய பங்களிப்பினைச் செய்யவிருக்கும் அதிஷ்டசாலியான ஆசிரியர்கள் நீங்களே ஆவீர்கள். ஆகவே, உங்களால் வழங்கப்படுகின்ற ஒத்துழைப்பினைப் பெரிதும் மதிக்கின்றோம்.

## கணிப்பீடு செய்தல்

கற்கும்போது தமது மாணவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளை, வெளிக்காட்டும் திறமைகள் பற்றிய பூரண விளக்கத்தை, ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். அப்போதுதான் ஆரம்பத் தரங்களில் கற்கும் மாணவர்களுக்காகப் பயனுறுதியுள்ள கற்றல் அனுபவங்களை ஒழுங்கு செய்யும் திறனைப் பெற முடியும். வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களுக்கும், பொருந்தும் வகையில் கற்றல் அனுபவங்களை ஒழுங்கு செய்ய இது வழிகோலும். இந்தப் பரந்த நோக்குடன் வகுப்பறையில் மாணவனது முன்னேற்றம் தொடர்பாக இடையறாது தகவல் சேகரிக்கும் செயன்முறையே கணிப்பீடாகும் எனக் குறிப்பிடலாம்.

மாணவர்களை முதலாம் மாணவர், இரண்டாம் மாணவர் என வரிசைப்படுத்துவதோ, சிறந்த மாணவர் பலவீனமான மாணவர் என வரிசைப்படுத்துவதோ ஆரம்பப்பிரிவில் நடத்தப்படும் கணிப்பீட்டின் நோக்கமல்ல.

ஆரம்பத் தரங்களில் குழுச் செயற்பாடுகள், அவதானிப்புக்கள், ஆராய்தல், களப்பயணங்கள், அபிநயம், நாடகம், பொம்மலாட்டம், கலந்துரையாடல், வாய்மொழி வினாக்கள், படைப்பாற்றல் திறன், இணைந்து செயற்பாடும் திறன், சிக்கல்களைத் தீர்க்கும் திறன் போன்ற மதிப்பீட்டு முறைகளையும் பயன்படுத்துதல் விரும்பத்தக்கது. எழுத்துப் பரீட்சைக்குக் குறைந்த கவனமே செலுத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


## சமயம் மற்றும் ஒழுக்கவியல் பாடத்தின் நோக்கம்

நிலையான சமாதானத்துக்கான விருத்தியைக் கண்முன்னே தோற்றுவிப்பதற்கு வேறுபாடுகளைக் கொண்ட சிந்தனைகளையும், சனநாயகத்தையும், நீதியையும் மதித்து வாழும் பிரஜைகளை உலகத்திற்கு உருவாக்குதல் ஆகும்.

## சமயம் மற்றும் ஒழுக்கவியலைக் கற்பிப்பதன் நோக்கம்

1. நீதி, நேர்மை, ஒழுக்கச் சிந்தனைமிக்க பிரஜையை உருவாக்குதல்.
2. மனித நேயத்தின் அடிப்படையில் பல்வேறு பாரம்பரியப் பழக்கவழக்கங்களையும் வழிபாடுகளையும் மதித்து வாழ்தல்.
3. எமது சூழலில் காணப்படும் வேறுபாடுகளைத் தர்க்கரீதியாக ஏற்று மதித்துச் சமூக சகவாழ்வை மேம்படுத்தல்.
4. பொது வாழ்க்கைப் பண்புகளையும் சமய நம்பிக்கைகளையும் பின்பற்றச் செய்தல்.
5. ஆலயத் தொண்டுகளில் ஈடுபடுவதற்கும் முறைப்படி வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் பயிற்றுவித்தல்.
6. சமூகம் - கலாசாரம் - சுற்றாடல் உணர்வுகளுக்குப் பங்களிப்பு வழங்கி சவால்களில் நேர்மறையாக செயலாற்றுதல்.
7. தோத்திரப் பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுவதற்கு வழிப்படுத்தல்.
8. சமயப்பற்றை விருத்திசெய்து, முன்மாதிரியான சைவப் பிள்ளையாக வாழ்வதற்குப் பயிற்றுவித்தல்.
9. இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களிடத்தே அன்பு காட்டி வாழ்வதற்கும் சுற்றாடலைப் பேணி வாழ்வதற்கும் பயிற்றுவித்தல்.
10. ஏனைய சமயங்களையும் அவற்றின் பண்பாடுகளையும் மதித்து அவர்களுடன் ஒற்றுமையாக வாழும் மனப்பாங்கை ஏற்படுத்தல்.

## சமயம் மற்றும் விழுமியக்கல்வி பாடத்தின் அத்தியாவசிய கற்றல் எண்ணக்கரு



| சமயம் மற்றும் விழுமியக்கல்வியின் பிரதான எண்ணக்கரு | |
|---|---|
| பண்பு விருத்தி | ஆளுமைப்பண்புகள் நிறைந்த உடல் , உள, பௌதீக, செயற்பாடுகள் ஆரோக்கியம் மற்றும் எந்தவொரு சவாலுக்கும் முகம் கொடுக்க கூடிய உயர் நேர் எண்ணங்களை வளர்த்தல். |
| கலாசார நாகரிக மற்றும் சமூக ஒற்றுமை | சமயம் மற்றும் கலாசார வேறுபாடுகளின்றி அனைவருடனும் ஒன்றிணைந்து மற்றும் ஏனையோரை அறிவுபூர்வமாக, நேயத்துடன் ஏற்றுக்கொள்வதோடு மற்றைய சமூக கலாசாரப் பின்னணி தொடர்பாகப் புரிந்துணர்வுடன் செயற்படுகின்ற ஆற்றல். |
| சுற்றாடல் சார்ந்த கரிசனை | வெவ்வேறு சூழலுக்கு ஏற்ப இசைவாக்கம் அடைதலும். தாம் வாழும் சுற்றுச் சூழல் தொடர்பாடல் தகவல்களை தனியாக சேகரிப்பதற்கான திறனை வளர்த்தலும். |
| விழுமியங்களும் ஒழுகலாறும். | சிறப்பான சமூக நடவடிக்கைகளுக்கு அவசியமான ஏற்புடைய சமூகம், கலாசார மற்றும் சமயப் பெறுமானங்கள், கொள்கைகள், நன்னடத்தை, விழுமியங்கள் மற்றும் சமத்துவம் என்றவாறு வாழ்க்கையை அமைத்துகொள்வதாகும். |
| மனநிறை ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு | உள மற்றும் உடல் சமநிலையைக் கடைப்பிடித்து மனச்சோர்வற்ற ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்காக எப்போதும் நல்லெண்ணத்துடன் செயற்படுதல். |

| சமயம் மற்றும் விழுமியக்கல்வியின் பாடத்தில் ஆரம்பக்கல்விக்கான அடிப்படை எண்ணக்கருக்கள் | |
|---|---|
| பண்பு விருத்தி | ஆசிரியர் மற்றும் மூத்தவர்களின் வழிகாட்டுதலின் கீழ் "சமயம்" எனும் எண்ணக்கருவை அறிந்து தமது நடத்தையை சரியாக வடிவமைத்துக் கொள்ளும் எளிய சமய செயற்பாடுகளில் ஈடுபடுவர். |
| கலாசார நாகரிக மற்றும் சமூக ஒற்றுமை | தாம் வாழும் பல்வகைமை சார் சமயச் சூழலில் இடம்பெறுகின்ற சமயம் சார்ந்த விழாக்கள், நடையுடை பாவனைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவை தொடர்பான அனுபவங்களைப் பெற்று கலாசார பல்வகைமை தொடர்பான விளக்கத்துடன் அனைவருடனும் ஒன்றிணைந்து செயற்படுவார். |
| சுற்றாடல் சார்ந்த கரிசனை | வாழ்க்கை என்பது சுற்றுச் சூழலுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமையை சமயத்தின் ஊடாகப் புரிந்துகொண்டு, சூழல் நேயத்துடன் செயலாற்றுவார். |
| விழுமியங்களும் ஒழுகலாறும். | சமயம் சார்ந்து நடைபெறுகின்ற விதிமுறைகள், சட்டதிட்டங்கள், வணக்கமுறைமைகள் மற்றும் பிரயோகிக்கும் விசேட சொல்லாடல்கள் தொடர்பாக புரிந்துணர்வுடன் செயற்படுவார். சமயம் சார்ந்த தலங்களுக்கு ஏற்றவாறு உடையணிதல், சரியான நடத்தையை செயல் ரீதியில் மேற்கொள்வார். |
| மனநிறை ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு | அன்றாட செயற்பாடுகளை உறுதியுடனும் நினைவாற்றலுடனும் செய்வதற்கு பயிற்சி பெற்று, தமது நடவடிக்கைகளைக் கலக்க மின்றி மகிழ்ச்சியாகச் செய்வார். சிறந்த அன்றாட நடத்தைக் கோலத்தை மேற்கொள்வதற்காக சிறந்த ஆரோக்கிய நற்பழக்கங்களைக் கடைப்பிடிப்பார். |

**சைவநெறி**
**தரம் 01**
**முதலாம் தவணை பாடத்திட்டம்**

| **எண்ணக்கரு** | **கற்றற்பேறு** | **உள்ளடக்கம்** | **செயலாற்றுகைத் தர நியமங்கள்** | **கணிப்பீட்டு நியதிகள்** |
|---|---|---|---|---|
| ஒழுகலாறு, விழுமியங்களும் நியமங்களும். | 01. சமய செயற்பாட்டில் ஈடுபடும் போது சரியான வழிபாட்டு முறைகள் மற்றும் விதி முறைகளைக் கைக்கொள்வார். | சைவ சமயத்தவர் ஒருவர் வழிபாட்டு முறையின் போது கவனிக்க வேண்டியவற்றை அறிதல். சமய வழிபாட்டு முறைகளை முறையாக அறிந்து செயற்படுவார். பிள்ளையாரை, வழிபடும் முறையினை அறிந்து அதன் படி செயல்படுதல். | 1.1 சமயச் செயற்பாட்டில் ஈடுபடும் போது சரியான வழிபாட்டு முறைகளில் ஈடுபடுவார். | 1.1.1 இறைவழிபாட்டுக்கு முன் தமது பாதணிகளையும் காலுறைகளையும் அகற்றிக் கைகால்களைச் சுத்தம் செய்வார். |
| | | | 1.2 அடிப்படைச் சமய மரபுகளை அறிந்து கொள்வார். | 1.2.1 தீப ஆராதனையின் போது தலைக்கு மேலே கைகளைக் கூப்பி வணங்குவார். |
| | | | 1.3 முதல் வணக்கத்தக்குரிய பிள்ளையாரை வழிபடும் போது அடிப்படைச் சமய மரபுகளை அறிந்து கொள்வார். | 1.3.1 ''அப்பமுப்பழம்'' எனும் தோத்திரப்பாடலைப் பக்தியுடன் பாடுவார்.<br><br>1.3.2 பிள்ளையாரின் திருவுருவச் சிலை, திருவுருவப்படம் இல்லாதவிடத்து நாம் எவ்வாறு வழிபடலாம் என்பதைக் கூறுவார்.<br><br>1.3.3 மஞ்சள். சந்தனம், சாணம் போன்ற பொருள்களால் பிள்ளையார் பிடித்துக் காட்டுவார்.<br><br>1.3.4 பிள்ளையாரை வணங்கும்போது நெற்றியில் மும்முறைகுட்டி, தோப்புக்கரணம் போட்டு முறையாக வழிபடுவார். |
| பண்புவிருத்தி | 02. சமயத்தைத் தோற்றுவித்தவர் அதற்கு வழிகாட்டிய இறைவன் அவனுடன் தொர்பான சமய நூல்கள் மற்றும் அறநூல்கள், காவியங்கள் என்பவற்றின் | சைவசமயத்தின் மூலக்கடவுள் சிவபெருமான் என்பதை அறிவதுடன் அவரின் இயல்புகளையும் அறிதல். | 2.1 சிவபெருமானின் இயல்புகளைக் கூறுவார். | 2.1.1 சிவபெருமானின் இயல்புகளைக் கூறுவார்.<br><br>2.1.2 சிவபெருமானின் திருவுருவத்தில் உள்ள அம்சங்களைக் கூறுவார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | உதவியுடன் பண்பு விருத்திக்கான விசேட அம்சங்களை இனங்காண்பார். | | 2.2<br>சைவ சமயத்திவர்களின் முழுமுதற் கடவுளை அறிந்து கொள்வார். | 2.2.1<br>சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் யார்? என்பதைக் கூறுவார்.<br><br>2.2.2<br>சிவபெருமானின் திருவுருவப் படதிற்கு மலர் தூவி பக்தியுடன் வணங்குவார். |
| பண்புவிருத்தி | 03. பண்பு விருத்திக்குரிய அடிப்படைச் சமய மரபுகள், சின்னங்களின் உதவியுடன் சமய எண்ணக் கருவை இனங்காண்பார். | சைவசமயத்தின் சிவசின்னங்களில் ஒன்றான விபுதி சிவபெருமானின் அடையாளம் என்பதுடன் விபூதியை முறையாக அணியும் முறையினை அறிந்து கொள்ளல். | 3.1<br>சைவசமயத்தின் அடையாளம் மற்றும் சிவசின்னங்களை வாழ்வில் பயன்படுத்துவார். | 3.1.1<br>விபூதி சிவபெருமானின் சிவ சின்னங்களில் ஒன்று என்பதையும் அது சிவபெருமானின் அடையாளம் என்பதையும் கூறுவார்.<br><br>3.1.2<br>விபூதி தரிக்கும் சந்தர்ப்பங்களைக் கூறுவார்.<br><br>3.1.3<br>விபூதியை முறைப்படி பவ்வியமாகப் பெற்றுக் கொள்வார்.<br><br>3.1.4<br>சிவசிவ என்று கூறி விபூதியைப் பக்தியுடன் அணிவார். |
| பண்புவிருத்தி | 4.0<br>சமயக் கதைகள் ஊடாகப் பண்பு விருத்திக்கான விசேட அம்சங்களை இனங்காண்பார். | எமது கண்கண்ட தெய்வம் பெற்றோர்களே அவர்கள் சொற்படி நடத்தல், ஆசி பெறல், உதவுதல், அன்பாகப் பேணுதல். | 4.1<br>சமயக் கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 4.1.1<br>சமயக் கதைகளில் மாம்பழக் கதையில் வரும் கதாப்பாத் திரங்களை இனங்கண்டு பெயர் கூறுவார்.<br><br>4.1.2<br>பெற்றோரே உலகம் என்ற கதையை சுயமாக கூறுவார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 4.2<br>சமயக் கதைகளிலிருந்து பெறத்தக்க முன்மாதிரிகளைக் கூறுவார். | 4.2.1<br>பெற்றோரே உலகம் என்னும் கதையை பாத்திரமேற்று குழுவாக இணைந்து நாடகமாக, நடித்து காட்டுவார்.<br><br>4.2.2<br>பெற்றோரை வணங்குவோம், என்ற பாடலை தாளத்துடன் பாடுவார். |
| ஒழுகலாறு, விழுமியங்களும் நியமங்களும். | 5.0<br>சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான வழிபாட்டு முறைகள், விதிமுறைகளை வெளிப்படுத்துவார். | சைவ சமயத்தவர்கள் கடைபிடிக்க வேண்டிய நாளாந்த வீட்டுச் சமயக் கடமைகள், அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் என்பவற்றை விளங்கிச் சிறந்த சைவசமயப் பிள்ளையாக செயல்படுதல். | 5.1<br>சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது சரியான வழிபாட்டு முறைகளில் ஈடுபடுவார். | 5.1.1<br>வீட்டில் தாம் அன்றாடம் கடைபிடிக்க வேண்டிய சமயச் செயற்பாடுகளை எடுத்துக் கூறுவார்.<br><br>5.1.2<br>வீட்டு வழிபட்டின் போது முறையான வழிபாட்டினை மேற்கொள்வார். |
| | | | 5.2<br>சைவசமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான விதிமுறைகளைப் பின்பற்றுவார். | 5.2.1<br>தாம் செய்யும் நாளாந்த கடமைகளைக் கூறுவார்.<br><br>5.2.2<br>தாம் செய்யும் நாளாந்தக் கடமைகளைப் போலச்செய்துக் காட்டுவார். |
| சுற்றாடல் தொடர்பான கரிசனை | 6.0<br>சமய வாழ்வில் இயற்கையின் பெறுமதிகளை உணர்ந்து அவற்றிற்கு மதிப்பளித்து செயற்படுவார். | நாம் வாழும் சுற்றுச் சூழலை நேசிப்பதுடன் அதில் வாழும் ஏனைய உயிரினங் -களையும் நேசித்து அவை வாழ்வதற்கு ஏற்ற சூழலை அமைத்துக் கொடுத்தல். | 6.1<br>கதைகள் பாடல்கள் உதவியுடன் இயற்கையின் பெறுமதியை அறிவார். | 6.1.1<br>இயற்கையின் பெறுமதியினைக் கூறுவார்.<br><br>6.1.2<br>வீட்டு வழிபட்டின் போது முறையான வழிபாட்டினை மேற்கொள்வார். |
| | | | 6.2<br>சூழல் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவார். | 6.2.1<br>இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகளைக் கூறுவார். |
| | | | 6.3<br>உயிர்களில் அன்பு செலுத்துவார். | 6.3.1<br>உயிர்கள் மீது அன்பு செலுத்துவது தொடர்பான தமது கருத்துக்களை வாய்மொழி மூலம் முன்வைப்பார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 6.4<br>உயிர்களுக்கு உணவும், நீரும் வழங்குவார். | 6.4.1.<br>உயிர்களுக்கு உணவளிப்பதற்குப் பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்யும் வழிமுறைகளைக் கூறுவார்.<br><br>6.4.2<br>ஒற்றுமையுடன் குழுவாகச் சேர்ந்து உயிர்களுக்கு உணவளிப்பதற்கு பொருத்தமான இடத்தை அமைத்துக்கொள்வார்.<br><br>6.4.3<br>உயிர்களுக்கு உணவும் நீரும் வழங்குவார். |
| கலாசாரம் நாகரிகம் மற்றும் சமூக கலாசார உணர்வு | 7.0<br>சமய மற்றும் கலாசார வைபவங்களில் பங்கேற்று அனுபவம் பெறுவார். | சைவ சமயத்தின் வைபவங்களில் தைப்பொங்கல் பண்டிகை | 7.1<br>விசேட சமய வைபவங்களில் செயல் ரீதியாகப் பங்கேற்பார். | 7.1.1<br>விசேட சமய வைபவங்களில் தைப்பொங்கல் பண்டிகைக் கொண்டாட்டத்தின் நோக்கத்தை கூறுவார்.<br><br>7.1.2<br>தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடுவதற்குத் தேவையான பொருள்களை முன்வைப்பார். |
| | | | 7.2<br>விசேட கலாசார வைபவத்தை முன்மாதிரியாகக் கொள்வார். | 7.2.1<br>பாடசாலையில் இடம்பெறும் தைப்பொங்கல் பண்டிகையில் செயற்பாட்டு ரீதியாக பங்கேற்பார்.<br><br>• கோலம் போடுதல்<br>• தோரணம் கட்டுதல்<br>• மாலை கட்டுதல் |
| சிரத்தை சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு | 8.0<br>நாளாந்தச் செயற்பாடு களில் சிரத்தையுடன் ஈடுபடுவார் | தமது நாளாந்த வாழ்வில் ஒவ்வொரு செயலிலும் சிரத்தையுடன் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படைப் பழக்கங்களைப் பயிற்றுவிப்பதுடன் சிரத்தையுடன் அவதானமாக | 8.1<br>நடந்து செல்லும் போது கவனச் சிதைவின்றி நடப்பார். | 8.1.1<br>தாம் நடக்கும் போது கவனத்துடன் நடப்பார். |
| | | | 8.2<br>நடக்கும் போது பாதத்தில் உணரும் | 8.2.1<br>நடக்கும் போது தனது பாதத்தில் உணரும்<br>- கரடு முரடு<br>- மென்மை<br>- ஈரமான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடக்கக்கூடியவறு சிறிய வயதிலிருந்து ஈடுபடுவதற்கு ஆயத்தம் செய்தல் | - கரடு முரடு, மென்மை<br>- ஈரமான<br>- காய்ந்த<br>- சூடான<br>- குளிர்ந்த<br>தன்மைகளை உணர்ந்து நடப்பார் | - காய்ந்த<br>- சூடான<br>- குளிர்ந்த<br>தன்மைகளை உணர்ந்து கூறுவார்.<br><br>8.2.2<br>சரியான கொண்ணிலையில் நடப்பார். |

# உள்ளடக்கம்

| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| 01. | சிவபெருமான் | 01 - 03 |
| 02. | பிள்ளையாரை வணங்குவோம் | 04 - 08 |
| 03. | விபூதி அணிவோம் | 09 - 11 |
| 04. | பெற்றோரே உலகம் | 12 - 15 |
| 05. | சமய வாழ்வு | 16 - 17 |
| 06. | உயிர்களுக்கு இரங்குவோம் | 18 - 21 |
| 07. | தைப்பொங்கல் | 22 – 24 |
| 08. | சின்னஞ் சிறிய மனதின் சிரத்தை | 25 - 27 |

**எண்ணக்கரு : பண்புவிருத்தி**

**அலகு 01 : சிவபெருமான்**

## அறிமுகம்

சைவ சமயத்தவர்களின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதையும் சிவபெருமானின் இயல்புகளையும் அறிமுகஞ் செய்வதுடன் முறையாக வணங்கச் செய்வது இப்பாடத்தின் நோக்கம்.

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 02. சமயத்தைத் தோற்றுவித்தவர் அதற்கு வழிகாட்டிய இறைவன் அவனுடன் தொர்பான சமய நூல்கள் மற்றும் அறநூல்கள், காவியங்கள் என்பவற்றின் உதவியுடன் பண்புவிருத்திக்கான விசேட அம்சங்களை இனங்காண்பார். | சைவ சமயத்தின் மூலக்கடவுள் சிவபெருமான் என்பதை அறிவதுடன் அவரின் இயல்புகளையும் அறிதல். | 2.1 சிவபெருமானின் இயல்புகளைக் கூறுவார். | 2.1.1 சிவபெருமானின் இயல்புகளைக் கூறுவார்.<br><br>2.1.2 சிவபெருமானின் திருவுருவத்தில் உள்ள அம்சங்களைக் கூறுவார். |
| | | 2.2 சைவ சமயத்திவர்களின் முழுமுதற் கடவுளை அறிந்து கொள்வார். | 2.2.1 சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் யார்? என்பதைக் கூறுவார்.<br><br>2.2.2 சிவபெருமானின் திருவுருவப்படதிற்கு மலர் தூவி பக்தியுடன் வணங்குவார். |

### கற்றல் வளங்கள்

- சிவபெருமானின் முழுமையான திருவுருவப்படம்,
- பூக்கள்
- சிவபெருமானின் திருவுருவத்தைச் சித்திரிக்கும் காணொளி

### கற்றல் கற்பித்தல் அணுகுமுறை
**செயற்பாடு 1**
**படிமுறை 1**

- சிவபெருமானின் திருவுருவப்படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- சிவபெருமான், சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் என்பதை விளக்குங்கள். சிவபெருமானின் திருவுருவத்தில் உள்ள அம்சங்கள் குறித்து மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- பிறைச்சந்திரன்,
- கங்கை,
- புலித்தோலாடை,
- பாம்பு,
- உடுக்கை,
- சூலாயுதம்.



- சிவபெருமானின் இயல்புகள் தொடர்பாக விளக்கமளியுங்கள்.
    - எங்கும் நிறைந்தவர்
    - உயிர்களுக்கு இரங்குபவர்
- சிவபெருமானைத் தினமும் வணங்கவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

**படிமுறை 2**

- மாணவர்கள் பூக்கள் கொண்டுவர வேண்டும் என்பதைக் குறித்த தினத்திற்கு முதல் நாளிலேயே அறிவுறுத்துங்கள்.
- பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் துய்மையான இடத்தில் சிவபெருமானின் திருவுருவப் படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- மலர்தூவி வணங்குவதற்கேற்ற வகையில் ஒழுங்கமைத்துக் கொள்ளுங்கள்.
- மாணவர்கள் பாதணி, காலுறைகளை அகற்றிச் சுத்தம் செய்வதற்கு வழிகாட்டுங்கள்.
- சிவபெருமானின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி வணங்குவதற்கு சகல மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

## செயற்பாடு 2

**படிமுறை 1**

- செயல் நூலில் உள்ள சிவபெருமான் பாடத்திலுள்ள படங்களை மாணவர்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- சிவபெருமான் பாடத்திலுள்ள ஒவ்வொரு வாக்கியத்தையும் தனித்தனியாக உரத்து வாசித்துக் காட்டுங்கள்.
- வாக்கியங்களை மாணவர்கள் தெளிவாகவும் சரியாகவும் கூறுவதற்குப் பயிற்சியளியுங்கள்.

**படிமுறை 2**

- செயல்நூலிலுள்ள சிவபெருமான் திருவுருவப்படத்துடன் அவரது அடையாளங்களைப் பொருத்தமாக இணைப்பதற்கு வழிகாட்டுங்கள்.

**கவனத்திற்கொள்ளவேண்டியது:-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| கணிப்பீட்டு நியதிகள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | | பாண்டித்திய மட்டத்தை அண்மித்துள்ளார். |
|---|---|---|---|---|
| | | நிலை 03 | நிலை 02 | நிலை 01 |
| சிவபெருமானின் இயல்புகளைக் கூறுவார். | 1.1.1 | சிவபெருமானின் இயல்புகள் மூன்றினைக் கூறுவார். | சிவபெருமானின் இயல்புகள் இரண்டினைக் கூறுவார். | சிவபெருமானின் இயல்புகள் ஒன்றையேனும் கூறுவார். அல்லது கூறுவதற்கு இடர்படுவார். |
| சிவபெருமானின் தோற்றப் பொலிவினைக் கூறுவார். | 1.1.2 | சிவபெருமானின் தோற்றப் பொலிவில் உள்ளடங்கும் மூன்று அம்சங்களைக் கூறுவார். | சிவபெருமானின் தோற்றப் பொலிவில் உள்ளடங்கும் இரண்டு அம்சங்களைக் கூறுவார். | சிவபெருமானின் தோற்றப் பொலிவில் உள்ளடங்கும் அம்சங்களைக் கூற இடர்படுவார். |
| சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் யார் என்பதைக் கூறுவார். | 1.2.1 | சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் யார் என்பதைக் கூறுவார். | சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் யார் என்பதை மற்றவர் உதவியுடன் கூறுவார். | சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் யார் என்பதைக் கூறுவதற்கு இடர்படுவார். |
| சிவபெருமானின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி பக்தியுடன் வணங்குவார். | 1.2.2 | சிவபெருமானின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி பக்தியுடன் வணங்குவார். | சிவபெருமானின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி வணங்குவார். | சிவபெருமானின் திருவுருவப்படத்தினை வணங்குவதில் இடர்படுவார். |

## வாழ்நாள் பிரயோகத்திற்காக

தினமும் சிவபெருமானைப் பக்தியுடன் வணங்குதல்.

தினமும் முறையாக சிவனை நினைத்து சிவசின்னங்களை அணிதல்

**எண்ணக்கரு - ஒழுகலாறு, விழுமியங்களும் நியமங்களும்**
**அலகு 02 - பிள்ளையாரை வணங்குவோம்.**

## அறிமுகம்

**பிள்ளையாரின் திருவுருவத் தோற்றத்தை அறிமுகம் செய்வதும், முதல் வணக்கத்திற்குரியவர் பிள்ளையார் என்பதை விளங்கிக்கொள்வதோடு அவரை வணங்கும் முறையைப் பழக்கப்படுத்தி அதனை வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.**

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| **01.** சமய செயற்பாட்டில் ஈடுபடும் போது சரியான வழிபாட்டு முறைகள் மற்றும் விதிமுறைகளைக் கைக்கொள்வார். | சைவ சமயத்தவர் ஒருவர் வழிபாட்டு முறையின் போது கவனிக்க வேண்டியவற்றை அறிதல். | **2.1** சமயச் செயற்பாட்டில் ஈடுபடும் போது சரியான வழிபாட்டு முறைகளில் ஈடுபடுவார். | **2.1.1** இறைவழிபாட்டுக்கு முன் தமது பாதணிகளையும் காலுறைகளையும் அகற்றிக் கைகால்களைச் சுத்தம் செய்வார். |
| | சமய வழிபாட்டு முறைகளை முறையாக அறிந்து செயற்படுவார். | **2.2** அடிப்படைச் சமய மரபுகளை அறிந்து கொள்வார். | **2.2.1** தீபஆராதனையின் போது தலைக்கு மேலே கைகளைக் கூப்பி வணங்குவார். |
| | பிள்ளையாரை வழிபடும் முறையினை அறிந்து அதன் படி செயல்படுதல். | **2.3** முதல் வணக்கத்தக்குரிய பிள்ளையாரை வழிபடும் போது அடிப்படைச் சமய மரபுகளை அறிந்து கொள்வார். | **2.3.1** "**அப்பமுப்பழம்**" எனும் தோத்திரப்பாடலைப் பக்தியுடன் பாடுவார்.<br><br>**2.3.2** பிள்ளையாரின் திருவுருவச் சிலை, திருவுருவப்படம் இல்லாதவிடத்து நாம் எவ்வாறு வழிபடலாம் என்பதைக் கூறுவார்.<br><br>**2.3.3** மஞ்சள். சந்தனம், சாணம் போன்ற பொருள்களால் பிள்ளையார் பிடித்துக் காட்டுவார்.<br><br>**2.3.4** பிள்ளையாரை வணங்கும்போது நெற்றியில் மும்முறைகுட்டி, தோப்புக்கரணம் போட்டு முறையாக வழிபடுவார். |

**கற்றல் வளங்கள்**

- பிள்ளையார் படம் அல்லது பிள்ளையாரின் சிறிய திருவுருவச்சிலை
- பூக்கள், சுத்தமான நீர், அகல் விளக்கு, திரி, எண்ணெய், கற்பூரம், ஊதுபத்தி, சிறிய கற்பூரத் தட்டு
- தோப்புக்கரணம் போட்டு குட்டிக்கும்பிடுவதைக் காட்டும் படங்கள்
- மஞ்சள், சந்தனம், சாணம், அறுகம்புல் (தனது சூழலுக்கு ஏற்ற பொருட்கள்)

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**


**செயற்பாடு 1**

**படிமுறை 1**

- வகுப்பறையில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்குப் பொருத்தமான இடத்தைத் தயார் செய்து கொள்ளுங்கள்.
- பிள்ளையார் திருவுருவப்படத்தை அல்லது திருவுருவச் சிலையை அங்கு காட்சிப்படுத்துங்கள்.
- பாதணிகள், காலுறைகளை அகற்றி, கைகளையும் கால்களையும் கழுவிச் சுத்தம் செய்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- இறைவழிபாட்டிற்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துங்கள்.
- விளக்கைத் தயார் செய்து தீபம் ஏற்றுங்கள்.
- ஊதுபத்தி ஏற்றுங்கள்.
- பூக்களைச் சாத்தி வழிபாடு செய்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கற்பூர தீபத்தினால் தீப ஆராதனை செய்யுங்கள்.
- தீப ஆராதனையின் போது மாணவர்கள் தலைக்கு மேலே கைகளைக் கூப்பி வணங்குவதற்கு வழிப்படுத்துங்கள்.
- செயல்நூலில் இச்செயற்பாடு தொடர்பான படத்தை அவதானிக்கச் செய்வதுடன் பாடத்தை வாசித்துக்காட்டித் தெளிவு படுத்துங்கள்.

**படிமுறை 2**

- செயல்நூலில் தரப்பட்டுள்ள பிள்ளையார் திருவுருவப்படத்தை அறிமுகஞ் செய்யுங்கள்.
- பிள்ளைகளிடம் சிறு வினாக்களை வினாவிக் கலந்துரையாடுங்கள்.
  - ஆனை முகத்துடன் கூடியிருப்பதால் அவர் ஆனைமுகன் என்று அழைக்கப்படுகின்றமை.
    (ஐந்து கரங்கள் - தும்பிக்கை, செவி, பெரிய வயிறு)
  - கரம் ஒன்றில் மோதகம் வைத்திருத்தல்.
  - பிள்ளையாருக்கு மோதகம், கொழுக்கட்டை என்பற்றைப் படைத்தல்
  - அவரின் வாகனம் எலி என்பன தொடர்பாக எடுத்துக் கூறுங்கள்.
- பிள்ளையாரை வணங்கும் முறையினை மாணவர்களுடன் இணைந்து செயல்படுத்துங்கள்.
  - கைகளை முஷ்டியாகப் பிடித்தவாறு நெற்றியில் மூன்று முறை குட்டுதல்.
  - இடக்காதின் முற்பகுதியை (சோணை) வலது கைப் பெருவிரல் தொடுமாறும், வலது காதின் முற்பகுதியை இடதுகைப் பெருவிரல் தொடுமாறும் பிடித்தவாறு முழு மண்டியில் மூன்றுமுறை இருந்து எழும்பியவாறு தோப்புக்கரணம் போடுதல்.




- பிள்ளைகள் குழுவாக இணைந்து நெற்றியில் மூன்று முறை குட்டி, தோப்புக்கரணம் போடுவதற்குப் பயிற்சியளியுங்கள்.
- ஒவ்வொரு பிள்ளையையும் தனித்தனியாகச் இச்செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு வழிப்படுத்துங்கள்.

- எப்போதும் பிள்ளையாரை வழிபடும்போது நெற்றியில் மூன்றுமுறை குட்டி, தோப்புக்கரணம் போட்டு வழிபடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- தோப்புக்கரணம் போடுதல் தொடர்பாக யேல் பல்கலைக்கழகத்தை சேர்ந்த நரம்பியல் நிபுணரான டாக்டர் யூஜினியஸ் அங் என்பவர் தோப்புக்கரணம் போடுதலின் பயன்கள் பற்றி விஞ்ஞான ஆய்வுகளினூடாக நிரூபிக்கின்றார்.

**தோப்புக்கரணம் போடுதலின் பயன்கள்**

- கல்வித் திறனை மேம்படுத்துதல்.
- தேர்வு மன அழுத்தத்தைக் குறைத்தல்
- உடல் தெம்பு மற்றும் ஆரோக்கியம்.
- உடல் எடைக்கட்டுப்பாடு (ரத்த ஓட்டம், கண்பார்வை விருத்தி)
- ஆற்றல் மற்றும் ஒருங்கிணைப்பு
- தொழில்நுட்பச் சாதனங்களில் இருந்து மீளுதல்.
- பாரம்பரிய அறிவு மற்றும் அறிவியல் இணைப்பு (செயல் மூலம் கற்றல்) (Learning by Doing)

**தினம் 05 - 10 நிமிடங்கள் காலைப்பொழுதில் 09, 11, 13 போன்ற எண்ணிக்கைகளில் தோப்புக்கரணம் போடுதல் பலனைத்தரும்.**

தோப்புக்கரணம் போடும் முறை

**படிமுறை 3**

- செயல்நூலில் தரப்பட்டுள்ள "அப்பம் முப்பழம் .." எனும் தோத்திரப் பாடலைப் பாடிக்காட்டுங்கள்.
- மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- ஆசிரியர் ஒவ்வொரு பாடலடியாகப் பாடும்போது, மாணவர்களையும் ஒவ்வொரு பாடல் அடியையும் செவிமடுத்துப் பாடச் செய்யுங்கள்.
- பாடல் அடிகள் மாணவர்களுக்கு நன்கு பரிச்சயமானதும் ஆசிரியருடன் சேர்ந்து மாணவர்களைப் பாடச் செய்யுங்கள்.
- பின்னர் மாணவர் ஒவ்வொருவரையும் தனித்தனியாகப் பாடச் செய்யுங்கள்.
- வழிபாட்டின்போது மாணவர்கள் அனைவரும் இணைந்து பக்தியோடு பாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.

**அப்பம் முப்பழம் தேவாரம்**

## செயற்பாடு 2

**படிமுறை 1**

- பிள்ளையார் திருவுருவப்படம், திருவுருவச்சிலை இல்லாதவிடத்துப் பிள்ளையாரை எண்ணி வணங்கும் முகமாக மஞ்சள், சாணம், சந்தனம், முதலான பொருள்களைக் கொண்டு பிள்ளையார் பிடித்து அதன் மேல் அறுகம்புல் வைத்து வழிபடலாம் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- மஞ்சள், சந்தனம், சாணம் முதலான பொருள்களினால் பிடிக்கப்பட்ட பிள்ளையார் உருக்களை அல்லது படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- மஞ்சள், சந்தனம், சாணம் போன்ற பொருள்களால் பிள்ளையார் பிடித்துக் காட்டுங்கள்.

- பிடிக்கப்பட்ட பிள்ளையார் மீது அறுகம்புல்லை வைத்துக் காட்டுங்கள்.
    - அறுகம்புல் குளிர்ச்சியானது.
    - பிள்ளையார் விரும்பும் புல் என்பதை மாணவர்களுக்குக் கூறுங்கள்.
    - அறுகம்புல்லின் பயன்கள் பற்றியும் மாணவர்களுக்குத் தெளிவுப்படுத்துங்கள்.
- மாணவர்கள் குழுக்களாக இணைந்து பிள்ளையார் பிடித்துப் பழகுவதற்கு உதவுங்கள்.
- ஒவ்வொரு பிள்ளையும் இச்செயற்பாட்டில் பங்குபற்றுவதை உறுதிப்படுத்துங்கள்.
- செயல்நூலில் இது தொடர்பாகத் தரப்பட்டுள்ள பாடப்பகுதியைத் தெளிவுப்படுத்திச் செயற்பாட்டினைச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 3

### படிமுறை 1

- மாணவர்கள் தமது பயிற்சிக் கொப்பியில் அகல்விளக்கு ஒன்றை வரைந்து நிறந்தீட்ட வழிப்படுத்துங்கள்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது :-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **க.இ** | **பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார்** | | **பாண்டித்திய மட்டத்தை அண்மித்துள்ளார்.** |
|---|---|---|---|---|
| | | **நிலை 03** | **நிலை 02** | **நிலை 01** |
| வழிபாட்டிற்கு முன் பாதணிகள் காலுறைகளை அகற்றி, கைகால்களைச் சுத்தம் செய்வார். | 2.1.1 | வழிபாட்டிற்கு முன் பாதணிகள் காலுறைகளை அகற்றி, கைகால்களைச் சுத்தம் செய்வார். | வழிபாட்டிற்கு முன் மற்றவர்களின் உதவியுடன் பாதணிகள் காலுறைகளை அகற்றி, கைகால்களைச் சுத்தம் செய்வார். | வழிபாட்டிற்கு முன் பாதணிகள் காலுறைகளை அகற்றி, கைகால்களைச் சுத்தம் செய்வதற்கு இடர்படுவார். |
| தீப ஆராதனையின்போது தலைக்கு மேலே கைகளைக் கூப்பி வணங்குவார். | 2.2.1 | தீப ஆராதனையின் போது சுயமாகவே ஒழுங்கு முறையில் தலைக்கு மேலே கைகளைக் கூப்பி வணங்குவார். | தீப ஆராதனையின் போது தலைக்கு மேலே கைகளைக் கூப்பி வணங்குவார். | தீபஆராதனையின் போது தலைக்கு மேலே கைகளைக் கூப்பி வணங்குவதில் இடர்படுவார். |
| “அப்பம் முப்பழம்” எனும் தோத்திரப்பாடலைப் பக்தியுடன் பாடுவார். | 2.3.1. | “அப்பம் முப்பழம்” எனும் தோத்திரப்பாடலைப் பக்தியுடன் மனனம் செய்து பாடுவார். | “அப்பம் முப்பழம்” எனும் தோத்திரப்பாடலைப் பக்தியுடன் ஓரிரு பிழைகளுடன் மனனம் செய்து பாடுவார். | “அப்பம் முப்பழம்” எனும் தோத்திரப்பாடலைப் மனனம் செய்து பாடுவதில் இடர்படுவார். |
| பிள்ளையாரை வணங்கும்போது நெற்றியில் மும்முறை குட்டி, தோப்புக்கரணம் | **2.3.2** | பிள்ளையாரை வணங்கும் போது நெற்றியில் மும்முறை குட்டி, தோப்புக்கரணம் | பிள்ளையாரை வணங்கும்போது மற்றவர்களின் உதவியுடன் நெற்றியில் மும்முறைகுட்டி, | பிள்ளையாரை வணங்கும்போது நெற்றியில் மும்முறைகுட்டி, முறையாகத் தோப்புக்கரணம் |

| | | | | |
|---|---|---|---|---|
| போட்டு முறையாக வழிபடுவார். | | போட்டு முறையாக வழிபடுவார். | தோப்புக்கரணம் போட்டு வழிபடுவார். | போடுவதில் இடர்படுவார். |
| பிள்ளையாரின் திருவுருவச்சிலை, திருவுருவப்படம் இல்லாதவிடத்து எவ்வாறு பிள்ளையாரை வழிபடலாம் என்பதைக் கூறுவார். | 2.3.3 | பிள்ளையாரின் திருவுருவச்சிலை, திருவுருவப்படம் இல்லாதவிடத்து எவ்வாறு பிள்ளையாரை வழிபடலாம் என்பதைப் பற்றி மூன்று விடயங்களேனும் கூறுவார். | பிள்ளையாரின் திருவுருவச்சிலை, திருவுருவப்படம் இல்லாதவிடத்து எவ்வாறு பிள்ளையாரை வழிபடலாம் என்பதைக் பற்றி இரண்டு விடயங்களேனும் கூறுவார். | பிள்ளையாரின் திருவுருவச்சிலை, திருவுருவப்படம் இல்லாதவிடத்து எவ்வாறு பிள்ளையாரை வழிபடலாம் என்பதைக் பற்றி ஒன்றை ஏனும் கூறுவார். அல்லது இடர்படுவார். |
| மஞ்சள், சந்தனம், சாணம் போன்ற பொருள்களால் பிள்ளையார் பிடித்துக் காட்டுவார். (தனது சூழலுக்கு ஏற்றவாறு.) | 2.3.4 | முறையாகப் பிள்ளையார் பிடித்து அறுகம்புல்லை வைத்துக் காட்டுவார். | பிள்ளையார் பிடித்துக் காட்டுவார். | பிள்ளையார் பிடிப்பதில் இடர்படுவார். |

**வாழ்நாள் பிரயோகத்திற்காக**

- சமய வழிபாட்டின்போது சுத்தம் பேணுதல்.
- இறை வணக்கத்தின்போது அமைதி பேணுதல்.
- பிள்ளையாரை வணங்கும்போது நெற்றியில் மும்முறை குட்டித் தோப்புக்கரணம் போட்டு வழிபடும் வழக்கத்தைக் கடைப்பிடித்தல்.
- வழிபாட்டின்போது தோத்திரப்பாடலைப் பக்தியுடன் பாடுதல்.
- உரிய சந்தர்ப்பங்களில் பிள்ளையார் பிடித்து வழிபடுதல்.
  (போன்ற செயற்பாடுகளை தினம் தினம் கடைப்பிடித்தல்.)

## அறுகம்புல்லின் சிறப்புக் கதை

**எண்ணக்கரு : பண்புவிருத்தி**
**அலகு 03 : விபூதி அணிவோம்.**

## அறிமுகம்

சிவசின்னங்களில் ஒன்றான விபூதி சிவபெருமானின் அடையாளம் என்பதையும் விபூதியைப் பெற்றுக்கொள்ளும் முறையையும் அதனை அணியும் முறையையும் தெளிவுபடுத்தி அதனைப் பழக்கப்படுத்துவதே இப்பாடத்தின் நோக்கம்.

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 03. பண்புவிருத்திக்குரிய அடிப்படைச் சமய மரபுகள், சின்னங்களின் உதவியுடன் சமய எண்ணக்கருவை இனங்காண்பார். | சைவசமயத்தின் சிவசின்னங்களில் ஒன்றான விபுதி சிவபெருமானின் அடையாளம் என்பதுடன் விபூதியை முறையாக அணியும் முறையினை அறிந்துக்கொள்ளல். | 3.1 சைவசமயத்தின் அடையாளம் மற்றும் சிவசின்னங்களை வாழ்வில் பயன்படுத்துவார். | 3.1.1 விபூதி சிவபெருமானின் சிவசின்னங்களில் ஒன்று என்பதையும் அது சிவபெருமானின் அடையாளம் என்பதையும் கூறுவார். |
| | | | 3.1.2 விபூதி தரிக்கும் சந்தர்ப்பங்களைக் கூறுவார். |
| | | | 3.1.3 விபூதியை முறைப்படி பவ்வியமாகப் பெற்றுக்கொள்வார். |
| | | | 3.1.4 சிவசிவ என்று கூறி விபூதியை பக்தியுடன் அணிவார். |

### கற்றல் வளங்கள்

- சிவபெருமானின் திருவுருவப்படம்
- விபூதி (சம்புடத்தில் இடப்பட்டவாறு)
- விபூதி அணிந்தவர் படம்
- விபூதியைப் பெற்றுக்கொள்ளும் முறையைக் காட்டும் படம்,
- விபூதி தரிக்கும் படம்

### கற்றல் கற்பித்தல் அணுகுமுறை

### செயற்பாடு 1

**படிமுறை 1**

- சிவபெருமானின் திருவுருவப்படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- சைவசமயத்தவர்களின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதை மீளவலியுறுத்துங்கள்.
- விபூதி சிவபெருமானின் அடையாளம் என்பதை விளக்குங்கள்
- ஆசிரியர் சம்புடத்தில் இடப்பட்ட விபூதியைக் காட்சிப்படுத்துங்கள்
- விபூதியின் முக்கியத்துவம் குறித்துக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்
  - விபூதி சிவ சின்னங்களுள் ஒன்று என்பது
  - விபூதி சைவசமயத்தவர்களின் அடையாளம் என்பது
  - விபூதியைத் தினமும் காலையிலும் மாலையிலும் அணிதல் வேண்டுமென்பது
  - விபூதியை எவ்வாறு அணிதல் வேண்டுமென்பது

**படிமுறை 2**

- விபூதியை முறைப்படி பூசும் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு மாணவர்களைத் தயார்படுத்துங்கள்.
- பாதணிகள் காலுறைகளைக் கழற்றி, கைகளைச் சுத்தம் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- செயல்நூலிலுள்ள விபூதி அணியும் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- விபூதி அணியும் சந்தர்ப்பங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
  - காலையில்
  - மாலையில்
  - நித்திரை செய்வதற்கு முன்
  - விசேட சந்தர்ப்பங்கள், விழாக்கள்
  - பெரியோர்களிடம் ஆசி பெறும்போது

**படிமுறை 3**

- மாணவர்களை அரைவட்டவடிவில் நிற்கச் செய்யுங்கள்.
- விபூதியைப் பெற்றுக்கொள்ளும்போது இடதுகையின் மீது வலதுகையை மேல் நோக்கியவாறு குவித்து வைத்திருப்பதற்கும் பௌவியமாக நிற்பதற்கும் பயிற்சியளியுங்கள்.
- ஆசிரியர் விபூதியைத் தரித்துக்காட்டுங்கள்.

  விபூதி தரிக்கும் முறைகள்
    - உத்தூளணம் (அனைவரும் தரிக்கும் முறையாகும்.)
    - திரிபுண்டரம் (தீட்சை பெற்றவர்கள் தரிக்கும் முறையாகும்.)

- விபூதி நிலத்தில் சிந்தாதபடி அண்ணாந்து பார்த்தவாறு ‘சிவ சிவ’ என்று கூறியபடி வலக்கையின் நடு மூன்று விரல்களாலும் நெற்றியின் மத்தியில் விபூதியைப் பரவிப் பூசிக் காட்டுங்கள்.
- மாணவர் ஒவ்வொருவராக விபூதியை முறைப்படி பெற்றுக்கொள்வதற்கும் தரித்துக் காட்டுவதற்கும் வாய்ப்பளியுங்கள்.
- பிள்ளைகள் தினமும் பாடசாலைக்கு வரும்போது முறைப்படி விபூதி அணிந்து வரவேண்டும் என்பதையும் அது எம்மைப் பாதுகாக்கும் என்பதையும் மாணவர் மனதில் பதியும் வண்ணம் வலியுறுத்திக் கூறுங்கள்.

**படிமுறை 4**

- செயல்நூலில் உள்ள பிள்ளைகள் விபூதி அணிந்திருக்கும் படத்தை மாணவர்கள் அவதானிக்கச் செய்யுங்கள்.
- ‘**காலையும் மாலையும் பக்தியுடன் விபூதி அணிவோம்**’ என்னும் வாக்கியத்தை ஆசிரியர் சரியாக உரத்து வாசித்துக்காட்டுங்கள்.
- அவ்வாக்கியத்தை மாணவர்களையும் மீண்டும் மீண்டும் கூறச் செய்யுங்கள்.
- விபூதி அணியும் சந்தர்ப்பங்களை மாணவர்கள் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- விபூதி அணிவதால் ஏற்படும் பயன்கள் பற்றிக் கூறுங்கள்.

- புனிதத்தன்மை
- தீயசக்திகளிடமிருந்து பாதுகாப்பு
- மனஅமைதி
- நல் அறிவு
  பாவங்கள் நீங்குதல்
- நீர்வற்றுதல்
- நிலையாமையை உணர்த்துதல்

**கவனத்திற்கொள்ள வேண்டியது:-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **க.இ** | **பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார்** | | **பாண்டித்திய மட்டத்தை அண்மித்துள்ளார்.** |
|---|---|---|---|---|
| | | **நிலை 03** | **நிலை 02** | **நிலை 01** |
| விபூதி சிவபெருமானின் சிவசின்னங்களில் ஒன்று என்பதையும் அது சிவபெருமானின் அடையாளம் என்பதையும் கூறுவார். | 3.1.1 | விபூதி சிவபெருமானின் சிவசின்னங்களில் ஒன்று என்பதையும் அது சிவபெருமானின் அடையாளம் என்பதையும் கூறுவார். | விபூதி சிவபெருமானின் சிவசின்னங்களில் ஒன்று என்பதைக் கூறுவார். | விபூதி சிவபெருமானின் சிவசின்னங்களில் ஒன்று என்பதைக் கூற இடர்படுவார். |
| விபூதி தரிக்கும் சந்தர்ப்பங்களைக் கூறுவார். | 3.1.2 | விபூதி தரிக்கும் சந்தர்ப்பங்கள் நான்கினைக் கூறுவார். | விபூதி தரிக்கும் சந்தர்ப்பங்கள் மூன்று அல்லது இரண்டினைக் கூறுவார். | விபூதி தரிக்கும் சந்தர்ப்பம் ஒன்றினைக் கூறுவார் அல்லது கூற இடர்படுவார். |
| விபூதியை முறைப்படி பவ்வியமாகப் பெற்றுக்கொள்வார். | 3.1.3 | விபூதியை முறைப்படி பவ்வியமாகப் பெற்றுக்கொள்வார். | விபூதியை மற்றவர் உதவியுடன் பவ்வியமாகப் பெற்றுக்கொள்வார். | விபூதியை பெற்றுக்கொள்வதில் இடர்படுவார். |
| சிவசிவ என்றுக் கூறி விபூதியை பக்தியுடன் அணிவார். | 3.1.4 | சிவசிவ என்றுக் கூறி விபூதியை பக்தியுடன் அணிவார். | விபூதியை அணிவார். | விபூதியை அணிவதில் இடர்படுவார். |

## வாழ்நாள் பிரயோகத்திற்காக

சுயசுத்தம் பேணி முறைப்படி பக்தியுடன் விபூதி அணிதல்.

**எண்ணக்கரு : பண்பு விருத்தி**
**அலகு 04 : பெற்றோரே உலகம்**

## அறிமுகம்

"பெற்றோரே உலகம்" என்னும் மாம்பழக்கதையினூடாக பெற்றோரே எமது கண்கண்ட தெய்வம் என்பதைத் தெளிவுபடுத்தி, பிள்ளைகள் தினமும் பெற்றோரை வணங்கி ஆசி பெறவேண்டும் என்பதை வலியுறுத்துதல் இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 4.0 சமயக் கதைகள் ஊடாகப் பண்பு விருத்திக்கான விசேட அம்சங்களை இனங்காண்பார். | எமது கண்கண்ட தெய்வம் பெற்றோர்களே அவர்கள் சொல்படி நடத்தல், ஆசி பெறல், உதவுதல், அன்பாக பேணுதல். | 4.1 சமயக் கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 4.1.1 சமயக்கதைகளில் மாம்பழக் கதையில் வரும் கதாப்பாத்திரங்களை இனங்கண்டு பெயர் கூறுவார்.<br><br>4.1.2 பெற்றோரே உலகம் கதையை சுயமாகக் கூறுவார். |
| | | 4.2 சமயக் கதைகளிலிருந்து பெறத்தக்க முன்மாதிரிகளைக் கூறுவார். | 4.2.1 பெற்றோரே உலகம் என்னும் கதையை பாத்திரமேற்று குழுவாக இணைந்து நாடகமாக, நடித்து காட்டுவார்.<br><br>4.2.2 பெற்றோரை வணங்குவோம், என்ற பாடலை தாளத்துடன் பாடுவார். |

**கற்றல் வளங்கள்**

- "பெற்றோரே உலகம்" கதையின் காட்சிகளைச் சித்திரிக்கும் காட்சிப் படங்கள் (பிரதிகளுடன்)
- பெற்றோரைப் பிள்ளைகள் வணங்கும் படம்
- பெற்றோரே உலகம் (மாம்பழக்கதை) காணொளி

## கற்றல் கற்பித்தல் அணுகுமுறை
### செயற்பாடு 1
**படிமுறை 1**

- வகுப்பறையில் பெற்றோரே உலகம் கதையின் காட்சிகளைச் சித்திரிக்கும் காட்சிப் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- காட்சிப் படங்களில் காணப்படும் சிவபெருமான், உமாதேவியார், பிள்ளையார் முருகன் போன்றோரின் திருவுருவங்களைக் காட்டி அறிமுகப்படுத்துங்கள்.
- சிவபெருமானின் சக்தி உமாதேவியார் என்பதையும் பிள்ளையாரும் முருகனும் அவர்களின் திருக்குமாரர்கள் என்பதையும் தெளிவுபடுத்துங்கள்.

- மாணவர்களுக்கு ‘பெற்றோரே உலகம்’ கதைப்படங்களைக் காட்டி இரசனையுடனும் மெய்ப்பாடுகளுடனும் கதையைக் கூறுங்கள்.
- மாணவர்கள் கதையை இரசனையுடன் அவதானமாகச் செவிமடுப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

**கதை - சுருக்கம்**

- ‘திருக்கைலாய மலையில் சிவபெருமானும் உமாதேவியாரும் பிள்ளையார் ,முருகனுடன் வீற்றிருக்கும் வேளையில் நாரதர் மாம்பழம் ஒன்றைக் கொண்டு வந்து சிவபெருமானிடம் கொடுத்தார். பிள்ளையாரும் முருகனும் தத்தமக்கே மாம்பழம் வேண்டுமென்று போட்டி போட்டார்கள். இருப்பது ஒரு மாம்பழம் மட்டுமே. இரண்டு பிள்ளைகளில் இதை யாருக்குக் கொடுப்பது…? என்று சிவபெருமான் சிந்தித்தார். பின்னர் ‘**உலகை முதலில் சுற்றி வருபவருக்கே பழம் கிடைக்கும்’** என உரைத்தார். இதைக்கேட்ட முருகப்பெருமான் மகிழ்ச்சியுடன் மயில் மீதேறி உலகைச் சுற்றிவரப் புறப்பட்டார். பிள்ளையார் யோசித்தார். **“அம்மை, அப்பரே உலகம்”** என்று எண்ணி சிவபெருமானையும் உமாதேவியாரையும் வலம் வந்து மாம்பழத்தைப் பெற்றுக்கொண்டார்.’

- மாணவர்கள் கதையை நன்கு செவிமடுத்துக் கிரகித்துள்ளார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சிறு சிறு வினாக்களை வினாவுங்கள்.
- கலந்துரையாடல் மூலம் கதையிலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டிய முன்மாதிரியை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.
  - ‘பெற்றோரே உலகம்’. ஆகவே பெற்றோரை எப்போதும் மதித்துப் போற்ற வேண்டும் என்பது

**படிமுறை 2**

- பெற்றோரே உலகம் என்ற கதையை மாணவர்கள் நாடகமாக நடிப்பதற்கு உகந்த முறையில் கதையையும் வகுப்பறைச் சூழலையும் தயார் செய்துகொள்ளுங்கள்.
- கதையில் வரும் ஒவ்வொரு பாத்திரத்தினதும் இயல்பை மாணவர்களுக்கு முதலில் தெளிவுபடுத்துங்கள்.
- ஆசிரியர் ஒவ்வொரு பாத்திரத்தையும் பாத்திரமேற்று உரிய மெய்ப்பாடுகளுடன் நடித்துக்காட்டுங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- பின்னர் ஒவ்வொரு குழுவையும் மாம்பழக்கதையை நடித்துக்காட்டுவதற்குப் பயிற்சியளியுங்கள்.
- வகுப்பறையில் ஒவ்வொரு குழுவும் நடித்துக்காட்டுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவரும் பங்கேற்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்
  - பாத்திரங்கள் - சிவபெருமான், உமாதேவியார், பிள்ளையார், முருகன், நாரதர் இப்பாத்திரங்கள் தவிர பூதகணங்களாகவும் சாமரை வீசுவோராகவும் பங்கேற்று நடிப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கலாம்.(மாணவர் எண்ணிக்கைக்கேற்றவாறு)
- குழுவிலுள்ள சகல மாணவர்களுக்கும் பாத்திரங்களை மாற்றி மாற்றி நடிப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்
- ‘பெற்றோரே உலகம்’ என்ற கதையை மாணவர்கள் நாடகமாக நடித்த பின்னர் அவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்துங்கள்.

## செயற்பாடு 2

**படிமுறை 1**

- மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப, கதைக்கான காட்சிப்படங்களின் பிரதிகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.
- மாணவர்கள் குழுவாக இணைந்து காட்சிப்படங்களைப் பார்த்து கதையைக் கூறிப் பழகுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் கதையைத் தமது மொழிநடையில் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் கதையைத் தாமாக முன்வந்து கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் அனைவரும் கதையைக் கூறி முடித்ததும் அவர்களைப் பாராட்டுங்கள்.

**படிமுறை 2**

- செயல்நூலில் ஒழுங்கற்ற முறையில் தரப்பட்டுள்ள கதையின் காட்சிப்படங்களை ஒழுங்குபடுத்தி கதைகூற வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 3

**படிமுறை 1**

- பிள்ளைகள் பெற்றோரை வணங்குவதுபோன்ற படத்தினைக் காட்சிப்படுத்துங்கள்.
- வீட்டில் பிள்ளைகள் தம் பெற்றோரை வணங்குவது பற்றிக் கலந்துரையாடல் மூலம் கேட்டறியுங்கள்.
- பெற்றோரை வணங்குவதன் முக்கியத்துவத்தைப் பிள்ளைகளுக்கு விளக்குங்கள்.
- ‘பெற்றோரே உலகம்’ கதையின் படிப்பினையை மீளவலியுறுத்துங்கள்.
- பெற்றோரை விழுந்து வணங்கும் முறையைச் செய்துகாட்டுவதற்குப் பிள்ளைகளை ஆயத்தப்படுத்துங்கள்.
- வகுப்பிலுள்ள பிள்ளைகள் அனைவரும் இச்செயற்பாட்டில் ஈடுபடுவதை உறுதிப்படுத்துங்கள்.
- தினமும் காலையிலும் நித்திரைக்குச் செல்வதற்கு முன்னரும் பெற்றோரை வணங்க வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

**படிமுறை 2**

- செயல்நூலில் தரப்பட்டுள்ள ‘அம்மா அப்பா எங்கள் உலகம்’ என்ற பாடலை ஆசிரியர் பாடிக் காட்டுங்கள். (பொருத்தமான மெட்டில்)
- பாடலில் கூறப்படும் கருத்துத் தொடர்பாக வினாக்களை வினாவிப் பாடலின் கருத்தைத் தெளிவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு அடிகளையும் மாணவர்களைக் கொண்டு பாடச்செய்யுங்கள்.
- பாடல் அடிகள் நன்கு பரிச்சயமானதும் பாடலை முழுமையாக மாணவர்கள் பாட வழிப்படுத்துங்கள்.

**படிமுறை 3**

- **‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்’** என்னும் கொன்றைவேந்தன் அடியைத் தெளிவாக உச்சரித்துக் காட்டுங்கள்.
- அவ்வடியைச் சரியாக உச்சரித்துப்பழகுவதற்கு மாணவர்களுக்குப் பயிற்சியளியுங்கள்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது:-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| கணிப்பீட்டு நியதிகள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | | பாண்டித்திய மட்டத்தை அண்மித்துள்ளார். | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 04 | நிலை 03 | நிலை 02 | நிலை 01 |
| சமயக்கதைகளில் மாம்பழக் கதையில் வரும் கதாபாத்திரங் களை இனங்கண்டு பெயர் கூறுவார். | 4.1.1 | கதையில் வரும் கதாபாத்திரங் களை இனங்கண்டு பொருள் கூறுவார். | கதையில் வரும் மூன்று கதாபாத்திரங் களையாவது கூறுவார். | கதையில் வரும் இரண்டு கதாபாத்திரங் களையாவது கூறுவார். | கதையில் வரும் கதாபாத்திரத்தை இனங்கண்டு கூற இடர்படுவார். |
| ''பெற்றோரே உலகம்'' என்ற கதையைச் சுயமாக கூறுவார். | 4.1.2 | ''பெற்றோரே உலகம்'' என்ற கதையை சுயமாகக் கூறுவார். | ''பெற்றோரே உலகம்'' என்ற கதையில் ஓரிரு இடர்களுடன் கூறுவார். | ''பெற்றோரே உலகம்'' என்ற கதையை ஓரளவு இடர்பாட்டுடன் கூறுவார். | ''பெற்றோரே உலகம்'' என்ற கதையைக் கூற இடர்படுவார். |
| பெற்றோரே உலகம் என்னும் கதையைப் பாத்திரமேற்றுக் குழுவாக இணைந்து நாடகமாக, நடித்துக் காட்டுவார். | 4.2.1 | கதையினை பாத்திரமேற்று சிறப்பாக நடித்துக் காட்டுவார். | கதையினை பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார். | கதையினை மற்றவர்கள் உதவியுடன் பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார். | கதையினை பாத்திரமேற்று நடித்துக் காட்ட இடர்படுவார். |
| பெற்றோரை வணங்குவோம், என்ற பாடலை தாளத்துடன் பாடுவார். | 4.2.1 | பாடலைச் சிறப்புற பாடிக் காட்டுவார். | பாடலைப் பாடுவார். | பாடலை ஏனையோர் உதவியுடன் பாடுவார். | பாடலைப் பாட இடர்படுவார். |

**வாழ்நாள் பிரயோகம்**

- பெற்றோரை மதித்துத் தினமும் வணங்குதல்.

**எண்ணக்கரு : ஒழுகலாறு, விழுமியங்களும் நியமங்களும்.**

**அலகு 05 : சமய வாழ்வு**

## அறிமுகம்

சைவசமயத்தவர்கள் கடைபிடிக்க வேண்டிய நாளாந்த சமயக்கடமைகள் பற்றியும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் விளங்கிச் சிறந்த சைவசமயப் பிள்ளையாக ஒழுகும் பண்பை விருத்தி செய்வது இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 5.0<br>சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான வழிபாட்டு முறைகள், விதிமுறைகளை வெளிப்படுத்துவார். | சைவசமயத்தவர்கள் கடைபிடிக்க வேண்டிய நாளாந்த வீட்டுச் சமயக் கடமைகள், அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் என்பவற்றை விளங்கிச் சிறந்த சைவசமயப் பிள்ளையாக செயல்படுதல். | 5.1<br>சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது சரியான வழிபாட்டு முறைகளில் ஈடுபடுவார். | 5.1.1<br>வீட்டில் தாம் அன்றாடம் கடைபிடிக்க வேண்டிய சமயச் செயற்பாடுகளை எடுத்துக்கூறுவார்.<br><br>5.1.2<br>வீட்டு வழிபட்டின் போது முறையான வழிபாட்டினை மேற்கொள்வார். |
| | | 5.2<br>சைவசமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான விதிமுறைகளைப் பின்பற்றுவார். | 5.2.1<br>தாம் செய்யும் நாளாந்த சமயக் கடமைகளைக் கூறுவார்.<br><br>5.2.2<br>தாம் செய்யும் நாளாந்த சமயக் கடமைகளைப் போலச்செய்துக் காட்டுவார். |

### கற்றல் வளங்கள்

- சித்திரப்படங்கள் / ஒளிப்படங்கள்
- காணொளிகள்
- வாசகங்கள்

### கற்றல் கற்பித்தல் அணுகுமுறை

### செயற்பாடு 1

### படிமுறை 1

- நாளாந்த சமயக்கடமைகளை, வீட்டின் வழிபாட்டிடங்களைச் சித்திரிக்கும் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- வீட்டில் காலை முதல் மாலை வரை மாணவர் ஒவ்வொருவரும் செய்கின்ற சமயக் கடமைகள் பற்றிக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.
  - அதிகாலையில் எழும்புதல்.

- முகம் கழுவுதல், நீராடுதல்
- விபூதி அணிதல்
- விளக்கேற்றுதல்
- சுவாமியின் திருவுருவப்படங்களுக்குப் பூக்கள் வைத்தல்
- தோத்திரம் பாடி வழிபடுதல்.

- வீட்டில் நாம் சமயக்கடமைகளைச் செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குங்கள்
- இவை சமய மரபுகள் என்பதையும் இவற்றை நாள்தோறும் கடைபிடிக்க வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துங்கள்.

படிமுறை 2

- செயல்நூலிலுள்ள படங்களை அவதானிக்கச் செய்யுங்கள்
- படங்களுக்கான வாக்கியங்களை உரத்துத் தெளிவாக வாசித்து காட்டுங்கள்
- மாணவர்களையும் கூறச்செய்யுங்கள்.
- செயல்நூலில் தரப்பட்டுள்ள சமயக் கடமைகளை ஒழுங்கு முறையில் இலக்கமிடச் செய்யுங்கள்.
- நாளாந்த சமயக் கடமைகளைப் போலச் செய்து காட்டுவதற்கு வழிப்படுத்துதல்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது:-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **க.இ** | **பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார்** | | **பாண்டித்திய மட்டத்தை அண்மித்துள்ளார்.** |
|---|---|---|---|---|
| | | **நிலை 03** | **நிலை 02** | **நிலை 01** |
| வீட்டில் தாம் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய சமயச் செயற்பாடுகளை எடுத்துக்கூறுவார். | **5.1.1** | நாம் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய சமயச் செயற்பாடுகள் நான்கினைக் கூறுவார். | நாம் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய சமயச் செயற்பாடுகள் மூன்றினைக் கூறுவார். | நாம் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய சமயச் செயற்பாடுகள் ஒன்றையேனும் கூறுவார். அல்லது கூற இடர்படுவார். |
| வீட்டு வழிபாட்டின் போது முறையான வழிபாட்டினை மேற்கொள்வார். | **5.1.2** | வீட்டு வழிபாட்டின் போது முறையான வழிபாட்டினை மேற்கொள்வார். | வீட்டு வழிபாட்டின் போது பெற்றோர் உதவியுடன் வழிபட்டை மேற்கொள்வார். | வீட்டு வழிபாட்டின் போது முறையான வழிபட்டை மேற்கொள்ள இடர்படுவார். |
| தாம் செய்யும் நாளாந்த கடமைகளைக் கூறுவார். | **5.2.1** | தாம் செய்யும் நாளாந்த கடமைகள் நான்கினைக் கூறுவார். | தாம் செய்யும் நாளாந்த கடமைகள் மூன்றினைக் கூறுவார். | தாம் செய்யும் நாளாந்த கடமைகள் ஒன்றையேனும் கூறுவார் அல்லது கூற இடர்படுவார். |
| தாம் செய்யும் நாளாந்தக் கடமைகளைப் போலச்செய்துக் காட்டுவார். | **5.2.2** | தாம் செய்யும் நாளாந்த சமயக் கடமைகள் மூன்றினைப் போலச்செய்துக் காட்டுவார். | தாம் செய்யும் நாளாந்த சமயக் கடமைகள் இரண்டினைப் போலச்செய்துக் காட்டுவார். | தாம் செய்யும் நாளாந்த சமயக் கடமைகள் ஒன்றினைப் போலச்செய்துக் காட்டுவார். அல்லது செய்துக்காட்ட இடர்படுவார். |

**வாழ்நாள் பிரயோகம்**
வீட்டில் நாளாந்த சமயக்கடமைகளில் முறையாக ஈடுபடுதல்.

**எண்ணக்கரு : சுற்றாடல் தொடர்பான கரிசனை**

**அலகு 06 : உயிர்களுக்கு இரங்குவோம்**

## அறிமுகம்

**நாம் வாழும் சுற்றுச் சூழலை நேசிப்பதுடன் அதில் வாழும் ஏனைய உயிரினங்களையும் நேசித்து அவை வாழ்வதற்கு ஏற்ற சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதே இப்பாடத்தின் நோக்கமாகும்.**

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 6.0 சமய வாழ்வில் இயற்கையின் பெறுமதிகளை உணர்ந்து அவற்றிற்கு மதிப்பளித்து செயற்படுவார். | நாம் வாழும் சுற்றுச் சூழலை நேசிப்பதுடன் அதில் வாழும் ஏனைய உயிரினங்களையும் நேசித்து அவை வாழ்வதற்கு ஏற்ற சூழலை அமைத்துக் கொடுத்தல். | 6.1 கதைகள் பாடல்கள் உதவியுடன் இயற்கையின் பெறுமதியை அறிவார். | 6.1.1 இயற்கையின் பெறுமதியினைக் கூறுவார். |
| | | 6.2 சூழல் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவார். | 6.2.1 இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகளைக் கூறுவார். |
| | | 6.3 உயிர்களில் அன்பு செலுத்துவார். | 6.3.1 உயிர்கள் மீது அன்பு செலுத்துவது தொடர்பான தமது கருத்துகளை வாய்மொழி மூலம் முன்வைப்பார். |
| | | 6.4 உயிர்களுக்கு உணவும், நீரும் வழங்குவார். | 6.4.1. உயிர்களுக்கு உணவளிப்பதற்குப் பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்யும் வழிமுறைகளைக் கூறுவார். |
| | | | 6.4.2 ஒற்றுமையுடன் குழுவாகச் சேர்ந்து உணவளிப்பதற்கு இடத்தை அமைத்துக்கொள்வார். |
| | | | 6.4.3 உயிர்களுக்கு உணவும் நீரும் வழங்குவார். |

### கற்றல் வளங்கள்

- பிராணிகள்மீது அன்பு செலுத்துவதைக் காட்டும் காட்சிப்படங்கள்
- பிராணிகள்மீது அன்பு செலுத்துவதைக் காட்டும் காணொளிகள்
- குருவிப் பலகை, உணவுத்தட்டுத் தயாரிப்பதற்கு வேண்டிய பொருள்கள்
- சித்திரம் வரைவதற்கான பொருட்கள்
- பொருத்தமான உணவுத்தட்டொன்றின் படம்.

## கற்றல் கற்பித்தல் அணுகுமுறை

செயற்பாடு 1

**படிமுறை 1**

- தினந்தோறும் வீட்டுச் சூழலுக்கு வரும் உயிரினங்கள் எவை என்பதைக் கேட்டறியுங்கள்.
- அவ்வுயிரினங்கள் உணவைப் பெறும் வழிமுறைகள், அவற்றின் நடத்தைகள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- வகுப்பறைக்கு வெளியே மாணவர்களை அழைத்துச் செல்லுங்கள்.
- பாடசாலைத் தோட்டத்திற்கு வருகின்ற உயிரினங்கள் பற்றி வினவி அவற்றின் நடத்தைகளை அவதானிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள் (வகுப்பறைக்கு வெளியே மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பாகக் கவனம் செலுத்திக்கொள்ளுங்கள்)
- அவ்வுயிரினங்கள் எவ்வாறு உணவைத் தேடிக் கொள்கின்றன என்பது பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**படிமுறை 2**

- செயல்நூலில் தரப்பட்டுள்ள பாடலைக் காட்சிப்படுத்துங்கள்.
- அதை ஒவ்வோரடியாக உச்சரித்து வாசித்துக்காட்டுங்கள்.
- பாடலை மாணவர்கள் விளங்கிக்கொள்ளும் பொருட்டுப் பாடல் தொடர்பாக மாணவர்களிடம் சிறு வினாக்களை வினவி, அவர்களின் கருத்துக்களைக் கேட்டறியுங்கள்.
- பொருத்தமான எளிய மெட்டில் பாடலை ஒருமுறை பாடிக்காட்டுங்கள்.
- ஆசிரியர் ஒவ்வோரடியாகப் பாடி மாணவர்களையும் பாடச்செய்யுங்கள்.
- ஆசிரியருடன் சேர்ந்து பாடலைப் பாட வழிப்படுத்துங்கள்.
- பிராணிகள் மீது அன்பு செலுத்தும் காட்சிப்படங்களைப் பார்த்துக் கருத்துக்களைக் கூறுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பாடலில் குறிப்பிட்டவாறு பறவைகளுக்கும் அணில் போன்ற பிராணிகளுக்கும் உணவளிப்பதற்கான இடமொன்றைத் தயார் செய்வதற்கு விரும்புகிறீர்களா என மாணவர்களிடம் வினவி அவர்களின் கருத்துக்களை கேட்டறியுங்கள்.

**படிமுறை 3**

- உயிர்கள் மீது நாம் ஏன் இரக்கம் காட்ட வேண்டும் என்று மாணவரிடம் வினாவுங்கள்.
- எமது சமயம் வலியுறுத்தும் கீழ்த்தரப்பட்டுள்ள இரு கருத்துக்களையும் மாணவர் மனதில் பதியும் படி வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - அனைத்து உயிரினங்களிடத்திலும் இறைவன் இருக்கிறான்.
    - அனைத்துயிர்கள் மீதும் அன்பு செலுத்த வேண்டும்.
    - உணவும் நீரும் கொடுத்து ஆதரிக்க வேண்டும் என்பவை தொடர்பாகக் கலந்துரையாட வேண்டும்.
- பிராணிகள் மீது அன்பு செலுத்துவது தொடர்பான சமயக் கதைகள், நீதிக்கதைகளைத் தெரிவு செய்து மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- அதேபோல் மாணவர்களுக்கும் தாம் அறிந்த கதைகளைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

## செயற்பாடு 2

**படிமுறை 1**

- பிராணிகளுக்கான உணவுப்பலகையைத் தயார் செய்வதற்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்யுங்கள்.
- தெரிவு செய்யப்பட்ட இடத்தில் பொருத்தமான உணவுத்தட்டொன்றை அமைத்துக் கொள்ளுங்கள்.
- மாணவர்களையும் இச்செயற்பாட்டில் பங்கேற்கச் செய்யுங்கள்.

- பிராணிகள் நீரருந்துவதற்கான பாத்திரமொன்றையும் பொருத்தமான முறையில் அமைத்துக் கொள்ளுங்கள்.

**எடுத்துக்காட்டாக கீழே சில படங்கள் தரப்பட்டுள்ளன.**





- உணவு வேளையின்போது உண்பதற்கு முன் அவ்வுணவில் ஒரு பகுதியைப் பிராணிகளின் உணவுத் தட்டிலிடுவதற்கு மாணவர்களைப் பழக்கப்படுத்துங்கள். (உணவுத்தட்டில் உணவைச் சிந்தாத வகையில் போடுவதற்கு உரிய முறையில் அதனை தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்)
- பிராணிகள் உணவருந்தும் வேளையில் அவற்றிற்குத் தடையில்லாத வகையில் அவற்றை அவதானிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- நாள் தோறும் நீரருந்துவதற்காகச் சுத்தமான நீரை அப்பாத்திரத்தில் இடுவதற்கு அறிவுறுத்துங்கள்.
- தினந்தோறும் பிராணிகளின் உணவுத்தட்டு, நீர்ப்பாத்திரத்தைச் சுத்தம் செய்வதற்கும் அவ்விடத்தைச் சுற்றி அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருப்பதற்கும் மாணவர்களை வழிப்படுத்துங்கள். (இச்செயற்பாட்டின் பின் சுகாதார முறைப்படி மாணவர்கள் கைகளைக் கழுவுவதற்கு வழிப்படுத்துங்கள்)
- வீட்டிலும் இது போன்ற உணவுத்தட்டும் நீரும் வைத்து பிராணிகள்மீது அன்பு செலுத்துவதற்கு ஊக்கப்படுத்துங்கள். உணவளித்த பின் அவ்விடத்தைச் சுத்தம் செய்வது அவசியம் என்பதை உணர்த்துங்கள்.

## செயற்பாடு 3

**படிமுறை 1**

- வெற்றுத்தாளொன்றில் மாணவர் தாம் விரும்பியவாறு பறவைகளின் உணவுத்தட்டொன்றைச் சித்திரமாக வரைவதற்கு வழிப்படுத்துங்கள்.
- வரைந்த சித்திரங்களைக் காட்சிப்படுத்தி உள்ளார்ந்த கருத்துக்களை முன்வைக்க வழிப்படுத்துங்கள்.

**படிமுறை 2**

- செயல்நூலில் இணைப்பில் தரப்பட்டுள்ள பிராணிகளின் படங்களை வெட்டியெடுத்து. தாம் வரைந்த உணவுத்தட்டைச் சுற்றி ஒட்டும் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- செயல்நூலில் தரப்பட்டுள்ள நீர்ப்பாத்திரத்தை அவதானிக்கச் செய்யுங்கள்.
- நீர்ப்பாத்திரத்தில் நீரருந்த வரும் பிராணிகளை வரைவதற்கு சந்தர்ப்பமளியுங்கள்.

**கவனத்திற் கொள்ளவேண்டியது:-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| கணிப்பீட்டு நியதிகள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | | பாண்டித்திய மட்டத்தை அண்மித்துள்ளார். |
|---|---|---|---|---|
| | | நிலை 03 | நிலை 02 | நிலை 01 |
| இயற்கையின் பெறுமதியினைக் கூறுவார். | 6.1.1 | இயற்கையின் பெறுமதிகள் மூன்றினைக் கூறுவார் | இயற்கையின் பெறுமதிகள் இரண்டினைக் கூறுவார். | இயற்கையின் பெறுமதி ஒன்றையேனும் கூறுவார். அல்லது கூற இடர்படுவார். |
| இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகளைக் கூறுவார். | 6.2.1 | இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகள் மூன்றினைக் கூறுவார். | இயற்கை வளங்களைப் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகளில் ஒன்றைக் கூறுவார். | இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகளைக் கூற இடர்படுவார். |
| உயிர்கள் மீது அன்பு செலுத்துவது தொடர்பான தமது கருத்துகளை வாய்மொழி மூலம் முன்வைப்பார். | 6.3.1 | உயிர்கள் மீது அன்பு செலுத்துவது தொடர்பான தமது கருத்துகளை வாய்மொழி மூலம் முன்வைப்பார். | உயிர்கள் மீது அன்பு செலுத்துவது தொடர்பான தமது கருத்துகளை வாய்மொழி மூலம் முன்வைக்க மற்றவர்களின் உதவியுடன் முன்வைப்பார். | உயிர்கள் மீது அன்பு செலுத்துவது தொடர்பான தமது கருத்துக்களை வாய்மொழி மூலம் முன்வைக்க இடர்படுவார். |
| உயிர்களுக்கு உணவளித்தலுக்குப் பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்யும் வழிமுறைகளைக் கூறுவார். | 6.4.1 | உயிர்களுக்கு உணவளித்தலுக்குப் பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்யும் வழிமுறைகள் மூன்றினை கூறுவார். | உயிர்களுக்கு உணவளித்தலுக்குப் பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்யும் வழிமுறைகள் இரண்டினைக் கூறுவார். | உயிர்களுக்கு உணவளித்தலுக்குப் பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்யும் வழிமுறைகளைக் கூற இடர்படுவார். |
| ஒற்றுமையுடன் குழுவாகச் சேர்ந்து உணவளிப்பதற்கு இடத்தை அமைத்துக் கொள்வார். | 6.4.2 | ஒற்றுமையுடன் குழுவாகச் சேர்ந்து உணவளிப்பதற்கு இடத்தை அமைத்துக் கொள்வார். | ஒற்றுமையுடன் குழுவாகச் சேர்ந்து உணவளிப்பதற்கு இடத்தை மற்றவர்களின் உதவியுடன் அமைத்துக் கொள்வார். | ஒற்றுமையுடன் குழுவாகச் சேர்ந்து உணவளிப்பதற்கு இடத்தை அமைத்துக் கொள்வதில் இடர் படுவார். |
| உயிர்களுக்கு உணவும் நீரும் வழங்குவார். | 6.4.3 | உயிர்களுக்கு உணவும் நீரும் வழங்குவார். | மற்றவர்களின் உதவியுடன் உயிர்களுக்கு உணவும் நீரும் வழங்குவார். | உயிர்களுக்கு உணவும் நீரும் வழங்குவதில் இடர்படுவார். |

**வாழ்நாள் பிரயோகம்**

- உயிர்கள் மீது அன்பு செலுத்தி உணவும் நீரும் வழங்குதல்
- பிராணிகள் உணவுண்ணும் இடத்தைச் சுத்தமாக வைத்திருத்தல்
- சுய சுத்தம் பேணுதல்.

**எண்ணக்கரு : கலாசாரம் நாகரிகம் மற்றும் சமூக கலாசார உணர்வு**

**அலகு 07 : தைப்பொங்கல்**

## அறிமுகம்

**சைவசமயத்தவர்களின் பண்டிகைகளுள் தைப்பொங்கல் பிரதானமானது என்பதையும் அதைக் கொண்டாடுவதன் நோக்கத்தையும் அறியச் செய்வதோடு பண்டிகையில் பங்கேற்று அனுபவம் பெற வைப்பதும் இப்பாடத்தின் எதிர்பார்ப்பாகும்.**

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 7.0<br>சமய மற்றும் கலாசார வைபவங்களில் பங்கேற்று அனுபவம் பெறுவார். | சைவ சமயத்தின் வைபவங்களில் தைப்பொங்கல் பண்டிகை | 7.1<br>விசேட சமய வைபவங்களில் செயல் ரீதியாகப் பங்கேற்பார். | 7.1.1<br>விசேட சமய வைபவங்களில் தைப்பொங்கல் பண்டிகைக் கொண்டாட்டத்தின் நோக்கத்தை கூறுவார். |
| | | | 7.1.2<br>தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடுவதற்குத் தேவையான பொருள்களை முன்வைப்பார். |
| | | 7.2<br>விசேட கலாசார வைபவத்தை முன்மாதிரியாகக் கொள்வார். | 7.2.1<br>பாடசாலையில் இடம்பெறும் தைப்பொங்கல் பண்டிகையில் செயற்பாட்டு ரீதியாக பங்கேற்பார்.<br>• கோலம் போடுதல்<br>• மாவிலை தோரணம் கட்டுதல்<br>• மாலை கட்டுதல் |

### கற்றல் வளங்கள்

- தைப்பொங்கல் பண்டிகையைச் சித்திரிக்கும் காட்சிப் படங்கள்
- பொங்கல் நிகழ்வொன்றைச் செய்து காட்டும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்தத் தேவைப்படும் பொருள்கள்.

### கற்றல் கற்பித்தல் அணுகுமுறை

**செயற்பாடு 1**

**படிமுறை 1**

- சைவசமயத்தவர்களின் பண்டிகைகள் தொடர்பாகச் சிறு வினாக்களை வினவி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்
- தைப்பொங்கல் பண்டிகை பற்றி மாணவர்கள் அறிந்துள்ள விடயங்களைக் கேட்டறியுங்கள்
- தைப்பொங்கல் பண்டிகை தொடர்பாக மாணவர் அறிந்திருக்க வேண்டிய விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.
    - தைமாதம் கொண்டாடப்படுவது
    - சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாள்
    - கொண்டாடும் முறை
- தைப்பொங்கல் பண்டிகைக்கு முன்னர் செய்ய வேண்டிய ஆயத்தங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்
- பொங்கல் தினத்தன்று பொங்குவதற்கு முன்னர் செய்யும் ஆயத்தங்கள், வேலைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்
    - மெழுகுதல் (சாணத்தால் மெழுகுதல், தண்ணீர் / மஞ்சள் தெளித்தல்)
    - கோலம் போடுதல்
    - மாவிலை, தோரணம், மாலை கட்டுதல்
    - பொங்கல் பொருள்களை ஆயத்தம் செய்தல்
    - பூரண கும்பம் வைத்தல்

**படிமுறை 2**

- செயல்நூலில் தரப்பட்டுள்ள படங்களை அவதானிக்கச் செய்யுங்கள்
- வாக்கியங்களை தெளிவாகவும் உரத்தும் வாசித்துக் காட்டுங்கள்
- அவ்வாக்கியங்களை மாணவர்களையும் செவிமடுத்துக் கூறச் செய்யுங்கள்
- பாடம் தொடர்பாகத் தரப்பட்டுள்ள செயற்பாடுகளைச் சுயமாகச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- தைப்பொங்கல் பற்றிய பாடலை இசையுடன் பாடிக்காட்டுங்கள்.
- மாணவர்களையும் பாடுவதற்கு வழிப்படுத்துங்கள்

## செயற்பாடு 2

**படிமுறை 1**

- பாடசாலையில் தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் தினத்தன்று கலாசார உடையுடனும் தேவையான பொருள்களுடனும் வரவேண்டும் என்னும் முன்னறிவித்தலை மாணவர்களுக்கு வழங்குங்கள்
- பொருத்தமான தினமொன்றில் மாணவர்கள் பங்கேற்கும் வகையில் தைப்பொங்கல் பண்டிகை ஒன்றைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்
- பொங்கலுக்குத் தேவையான பொருள்களைத் தயார் செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் வழிப்படுத்துங்கள்
- மாணவர்கள் அனைவரும் பங்குபற்றுதலுடன் தைப்பொங்கல் பண்டிகை மாதிரியொன்றை முன்னின்று நிகழ்த்துங்கள்
- பொங்கலைச் சூரியனுக்குப்படைத்து சூரியனுக்கு நன்றி செலுத்துமுகமாக வழிபடும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பொங்கல் பிரசாதத்தை மாணவர் அனைவரும் பகிர்ந்துண்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- பொங்கல் நிகழ்வின் பின்னர் செயல்நூலிலுள்ள தைப்பொங்கல் பாடலை மாணவர்கள் கூட்டாகப் பாடி மகிழ்வதற்கு வழிப்படுத்துங்கள்

**கவனத்திற்கொள்ள வேண்டியது:-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| கணிப்பீட்டு நியதிகள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | | பாண்டித்திய மட்டத்தை அண்மித்துள்ளார். |
|---|---|---|---|---|
| | | நிலை 03 | நிலை 02 | நிலை 01 |
| விசேட சமய வைபவங்களில் தைப்பொங்கல் பண்டிகைக் கொண்டாட்டத்தின் நோக்கத்தைக் கூறுவார். | 7.1.1 | தைப்பொங்கல் கொண்டாடப்படும் நோக்கத்தினைக் கூறுவார். | தைப்பொங்கல், கொண்டாடப்படும் நோக்கத்தின் சிலவற்றைக் கூறுவார். | தைப்பொங்கல் கொண்டாடப்படும் நோக்கத்தினைக் கூற இடர்படுவார். |
| தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடு - வதற்குத் தேவையான பொருள்களை முன்வைப்பார். | 7.1.2 | தைப்பொங்கல் கொண்டாடுவதற்குத் தேவையான பொருட்கள் ஐந்தைச் கூறுவார். | தைப்பொங்கல் கொண்டாடுவதற்குத் தேவையான பொருட்கள் நான்கையேனும் கூறுவார். | தைப்பொங்கல் கொண்டாடுவதற்குத் தேவையான பொருட்கள் இரண்டு அல்லது ஒன்றையேனும் கூறுவார். அனைத்தையும் கூற இடர்படுவார். |
| பாடசாலையில் இடம்பெறும் தைப்பொங்கல் பண்டிகையில் செயற்பாட்டு ரீதியாகப் பங்கேற்பார்.<br>• கோலம் போடுதல்<br>• மாவிலை தோரணம்<br>• மாலை கட்டுதல | 7.1.3 | பாடசாலையில் நடைபெறுகின்ற தைப்பொங்கல் விழாவில் முறையாகவும் நேர்த்தியாகவும் செயற்படுவார். | பாடசாலையில் நடைபெறுகின்ற தைப்பொங்கல் விழாவில் முறையாக செயற்படுவார். | பாடசாலையில் நடைபெறுகின்ற தைப்பொங்கல் விழாவில் முறையாகச் செயற்பட இடர்படுவார். |

## வாழ்நாள் பிரயோகம்

- தைப்பொங்கல் பண்டிகையை முறைப்படி கொண்டாடுதல்.
- சூரியனுக்கு நன்றி செலுத்துதல்.

**எண்ணக்கரு : சிரத்தை சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**

**அலகு 08 : சின்னஞ் சிறிய மனதின் சிரத்தை**

## அறிமுகம்

**நாளாந்த வாழ்வில் ஒவ்வொரு செயலிலும் சிரத்தையுடன் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படைப் பழக்கங்களைப் பயிற்றுவிப்பதன் நிமித்தம் சிரத்தையுடன் அவதானமாக நடக்கக்கூடியவாறு சிறிய வயதிலிருந்து ஈடுபடுவதற்கு ஆயத்தம் செய்தல்**

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 8.0<br>நாளாந்தச் செயற்பாடுகளில் சிரத்தையுடன் ஈடுபடுவார் | தமது நாளாந்த வாழ்வில் ஒவ்வொரு செயலிலும் சிரத்தையுடன் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படைப் பழக்கங்களைப் பயிற்றுவிப்பதுடன் சிரத்தையுடன் அவதானமாக நடக்கக்கூடியவாறு சிறிய வயதிலிருந்து ஈடுபடுவதற்கு ஆயத்தம் செய்தல் | 8.1<br>நடந்து செல்லும் போது கவனச் சிதைவின்றி நடப்பார். | 8.1.1<br>தாம் நடக்கும் போது கவனத்துடன் நடப்பார். |
| | | 8.2<br>நடக்கும் போது பாதத்தில் உணரும் கரடு, முரடு, மென்மை, ஈரமான-காய்ந்த சூடான-குளிர்ந்த தன்மைகளை உணர்ந்து நடப்பார் | 8.2.1<br>நடக்கும் போது தனது பாதத்தில் உணரும் கரடு முரடு, மென்மை, ஈரமான-காய்ந்த சூடான- குளிர்ந்த தன்மைகளை உணர்ந்து கூறுவார். |
| | | | 8.2.2<br>சரியான கொண்ணிலையில் நடப்பார். |

### கற்றல் கற்பித்தல் அணுகுமுறை

செயற்பாடு 1

### படிமுறை 1

- வகுப்பறைக்கு வெளியே தடையின்றி நடக்கக்கூடிய ஓரிடத்திற்கு மாணவர்களை அழைத்துச் செல்லுங்கள்
- தமது பாதணிகளையும் காலுறைகளையும் கழற்றி நேர்த்தியாக ஓரிடத்தில் வைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- தெரிவு செய்யப்பட்ட இடத்தில் ஒவ்வொருவருக்கிடையிலும் போதியளவு இடைவெளி உள்ளவாறு இரு கைகளையும் பின்புறம் வைத்தவாறு நிற்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களிடம் கீழ் குறித்த விடயங்களை வினவுங்கள்
  - நீங்கள் நின்று கொண்டிருக்கின்றீர்கள் என்பதை உணர்கின்றீர்களா?
  - உங்கள் உடம்பின் பாரம் கால்களுக்கு தெரிகின்றதா?
  - நீங்கள் நிற்கும்போது கால்களில் எதை உணர்கின்றீர்கள்?
  - உங்கள் பாதங்கள் நிலத்தில் படும்போது எதனை உணர்கின்றீர்கள்?
  - கரடு முரடாக அல்லது மென்மையாகத் தெரிகின்றதா?
  - குளிர்ச்சி அல்லது வெப்பத்தை உணர்கின்றீர்களா?
  - நீங்கள் நிமிர்ந்து நிற்கின்றீர்கள் என்பதை உணர்கின்றீர்களா?

- நடப்பதற்குத் தெரிவு செய்த இடத்திலிருந்து மெதுவாக அங்குமிங்கும் நடப்பதற்கு வழிப்படுத்துங்கள்
- பின்னர் நடக்கும் வேகத்தைச் சிறிது அதிகரியுங்கள்
- இடது காலை வைக்கும்போது உடம்பின் பாரம் இடது காலுக்கும் வலது காலை வைக்கும்போது உடம்பின் பாரம் வலது காலில் இருப்பதை உணர்கின்றீர்களா? என்பதை வினவுங்கள்
- நிலத்தின் மென்மை – கரடு - முரடு, குளிர்ச்சி - சூடு போன்ற தன்மைகள் தத்தம் கால்களில் உணர்கின்ற விதத்தில் சிரத்தையுடன் நடப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள் இவ்வாறு சில நிமிடங்கள் தொடர்ச்சியாக நடப்பதற்குப் பயிற்சியளியுங்கள்
- சிரத்தையுடன் நடந்தவாறே மாணவர்கள் வகுப்பறைக்கு செல்வதற்கு வழிப்படுத்துங்கள்

**படிமுறை 2**

- சிரத்தையுடன் நடக்கும் பயிற்சியின்போது பெற்றுக்கொண்ட அனுபவத்தை ஒவ்வொருவரிடமும் வினவுங்கள்
- தாம் பெற்றுக்கொண்ட அனுபவத்தைக் கூறுவதற்குச் சகல மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்
- நடக்கும்பொழுது கைக்கொண்ட சிரத்தை மற்றும் அமைதியினால் கிடைக்கும் நன்மைகள் எவை என்பதை மாணவரிடம் கேட்டறியுங்கள்
- சிரத்தையுடன் நடப்பதனால் ஆரோக்கிமான வாழ்க்கைக்குக் கிடைக்கும் பயன்களைத் தெளிவுபடுத்துங்கள்.
- சிறிய வயதிலிருந்தே தினமும் சிரத்தையுடன் செயற்படுவதை வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

**படிமுறை 3**

- செயல்நூலில் தரப்பட்டுள்ள பாடலை வகுப்பறையில் மாணவர்களுக்குப் பாடிக்காட்டுங்கள்.
- மாணவர்களும் பாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் வகுப்பறைக்கு வெளியே அவ்வப்போது சிரத்தையுடன் நடக்கும் செயற்பாட்டில் ஈடுபடும்போது இப்பாடலை பாடியவாறு நடப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- அல்லது சிரத்தையுடன் நடக்கும் செயற்பாடு நிறைவடையும் வேளையில் இப்பாடலைப் பாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது:-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| கணிப்பீட்டு நியதிகள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | பாண்டித்திய மட்டத்தை அண்மித்துள்ளார். |
|---|---|---|---|
| | | நிலை 02 | நிலை 01 |
| தாம் நடக்கும் போது கவனத்துடன் நடப்பார். | 8.1.1 | தாம் நடக்கும் போது கவனத்துடன் நடப்பார். | தாம் நடக்கும் போது கவனத்துடன் நடக்க இடர்படுவார். |
| நடக்கும் போது தனது பாதத்தில் உணரும் கரடு, முரடு, மென்மை, ஈரமான-காய்ந்த சூடான- குளிர்ந்த தன்மைகளை உணர்ந்து கூறுவார். | 8.2.1 | நடக்கும் போது தனது பாதத்தில் உணரும் கரடு, முரடு, மென்மை, ஈரமான-காய்ந்த சூடான- குளிர்ந்த தன்மைகளை உணர்ந்து கூறுவார் | நடக்கும் போது தனது பாதத்தில் உணரும் கரடு முரடு, மென்மை, ஈரமான-காய்ந்த சூடான- குளிர்ந்த தன்மைகளை உணர்ந்து கூற இடர்படுவார். |
| சரியான கொண்ணிலையில் நடப்பார். | 8.2.2 | சரியான கொண்ணிலையில் நடப்பார். | சரியான கொண்ணிலையில் நடக்க இடர்படுவார். |

## வாழ்நாள் பிரயோகத்திற்காக

- நாள்தோறும் தவறாது சில நிமிடங்கள் சிரத்தையுடன் நடத்தல்.

# இரண்டாம் தவணை பாடத்திட்டம்
# தரம் 01

| எண்ணக்கரு | கற்றற்பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|---|
| பண்பு விருத்தி | 01. பண்பு விருத்திக்குரிய சமய அடையாளங்களையும் அடிப்படைச் சமய மரபுகளையும் அறிந்து கொள்வார். | பிள்ளையார் சுழி இடுவதையும் 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தை உச்சரிப்பதையும் அறிந்து கொள்வதுடன் எழுதுவதற்கு முன் பிள்ளையார் சுழி இட்டு எழுதும் பழக்கத்தை வழக்கப்படுத்திக் கொள்ளல். | 1.1 சைவ சமயத்தின் அடையாளங்களை இனங்காண்பார். | 1.1.1 சைவசமயத்தின் அடையாளங்களை இனங்கண்டு கூறுவார்.<br><br>1.1.2 சைவசமயத்தின் அடையாளமான பிள்ளையார் சுழியினை முறையாக எழுதிக்காட்டுவார். |
| | | சமய வழிபாட்டு முறைகளை முறையாக அறிந்து செயற்படுதல். | 1.2 சமய அடையாளங்களை உரிய சந்தர்ப்பங்களில் பிரயோகிப்பார். | 1.2.1 சமய அடையாளங்களில் ஒன்றான பிள்ளையார் சுழியினை உரிய சந்தர்ப்பத்தில் பிரயோகித்துக் காட்டுவார்.<br><br>1.2.2 'ஓம்' எனும் பிரவண மந்திரத்தை உச்சரித்துக் காட்டுவார். |
| கலாசாரம் நாகரிகம் சமூக கலாசார உணர்வு | 02. சமய தலங்களை அறிந்து அத்தலங்களில் கௌவரம் பேணப்படும் வகையில் நடந்து கொள்வார். | தமது சூழலில் காணப்படும் ஆலயத்தை இனங்கண்டு கூறுவதுடன் ஆலயத்திற்கு செல்லும் முறை வழிபாட்டு முறை தாம் நடந்து கொள்ளும் முறைகள் தன்னால் செய்யக் கூடிய சரியைத் தொண்டுகள் என்பவற்றை | 2.1 சமயத்தலத்தை அறிந்து பெயரிடுவார். | 2.1.1 தனது சூழலில் உள்ள சமயத்தலத்தின் பெயரைக் குறிப்பிடுவார்.<br><br>2.1.2 ஆலயத்திற்குச் செல்லும் முறையினைக் குறிப்பிடுவார்.<br><br>2.1.3 ஆலயத்திற்குக் கொண்டு செல்லும் பொருட்களை இனங்கண்டு கூறுவார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிந்து கொள்ளுதல். | 2.2<br>சமயத்தலங்களில் சமயப் பண்புகளுடன் ஒழுகுவார். | 2.2.1<br>சமயத்தலங்களில் இடம்பெறும் இறைவழிப்பாட்டு முறையினைக் கூறுவார்.<br><br>2.2.2<br>நாம் செய்யும் நமஸ்கார வகைகளை அறிந்து அவற்றைச் செய்துக்காட்டுவார்.<br><br>2.2.3<br>ஆலயத்தில் தன்னால் செய்யக் கூடிய சரியைத் தொண்டுகளை எடுத்துரைப்பார். |
| | | | 2.3<br>பொருத்தமான ஆடைகள், முறையான வார்த்தை பிரயோகங்களைப் பயன்படுத்துவார். | 2.3.1<br>ஆலயத்திற்குச் செல்லும் போது தாம் கடைப்பிடிக்கக் கூடிய வழிமுறைளைக் குறிப்பிடுவார்.<br><br>2.3.2<br>ஆலயங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளை விபரிப்பார். |
| ஒழுக்க விழுமியங் களும் நியமங்களும் | 03.<br>சமயச் செயற்பாடு களில் ஈடுபடும்போது சரியான வழிபாட்டு முறைகளை, விதிமுறைகளை வெளிப்படுத்துவார். | சைவ சமயத்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நாளாந்த சமயக்கடமைகள் பற்றியும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் விளங்கி வாழ்வில் சிறந்த சைவப் பிள்ளையாக ஒழுகும் பண்பை விருத்தி செய்தல். | 3.1<br>சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது சரியான வழிபாட்டு முறைகளில் ஈடுபடுவார். | 3.1.1<br>பாடசாலையின் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும் போது நாம் நடந்துகொள்ளும் முறையினைப் போலச் செய்துக் காட்டுவார். |
| | | | 3.2<br>சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான விதி முறைகளைப் பின்பற்றுவார். | 3.2.1<br>பாடசாலையில் சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது சரியாக நிற்றல் முறையாக வழிபாடு செய்தல் என்பவற்றைக் கடைப்பிடிப்பார். |
| | | | 3.3<br>சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான முறைகளைப் பேணுவார். | 3.3.1<br>பாடசாலையில் சமய செயற்பாடுகளில் ஈடுபடும் போது முறையாக இருப்பதனைப் போலச் செய்துக் காட்டுவார். |

| | | | | |
|---|---|---|---|---|
| பண்பு விருத்தி | 04. சமயக் கதைகள் ஊடாகப் பண்பு விருத்திக்கான விசேட அம்சங்களை இனங்காண்பார். | இறைவனை மெய்யன்புடனும் நம்பிக்கையுடனும் வணங்கினால் இறையருள் கிடைக்கும் என்னும் உணர்வை மனதில் ஏற்படுத்துதலும் இறைவனின் கருணையை உணர்ந்து பக்தி செலுத்தி வணங்குவதற்கு வழிப்படுத்துதல். | 4.1 சமயக் கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 4.1.1 சமய கதைகளை விருப்புடன் செவிமடுத்து ஆசிரியர் கேட்கும் வாய்மொழி வினாக்களுக்கு விடை கூறுவார்.<br><br>4.1.2 சமய கதையொன்றினை விருப்புடன் கூறுவார். |
| | | | 4.2 சமயக் கதைகள் ஊடாக சமயத்தின் முழுமுதற் கடவுளின் இயல்பினைக் கூறுவார். | 4.2.1 கடவுளின் இயல்பினைக் குறிப்பிடுவார். |
| | | | 4.3 சமயக் கதைகளிலிருந்து பெறத்தக்க முன்மாதிரிகளைக் கூறுவார். | 4.3.1 திருஞானசம்பந்தரின் கதையினை நாடகமாக நடித்துக் காட்டுவார். |
| பண்பு விருத்தி | 05. திருமுறைகள், பாடல்களின் உதவியுடன் பண்பு விருத்திக்கான விசேட அம்சங்களையும் சமய வாசகங்களையும் இனங்காண்பார். | திருஞானசம்பந்தர் பாடிய முதல் பதிகத்தின் முதல் பாடலை அறிந்து அதனை பண்ணுடன் பாடுதல். | 5.1 திருமுறைப் பாடல்களைச் செவிமடுத்துப் பக்தியுடனும் பண்ணோடும் பாடுவார். | 5.1.1 திருஞானசம்பந்தர் முதல் முதல் பாடிய திருமுறைப் பாடலைக் குறிப்பிடுவார்.<br><br>5.1.2 "தோடுடைய செவியன்...." என்ற திருமுறைப்பாடலை பண்ணுடன் பாடுவார்.<br><br>5.1.3 "தோடுடைய செவியன்...." என்ற பாடலை எழுதிக் காட்டுவார். |
| | | திருநாவுக்கரசர் பாடிய 'தலையே நீ வணங்காய்' என்ற பாடலை பண்ணுடன் பாடுதல். | 5.2 திருநாவுக்கரசர் பாடிய "தலையே நீ வணங்காய்....." என்ற பாடலை பண்ணுடன் பாடுவார். | 5.2.1 திருநாவுக்கரசர் பாடிய "தலையே நீ வணங்காய்......" என்ற பாடலை பண்ணுடன் பாடுவார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 5.2.2<br>“தலையே நீ வணங்காய்.....” என்ற பாடல் அடிகளை ஒழுங்குபடுத்தி எழுதுவார். |
| | | எமது மூலக்கடவுளான சிவபெருமானை போற்றிப் பாடுவார். | 5.3<br>சமய வாசகங்களை அறிந்து வாழ்வில் பயன்படுத்துவார். | 5.3.1<br>சமய வாசகமான “ஓம் நமப் பார்வதி பதயே அரஹர மகா தேவா” என்ற வாசகத்தினை முறையாக ஓதுவார். |
| ஒழுக்க விழுமியங்களும் நியமங்களும் | 6.0<br>சிறந்த பிள்ளை என்ற வகையில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளைக் கடைப்பிடிப்பார். | எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்பதற்கு இணங்க ஆசிரியரை மதித்து நடத்தல். | 6.1<br>சிறந்த பிள்ளை என்ற வகையில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை இனங்காண்பார். | 6.1.1<br>சிறந்த பிள்ளைகளாக வாழ்வதற்கு கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகளை கூறுவார். |
| | | | 6.2<br>பெரியோர்களை மதிக்கும் பண்பினை பின்பற்றுவார். | 6.2.1<br>தம்மை விட பெரியோர்கள் யார் எனக் கூறுவார்.<br><br>6.2.2<br>பெரியோர்களிடம் மரியாதையுடன் நடந்துகொள்வார். |
| | | | 6.3<br>ஆசிரியரை மதித்து நடப்பார். | 6.3.1<br>இறைவனின் மூலமாக உபதேசம் பெற்ற குரவர்களை (தட்சணாமூர்த்தி) அறிவார்.<br><br>6.3.2<br>இறைவனே குரு ஆவர். என்பதை இனங்காண்பார்.<br><br>6.3.3<br>ஆசிரியரை மதித்து ஒழுகுவார்.<br><br>6.3.4<br>ஆசிரியரைப் பற்றி ஒரு பாடலைப் பாடுவார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 6.4<br>தான் ஒரு சிறந்த பிள்ளையாக செயற்படுவார். | 6.4.1<br>சைவ நற்பண்புகைளக் கடைப்பிக்கும் ஒழுக்க விழுமியங்கள் சிலவற்றைக் குறிப்பிடுவார்.<br><br>6.4.2<br>தமது வாழ்வில் ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிப்பார். |
| சிரத்தை சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு | 07.<br>சிறப்பான நாளாந்த வாழ்க்கைக் கோலத்திற்காகச் சிறந்த சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பார். | நாம் உயிர்வாழ்வதற்கு அடைப்படை ஆதாரமாக இறைவன் எமக்கு அளித்த உணவை மதித்து, சுகாதார முறைளையும் கடைப்பிடித்து உண்ணுதல். | 7.1<br>சிறப்பான நாளாந்த வாழ்க்கை முறைகளை ஒழுங்கு முறையில் கூறுவார். | 7.1.1<br>நாம் நாளாந்தம் உணவு உட்கொள்ளும் ஒழுங்கு முறையினைக் கூறுவார். |
| | | | 7.2<br>சிறந்த சுகாதாரப் பழக்கவழக்கங்களை பின்பற்றுவார். | 7.2.1<br>உணவை உட்கொள்வதற்கு முன், உட்கொள்ளும் போது, உட்கொண்ட பின் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கூறுவார். |
| | | | 7.3<br>சைவ முறைப்படி உணவை உண்பார். | 7.3.1<br>சைவ முறைப்படி உணவு உண்ணும் முறையினை செயற்பாட்டு ரீதியாக செய்து காட்டுவார். |

# உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| 01. பிள்ளையார் சுழி | 01 - 04 |
| 02. ஆலயம் செல்வோம் | 05 - 08 |
| 03. பாடசாலையில் சமயம் | 09 - 11 |
| 04. ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர் | 12 - 15 |
| 05. பக்தியுடன் பாடுவோம் | 16 - 21 |
| 06. ஆசிரியரை மதிப்போம் | 22 - 24 |
| 07. மகிழ்ந்து உண்போம் | 25 - 27 |

**எண்ணக்கரு - பண்பு விருத்தி**

**அலகு 01 - பிள்ளையார் சுழி**

## அறிமுகம்

**பிள்ளையார் சுழியிடுவதையும், ஓம் எனும் பிரணவ மந்திரத்தை உச்சரிப்பதையும் அறிமுகம் செய்து, எழுதுவதற்கு முன் பிள்ளையார் சுழியிட்டு எழுதத்தொடங்கும் பழக்கத்தைப் வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதும், ஓம் எனும் பிரணவ மந்திரத்தைச் சரியாக உச்சரித்து வணங்குவதற்குப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதும் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.**

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| **01.** பண்பு விருத்திக்குரிய சமய அடையாளங்களையும் அடிப்படைச் சமய மரபுகளையும் அறிந்து கொள்வார். | பிள்ளையார் சுழி இடுவதையும் 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தை உச்சரிப்பதையும் அறிந்து கொள்வதுடன் எழுதுவதற்கு முன் பிள்ளையார் சுழி இட்டு எழுதும் பழக்கத்தை வழக்கப்படுத்திக் கொள்ளல். | **1.1** சைவ சமயத்தின் அடையாளங்களை இனங்காண்பார். | 1.1.1 சைவசமயத்தில் அடையாளங்களை இனங்கண்டு கூறுவார்.<br><br>1.1.2 சைவசமயத்தின் அடையாளமான பிள்ளையார் சுழியினை முறையாக எழுதிக்காட்டுவார். |
| | சமய வழிபாட்டு முறைகளை முறையாக அறிந்து செயற்படுதல். | **1.2** சமய அடையாளங்களை உரிய சந்தர்ப்பங்களில் பிரயோகிப்பார். | 1.2.1 சமய அடையாளங்களில் ஒன்றான பிள்ளையார் சுழியினை உரிய சந்தர்ப்பத்தில் பிரயோகித்துக் காட்டுவார்.<br><br>1.2.2 'ஓம்' எனும் பிரவண மந்திரத்தை உச்சரித்துக் காட்டுவார். |

**கற்றல் வளங்கள்**

- பிள்ளையார் சுழி உரு எழுதப்பட்ட அட்டை
- **'ஓம்'** எனும் பிரணவ மந்திரம் எழுதப்பட்ட அட்டை
- **'ஓம்"** எனும் பிரணவ மந்திரம் உச்சரிக்கும் ஒலிப்பதிவு நாடா

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**செயற்பாடு 1**


- **படிமுறை 1** பிள்ளையார் சுழி எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி, பிள்ளையார் சுழியை அறிமுகம் செய்யுங்கள்.


- பிள்ளையார் சுழி எழுதுவதன் காரணத்தை விளக்குங்கள்.
  - நாம் எதை எழுத ஆரம்பிக்கும்போதும் பிள்ளையார் சுழியிட்டு ஆரம்பித்தல் வேண்டும்.
  - விநாயகப்பெருமானை வணங்கி தடைகள் நீங்கி தொடங்கப்படும் செயல் இனிதே நிறைவேற வேண்டும் என்ற நம்பிக்கையுடன் இடப்படுகின்றது.
  - பிள்ளையார் சுழியானது ஓம் என்பதன் சுருக்கமாகவும் விநாயகப்பெருமானின் துணையையும் குறிப்பதாகவும் நம்பப்படுகின்றது. என்பதனை இலகுவான முறையில் மாணவர்களுக்கு எடுத்துரையுங்கள்.
- செயல்நூலில் பிள்ளையார் சுழி எழுதப்பட்டுள்ள பக்கத்தினைக்காட்டி மாணவர்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- பின்னர் ஆசிரியர் பிள்ளையார் சுழியைக் கரும்பலகையில் எழுதிக்காட்டுங்கள்.
- ஆசிரியர் கரும்பலகையில் பிள்ளையார் சுழியை எழுதும்போது எழுதும் முறையை மாணவர்களை அவதானிக்கச் செய்யுங்கள்.

**படிமுறை 2**

- ஆசிரியர் கரும்பலகையில் எழுதிக்காட்டியவாறு செயல் நூலில் எழுதப்பட்டிருக்கும் பிள்ளையார் சுழி (பெரிய உரு) மீது மாணவர்கள் தமது சுட்டு விரலை வைத்து முறையாக எழுதுவதற்குப் பயிற்சியளியுங்கள்.
- பெரிய உருவில் பிள்ளையார் சுழியினை நிறப்பென்சிலைக் கொண்டு எழுதிப்பழக பயிற்றுவியுங்கள்.
- செயல்நூலில் புள்ளிக்கோடுகளால் தரப்பட்டுள்ள பிள்ளையார் சுழி எழுதப்பட்ட உருக்களின் மீது பென்சிலைக்கொண்டு சரியாக எழுதுவதற்குப் பயிற்சியளியுங்கள்.
- பின்னர் செயல்நூலில் தரப்பட்டுள்ள வெற்றுப் பக்கத்தில் பிள்ளைகள் தாமாகவே பிள்ளையார் சுழியை எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- நாம் எதையும் எழுதுவதற்கு ஆரம்பிப்பதற்கு முன் தாளின் மேற்பக்கத்தில் பிள்ளையார் சுழியிட்டு எழுத ஆரம்பிக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.

எடுத்துக்காட்டு:-






## செயற்பாடு 2

**படிமுறை 1**

- வகுப்பறையில் பிள்ளைகளை அரைவட்ட வடிவத்தில் அமைதியாக நிற்பதற்கு வழிப்படுத்துங்கள்.

- **'ஓம்'** எனும் மந்திரம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி ஓம் மந்திரத்தை அறிமுகம் செய்யுங்கள்.
- "**ஓம்**" எனும் மந்திரத்தை சிறிது நேரம் அமைதியாக நின்று அவதானிக்கச் செய்யுங்கள்.
- மாணவர்களை கண்களை மூடியவாறு இருக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- "**ஓம்**"மந்திரத்தை ஒலிக்கச் செய்யுங்கள். (பொருத்தமான சாதனங்கள் ஊடாக)
- பின்னர் ஆசிரியர் **'ஓம்'** மந்திரத்தை உச்சரித்தும் ஒலித்தும் காட்டுங்கள்.
- மாணவர்களையும் ஒரு சில நிமிடங்கள் கண்களை மூடியவாறு அமைதியுடன் 'ஓம்' மந்திரத்தை உச்சரித்து ஒலித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.
- "**பிரணவம்**" என்பது என்றும் **புதியது** என்று பொருள் உண்டு எனக் கூறுங்கள்.
- பிரணவ மந்திரத்தை உச்சரிப்பதனால் உடல், உள அமைதியையும் மன ஒருமைப்பாட்டினையும் சிறந்த இரத்த ஓட்டத்தையும் மூளையில் செயற்பாட்டுத்திறன், மற்றும் நினைவாற்றல் திறன் அதிகரிப்பதற்கான தன்மையினையும் பெறலாம் என்பதனை எளிய முறையில் மாணவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்.

# ஓம்

( ஓம் என்ற சொல் அ, உ, ம் ஆகிய மூன்று எழுத்துக்களை உள்ளடக்கியது. இந்த மூன்று எழுத்துக்களும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் குறிக்கின்றன. அதாவது பிரம்மா (படைப்பவர்), விஷ்னு ( காப்பவர்), சிவன் (அழிப்பவர்) ஆகிய மும்மூர்த்திகளையும் பிரணவ மந்திரம் தன்னகத்தே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.)

ஆசிரியருக்கான மேலதிக விளக்கத்திற்கு

செயல்நூலில் உள்ள நான்காவது செயற்பாட்டினை வாசித்துக்காட்டுங்கள். செயற்பாட்டு ரீதியாகவும் செய்வதற்கு ஊக்கப்படுத்துங்கள்.

**செயற்பாடு 3**

- செயற்பாட்டு நூலிலுள்ள செயற்பாடு 01, 02, 03 என்பவற்றை படிமுறையாக செய்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- செயல்நூலில் தரப்பட்டுள்ள **'இணைப்போம்'** பகுதியில் தரப்பட்டுள்ள சொற்களை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்.
- சொற்களுக்குப் பொருத்தமான படங்களை இனங்கண்டு இணைப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி, செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது :-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| செயலாற்றுகை தர நியமங்கள் | க.இ | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | பாண்டித்தியத்திற்கு தொலைவில் உள்ளார் |
|---|---|---|---|
| | | **நிலை 02** | **நிலை 01** |
| **1.1** சைவ சமயத்தின் அடையாளங்களை இனங்காண்பார். | 1.1.1 | சைவசமயத்தில் அடையாளங்களை இனங்கண்டு கூறுவார். | சைவசமயத்தில் அடையாளங்களை இனங்கண்டு கூறுவதற்கு இடர்படுவார். |
| | 1.1.2 | சைவசமயத்தின் அடையாளமான பிள்ளையார் சுழியினை முறையாக எழுதிக்காட்டுவார். | சைவசமயத்தின் அடையாளமான பிள்ளையார் சுழியினை முறையாக எழுதிக்காட்டுவதில் இடர்படுவார். |
| **1.2** சமய அடையாளங்களை உரிய சந்தர்ப்பங்களில் பிரயோகிப்பார். | 1.2.1 | சமய அடையாளங்களில் ஒன்றான பிள்ளையார் சுழியினை உரிய சந்தர்ப்பத்தில் பிரயோகித்துக் காட்டுவார். | சமய அடையாளங்களில் ஒன்றான பிள்ளையார் சுழியினை உரிய சந்தர்ப்பத்தில் பிரயோகிக்க இடர்படுவார். |
| | 1.2.2 | 'ஓம்' எனும் பிரவண மந்திரத்தை உச்சரித்துக் காட்டுவார். | 'ஓம்' எனும் பிரவண மந்திரத்தை உச்சரித்துக் காட்ட இடர்படுவார். |

## வாழ்நாள் பிரயோகம்

- எழுதத் தொடங்கும் முன் பிள்ளையார் சுழி இடும் பழக்கத்தைக் வழக்கமாக்கிக் கொள்ளல்.
- தினந்தோறும் கண்களை மூடியவாறு அமைதியுடன் '**ஓம்**' மந்திரத்தை உச்சரிக்கப் பழக்கப்படுத்தல்.

**எண்ணக்கரு : கலாசாரம் நாகரிகம் சமூக கலாசார உணர்வு**

**அலகு 02 : ஆலயம் செல்வோம்**

## அறிமுகம்

**சைவ சமயிகளுக்கு ஆலய வழிபாடு மிகவும் இன்றி அமையாதது, இறைவன் எழுந்தருளி அருள் புரியும் இடம் கோயில் எனப்படும். இத்தகைய கோயிலுக்கு நாள்தோறும் சென்று முறையாக வழிப்பாடு செய்தல் சாலச்சிறந்தது.**

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 2.0<br>சமய தலங்களை அறிந்து அத்தலங்களில் கௌவரம் பேணப்படும் வகையில் நடந்துக் கொள்வார். | தமது சூழலில் காணப்படும் ஆலயத்தை இனங்கண்டு கூறுவதுடன் ஆலயத்திற்கு செல்லும் முறை, வழிபாட்டு முறை, நாம் நடந்து கொள்ளும் முறைகள், தன்னால் செய்யக் கூடிய சரியைத் தொண்டுகள் என்பவற்றை அறிந்துக் கொள்ளுதல். | 2.1<br>சமயத்தலத்தை அறிந்து பெயரிடுவார். | 2.1.1<br>தனது சூழலில் உள்ள சமயத்தலத்தின் பெயரைக் குறிப்பிடுவார்.<br><br>2.1.2<br>ஆலயத்திற்குச் செல்லும் முறையினைக் குறிப்பிடுவார்.<br><br>2.1.3<br>ஆலயத்திற்குக் கொண்டு செல்லும் பொருட்களை இனங்கண்டுக் கூறுவார். |
| | | 2.2<br>சமயத்தலங்களில் சமயப்பண்புகளுடன் ஒழுகுவார். | 2.2.1<br>சமயத்தலங்களில் இறைவழிப்பாட்டு முறையினை கூறுவார்.<br><br>2.2.2<br>நாம் செய்யும் நமஸ்கார வகைகளை அறிவார்.<br><br>2.2.3<br>ஆலயத்தில் தன்னால் செய்யக் கூடிய கிரியைத் தொண்டுகளைக் செய்வார். |
| | | 2.3<br>பொருத்தமான ஆடைகள், முறையான வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்துவார். | 2.3.1<br>ஆலயத்திற்குச் செல்லும் போது நாம் கடைப்பிடிக்கக் கூடிய வழிமுறைளைக் குறிப்பிடுவார்.<br><br>2.3.2<br>ஆலயங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளை விபரிப்பார். |

## கற்றல் வளங்கள்

- நாளாந்தக் சமயக்கடமைகளை சித்திரிக்கும் படங்கள்
- பாடசாலையில் வழிபாட்டிடத்தைக் காட்டும் காட்சிப்படங்கள்
- சைவ நற்சிந்தனைகள் கூறப்படும் ஒலிப்பதிவுகள் - காணொளிகள்
- திருமுறைப் பாடல்கள் கொண்ட ஒளிப்பதிவுகள் - காணொளிகள்
- நிறந்தீட்டுவதற்குரிய பொருள்கள்

## கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்

**செயற்பாடு – 01**

**படிமுறை – 01**

- மாணவர்களுக்கு ஆலயம் தொடர்பான படங்களையோ, காணொளிகளையோ காட்சிப்படுத்தி அவை தொடர்பாக கலந்துரையாடுங்கள்.



- மாணவர்களிடம் "நீங்கள் இறைவனை வணங்குவதற்கு எங்கே செல்வீர்கள்?" என வினவி கலந்துரையாடுங்கள்.
- நாம் ஆலயத்திற்கு எவ்வாறு செல்ல வேண்டும் என்பது பற்றி வினவுங்கள்.
- செயல்நூலில் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற வாசகத்தை எழுதி காட்சிப்படுத்தி அதனை உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- நாம் ஆலயம் செல்லும் போது கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடி செயல்நூலில் வழங்கப்பட்ட செயற்பாடுகளை வாசித்து காட்டுங்கள்.
    - **ஆலயத்திற்கு செல்லும் முன் நீராடுவோம்.**
    - **தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிவோம்.**
- மாணவர்களை அதனை வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஆலயம் செல்வதால் ஏற்படும் பயன்களை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**செயற்பாடு 02**

- ஆலயத்திறக்கு கொண்டு செல்லும் பூசைப்பொருட்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்
- உண்மை பொருளையோ, படங்களையோ, காட்சிப் படங்களையோ, மாணவர்களுக்கு காட்சிப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களை குழுக்களாக்கி பூசை பொருட்களை வரைந்து காட்சிப்படுத்த துணைபுரியுங்கள்.
- செயற்பாட்டு நூலில் உள்ள செயற்பாடு 01 ஐ செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

- நாம் ஆலயத்திற்கு கொண்டு செல்லும் பூசை பொருட்கள் எவை என வினாவுங்கள்.
- பூசைப் பொருட்களை நாம் சுத்தம் செய்து ஆலயத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என வழிப்படுத்துங்கள்.
- இறைவனை வணங்குவதற்கு ஆலயத்திற்கு உள்ளே செல்ல வேண்டும் என்பதினை தெளிவுப்படுத்துங்கள்.
- செயற்பாட்டு நூலில் உள்ள "**கோபுர தரிசனம் கோடி புண்ணியம்**" என்ற வாசகத்தை உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 03**

- ஆலயத்துள்ளே சென்றதுடன் நாம் முதல் முதலில் பிள்ளையாரை வழிப்பட வேண்டும் என்பதினையும் எவ்வாறு வழிப்பட வேண்டும் என்பதினையும் நினைவுப்படுத்ததுங்கள்.
- இறைவழிப்பாட்டின் போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளை எடுத்துக் காட்டுங்கள்.
- ஆலயம் தூய்மை பெற நாம் என்ன செய்யலாம்? என வினாவி அது தொடர்பாக கலந்துரையாடுங்கள்.
- மேலே மாணவர்களால் கூறப்பட்ட (சரியை) தொண்டுகள் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.
    - ஆலயத்தை கூட்டுதல்
    - கழுவுதல்
    - புல் பூண்டுகளை அகற்றுதல்

**செயற்பாடு 04**

செயல்நூலில் உள்ள செயற்பாடு 02, 03 செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 05**

- ஆலயத்திற்கு கொண்டு செல்லும் பூசைப் பொருட்களை ஆயாத்தம் செய்து கொள்ளுங்கள்.
- மாணவர்களை ஆலயத்திற்கு செல்வதற்கு பொருத்தமான கலாசார உடைகளை அணிந்துக் கொண்டு பாடசாலையில் உள்ள ஆலாயத்திற்கோ அல்லது அருகாமையில் அமைந்துள்ள ஆலயத்திற்கோ அழைத்து செல்லுங்கள்.
- ஆண் மாணவர்கள் ஆலயத்திற்கு உள்ளே செல்லும் போது மேல் அணிகளை கழற்றி செல்லுதல் வேண்டும் என்று அறிவுறுத்துங்கள்.
- மாணவர்களுக்கு இதற்கு முன்பு கற்ற விடயங்களை நினைவுகூர்ந்து, ஆலயத்திற்கு செல்லும் போது கடைப்பிடிக்க வேண்டிய செயற்பாடுககளை செய்கின்றார்களா? என்பதனை அவதானியுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு துணைபுரியுங்கள்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது :-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| செயலாற்றுகை தர நியமங்கள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | பாண்டித்திய மட்டத்திற்கு தொலைவில் உள்ளார் |
|---|---|---|---|
| | | நிலை 02 | நிலை 01 |
| 2.1 சமயத்தலத்தை அறிந்து பெயரிடுவார். | 2.1.1 | தனது சூழலில் உள்ள சமயத்தலத்தின் பெயரைக் குறிப்பிடுவார். | தனது சூழலில் உள்ள சமயத்தலத்தின் பெயரைக் குறிப்பிடுவதற்கு இடர்படுவார். |
| | 2.1.2 | ஆலயத்திற்குச் செல்லும் முறையினைக் முறையாகக் குறிப்பிடுவார். | ஆலயத்திற்குச் செல்லும் முறையினைக் குறிப்பிடுவதற்கு இடர்படுவார். |
| | 2.1.3 | ஆலயத்திற்குக் கொண்டு செல்லும் பொருட்களை இனங்கண்டுக் கூறுவார். | ஆலயத்திற்குக் கொண்டு செல்லும் பொருட்களின் ஏதேனும் ஒன்றையோ அல்லது இரண்டையோ குறிப்பிடுவார். |
| 2.2 சமயத்தலங்களில் சமயப்பண்புகளுடன் ஒழுகுவார். | 2.2.1 | சமயத்தலங்களில் இறைவழிப்பாட்டு முறையாக செய்வார். | சமயத்தலங்களில் இறைவழிப்பாட்டு முறையாக செய்வதற்கு இடர்படுவார். |
| | 2.2.2 | நாம் செய்யும் நமஸ்கார வகைகளை அறிந்து அதில் தமக்கான முறையினை செய்வார். | நாம் செய்யும் நமஸ்கார வகைகளை அறிந்து நமஸ்காரம் செய்வதில் இடர்படுவார். |
| | 2.2.3 | ஆலயத்தில் தன்னால் செய்யக் கூடிய கிரியைத் தொண்டுகளைக் தானே முன்வந்து செய்வார். | ஆலயத்தில் தன்னால் செய்யக் கூடிய கிரியைத் தொண்டுகளைக் செய்வதில் இடர்படுவார். |
| 2.3 பொருத்தமான ஆடைகள், முறையான வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்துவார். | 2.3.1 | ஆலயத்திற்குச் செல்லும் போது நாம் கடைப்பிடிக்கக் கூடிய வழிமுறைளைக் குறிப்பிடுவதுடன் அதற்கு ஏற்றவகையில் ஒழுகுவார். | ஆலயத்திற்குச் செல்லும் போது நாம் கடைப்பிடிக்கக் கூடிய வழிமுறைளைக் குறிப்பிட, செய்து காட்ட இடர்படுவார். |
| | 2.3.2 | ஆலயங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளை விபரிப்பார். | ஆலயங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளை விபரிக்க இடர்படுவார். |

## வாழ்நாள் பிரயோகம்.

- முடியுமான காலங்களில் இறைவனை வணங்குவதற்கு ஆலயத்திற்கு செல்ல வேண்டும் என்பதனை தொடர்ச்சியாகக் கடைப்பிடித்தல்.

**எண்ணக்கரு : ஒழுகலாறு, விழுமியங்களும் நியமங்களும்**

**அலகு 03 : சமய வாழ்வு (பாடசாலையில் சமயக் கடமைகள்)**

## அறிமுகம்

**சைவசமயத்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நாளாந்த சமயக்கடமைகள் பற்றியும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் விளங்கி வாழ்வில் சிறந்த சைவப் பிள்ளையாக ஒழுகும் பண்பை விருத்தி செய்வது இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.**

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான வழிபாட்டு முறைகள், விதிமுறைகள் மற்றும் கொண்ணிலையை வெளிப்படுத்துவார். | சைவசமயத்தவர் - கள் கடைப்பிடிக்க வேண்டிய நாளாந்த சமயக்கடமைகள் பற்றியும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் விளங்கி வாழ்வில் சிறந்த சைவப் பிள்ளையாக ஒழுகும் பண்பை விருத்தி செய்தல். | 3.1 சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான வழிபாட்டுமுறைகளில் ஈடுபடுவார். | 3.1.1 பாடசாலையில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும் போது நாம் நடந்துகொள்ளும் முறையினை போலச் செய்து காட்டுவார். |
| | | 3.2 சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான விதி முறைகளைப் பின்பற்றுவார். | 3.2.1 தனக்கு ஒதுக்கப்பட்ட நாள் வரும் போது வகுப்பறையில் வழிப்பாட்டு மூலையில் சமய செயற்பாட்டில் ஈடுபடுவார். விளக்கேற்றுதல், பூக்களைப் பறித்தல்,<br><br>3.2.2 குழுவாக இணைந்து நிறைகுடம் வைத்தல் செயற்பாட்டில் ஈடுபடுதல். |

### கற்றல் வளங்கள்

- நாளாந்த சமயக் கடமைகளை சித்திரிக்கும் படங்கள்
- பாடசாலையில் வழிபாட்டிடத்தைக் காட்டும் காட்சிப்படங்கள்
- சைவ நற்சிந்தனைகள் கூறப்படும் ஒலிப்பதிவு நாடாக்கள் - இறுவட்டுக்கள்
- திருமுறைப் பாடல்கள் கொண்ட இறுவட்டுக்கள்
- நிறந்தீட்டுவதற்குரிய பொருள்கள்

### கற்றல் கற்பித்தல் செயற்பாடு

### செயற்பாடு 01

### படிமுறை 01

- மாணவர்களை காலையில் பாடசாலையில் மணி ஒலித்தால் என்ன செய்ய வேண்டும் என்பதனை, வினாவுங்கள், மாணவர்கள் கூறும் கருத்துக்களுக்கு இணங்க கலந்துரையாடுங்கள்.

- கூட்டுப்பிரார்த்தனை செய்தல் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.
- கூட்டுப்பிரார்த்தனை செய்வதன் நன்மைகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- வகுப்பறையில் வழிப்பாட்டு மூலையில் நாம் தினமும் செய்ய வேண்டிய செயற்பாடுகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- சுத்தம் செய்தல்.
- பூக்களை வைத்தல்
- விளக்கு ஏற்றுதல்.
- வகுப்பியுள்ள சகல மாணவர்களும் அதனை தினமும் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 02**

- பாடசாலையில் நடைபெறும் விசேட பூசைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- வெள்ளிக்கிழமை கூட்டுப்பிரார்த்தனை
- நவராத்திரி பூசை
- குரு பூசை தினங்கள் என்பவற்றை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களை இவற்றில் ஈடுபடவும் வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 03**

- மாணவர்களை மாலை கட்டுவதற்கு தேவையான பொருட்களை கொண்டு வர வழிப்படுத்துங்கள் மாலை கட்டுவதற்கு வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 04**

- மாணவர்களை தினமும் ஒருவர் வீதம் வழிப்பாட்டு மூலையில் இறைவழிப்பாட்டுக்கான ஆயத்த செயற்பாடுகளை செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

  - சுத்தம் செய்தல்
  - விளக்கேற்றல்
  - பூக்கள் கொண்டுவருதல்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது :-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| செயலாற்றுகை தர நியமங்கள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | | பாண்டித்திய மட்டத்திற்கு தொலைவில் உள்ளார் |
|---|---|---|---|---|
| | | **நிலை 03** | **நிலை 02** | **நிலை 01** |
| 3.1 சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான வழிபாட்டுமுறைகளில் ஈடுபடுவார். | 3.1.1 | பாடசாலையில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும் போது நாம் நடந்துகொள்ளும் முறையினை முறையாகப் போலச் செய்துக் காட்டுவார். | பாடசாலையின் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும் போது நாம் நடந்துகொள்ளும் முறையினை போலச் செய்துக் காட்டுவார். | பாடசாலையில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும் போது நாம் நடந்துகொள்ளும் முறையினை போலச் செய்துக் காட்டுவதில் இடர்படுவார். |
| | 3.2.1 | தனக்கு ஒதுக்கப்பட்ட நாள் வரும் போது வகுப்பறையில் வழிப்பாட்டு மூலையில் சமய செயற்பாட்டில் முறையாக ஈடுபடுவார். | தனக்கு ஒதுக்கப்பட்ட நாள் வரும் போது வகுப்பறையில் வழிப்பாட்டு மூலையில் சமய செயற்பாட்டில் ஈடுபடுவார். | தனக்கு ஒதுக்கப்பட்ட நாள் வரும் போது வகுப்பறையில் வழிப்பாட்டு மூலையில் சமய செயற்பாட்டில் ஈடுபட இடர்படுவார். |
| 3.2 சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான விதி முறைகளைப் பின்பற்றுவார். | 3.2.2 | குழுவாக இணைந்து நிறைகுடம் வைத்தல் செயற்பாட்டில் முறையாக ஈடுபடுவார். | குழுவாக இணைந்து நிறைகுடம் வைத்தல் செயற்பாட்டில் ஈடுபடுவார். | குழுவாக இணைந்து நிறைகுடம் வைத்தல் செயற்பாட்டில் ஈடுபடுவதில் ஈடுபடுவார். |

## வாழ்நாள் பிரயோகம்

வகுப்பறையில் தினமும் முறையாக சமய செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் கடைப்பிடிப்பார்.

**எண்ணக்கரு - பண்புவிருத்தி**

**அலகு 04 - ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தர்**

## அறிமுகம்

இறைவனை மெய்யன்புடனும் நம்பிக்கையுடனும் வணங்கினால் இறையருள் கிடைக்கும். என்னும் உணர்வை மனதில் ஏற்படுத்துவதும் இறைவனின் கருணையை உணர்ந்து பக்தி செலுத்தி, வணங்குவதற்கு வழிப்படுத்துவதும் இப்பாடத்தின் நோக்கமாகும்.

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| சமயக் கதைகள் ஊடாகப் பண்பு விருத்திக்கான விசேட அம்சங்களை இனங்காண்பார். | இறைவனை மெய்யன்புடனும் நம்பிக்கையுடனும் வணங்கினால் இறையருள் கிடைக்கும். என்னும் உணர்வை மனதில் ஏற்படுத்துவதும் இறைவனின் கருணையை உணர்ந்து பக்தி செலுத்தி வணங்குவதற்கு வழிப்படுத்தல். | 4.1<br>சமயக் கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 4.1.1<br>சமய கதைகளை விருப்புடன் செவிமடுத்து ஆசிரியர் கேட்கும் வாய்மொழி வினாக்களுக்கு விடை கூறுவார்.<br><br>4.1.2<br>சமய கதையொன்றினை விருப்புடன் கூறுவார். |
| | | 4.2<br>சமயக் கதைகள் ஊடாக சமயத்தைத் தோற்றுவித்தவர்/ இறைவனின் இயல்பொன்றைக் கூறுவார். | 4.2.1<br>இறைவனின் இயல்பொன்றினைக் குறிப்பிடுவார். |
| | | 4.3<br>சமயக் கதைகளிலிருந்து பெறத்தக்க முன்மாதிரிகளைக் கூறுவார். | 4.3.1<br>திருஞானசம்பந்தரின் கதையினை நாடகமாக நடித்துக் காட்டுவார். |

### கற்றல் வளங்கள்

- திருஞானசம்பந்தரின் திருவுருவப் படம்,
- கதைக்குரிய காட்சிப்படங்கள்
- கதையில் இடம்பெறும் பிரதான சந்தர்ப்பங்களைக் காட்டும் படங்களை வரிசையாகக் காட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்ட பக்கப்புரட்டி

### கற்றல் கற்பித்தல் அணுகுமுறை


### செயற்பாடு 1

**படிமுறை 1**

- வகுப்பறையில் 'ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தர்' கதையின் காட்சிகளைச் சித்திரிக்கும் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- காட்சிப்படங்களில் காணப்படும் சிவபெருமான் மற்றும் உமாதேவியாரின் திருவுருவங்களைக் காட்டி முன்னைய பாடங்களில் கற்றவற்றை நினைவுகூருங்கள்.

- திருஞானசம்பந்தரின் திருவுருவத்தைக் காட்டி அறிமுகப்படுத்துங்கள்.
- திருஞான சம்பந்தர் பற்றிய சிறிய ஒரு விளக்கத்தை முன்வைக்குக.

**கதைப்படம்**




**படிமுறை 2**

- மாணவர்களுக்குக் கதைப்படங்களைக் காட்டி இரசனையுடனும் மெய்ப்பாடுகளுடனும் கதையைக் கூறுங்கள்.
- மாணவர்கள் கதையை இரசனையுடன் அவதானமாகச் செவிமடுப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

**கதை**

சிவபாதவிருதயர் சீர்காழி என்னும் ஊரில் வசித்து வந்தார். அவரது மனைவியார் பகவதியார். இருவரும் சிவபெருமானிடத்தில் மிகுந்த பக்தியுடையவர்கள். தினமும் சீர்காழியிலுள்ள தோணியப்பர் கோவிலுக்குச் சென்று பக்தியுடன் வழிபட்டு வந்தனர். தோணியப்பர் அருளால் அவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு மூன்று வயதாயிற்று. தந்தையாரோடு கோயிலுக்குச்செல்ல வேண்டுமெனக் குழந்தை அடம்பிடித்தது. தந்தையார் குழந்தையைக் கோயிலுக்குக் கூட்டிச் சென்றார்.

குளக்கரையில் குழந்தையை இருத்திவிட்டுக் குளத்தில் இறங்கித் தண்ணீரில் மூழ்கி நீராடினார். அப்போது குழந்தை தகப்பனாரைக் காணாமல் **'அம்மையே அப்பா'** என்று சொல்லி அழுதது. அவ்வொலி தகப்பனாருக்குக் கேட்கவில்லை . உலக மாதாவாகிய உமாதேவியாருக்கும் சிவபெருமானுக்கும் கேட்டது. சிவபெருமான் இடபவாகனத்தில் உமாதேவியாருடன் குழந்தையின் முன் தோன்றினார். உமாதேவியார் பொற்கிண்ணத்தில் குழந்தைக்குப் பாலூட்டினார். ஞானப்பால் உண்ட குழந்தையின் அழுகை நீங்கியது. ஆனந்தம் கொண்டது.

நீராடிய தந்தை குளத்திலிருந்து வெளியே வந்தார். குழந்தையின் வாயில் பால்- வடிந்திருப்பதைக் கண்டார். ''யாருடைய எச்சிற் பாலைக் குடித்தாய்?'' எனக் குழந்தையை அதட்டினார். குழந்தை தோணியப்பரது கோயிலைச் சுட்டிக் காட்டி ''தோடுடைய செவியன்'' என்னும் தேவாரத்தைப் பாடியது. சிவபாதவிருதயர் ஆச்சரியமடைந்தார். ஞானப்பால் உண்ட குழந்தையை ஞானசம்பந்தர் என அனைவரும் அழைத்தனர்.

- மாணவர்கள் கதையைக் கிரகித்துக்கொண்டார்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு சிறு வினாக்களை வினவுங்கள்.
- அன்பே வடிவான இறைவனை மெய்யன்புடன் வணங்குவதால் அவனருள் கிடைக்கும் எனும் நம்பிக்கையை மாணவர்களுக்கு வலியுறுத்துங்கள்.

**செயற்பாடு 2**

**படிமுறை 1**

- மாணவர்களை ஒரு அமைதியான சூழலுக்கு அழைத்து செல்க.
- அவர்களை குழுக்களாக்குக.
- தாங்கள் செவிமடுத்த திருஞானசம்பந்தர் கதையினை நாடகமாக நடிப்பதற்கு வழிப்படுத்துக.
- மாணவர்கள் பாத்திரமேற்று நடிக்கும் போது அவர்களை பாராட்டுவதுடன் இடர்படும் போது சரியான ஒரு வழி நடத்தலை வழங்குங்கள்.

## செயற்பாடு 3
## படிமுறை 1

- திருஞானசம்பந்தர் கதையினை நினைவில் கொண்டும் செயற்பாட்டு நூலில் காணப்படும் படங்களை ஒழுங்குப்படுத்தி 1, 2, 3, 4 என்றவாறு இலக்கம் இடுவதற்கு வழிப்படுத்துக.
- மாணவர்கள் ஒழுங்குபடுத்திய கதையினை சுருக்கமாக கூறுவதற்கும் வழிப்படுத்துக.

## செயற்பாடு 4
## படிமுறை 1

- செயற்பாட்டு நூலில் காணப்படும் செயற்பாடு இரண்டு திருஞானசம்பந்தர் கதையினை நினைவூட்டி பொருத்தமானதை இணைக்க வழிப்படுத்துக.
- மாணவர்களை சோடிகளாக்குங்கள்.
- கதையை மாணவர்கள் சோடியாகச் சேர்ந்து வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆசிரியர் தயாரித்துள்ள பக்கப்புரட்டியின் உதவியுடன் கதையைக் கூறுவதற்கு ஒவ்வொரு சோடிக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்களைத் தனித்தனியே கதையை இரசனையுடன் பக்தியுடன் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்களைப் பாராட்டி ஊக்கப்படுத்துங்கள்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது :-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| செயலாற்றுகை தர நியமங்கள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | | பாண்டித்திய மட்டத்திற்கு தொலைவில் உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | **நிலை 04** | **நிலை 03** | **நிலை 02** | **நிலை 01** |
| 4.1 சமயக் கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 4.1.1 | சமய கதைகளை விருப்புடன் செவிமடுத்து ஆசிரியர் கேட்கும் வாய்மொழி 04 வினாக்களுக்கு விடை கூறுவார். | சமய கதைகளை விருப்புடன் செவிமடுத்து ஆசிரியர் கேட்கும் வாய்மொழி 03 வினாக்களுக்கு விடை கூறுவார். | சமய கதைகளை விருப்புடன் செவிமடுத்து ஆசிரியர் கேட்கும் வாய்மொழி 2 வினாக்களுக்கு விடை கூறுவார். | சமய கதைகளை விருப்புடன் செவிமடுத்து ஆசிரியர் கேட்கும் வாய்மொழி வினா ஒன்றுக்கேனும் நண்பர்களின் உதவியுடன் விடை கூறுவார். |
| 4.2 சமயக் கதைகள் ஊடாக சமயத்தைத் தோற்று வித்தவர்/ இறைவனின் இயல் பொன்றைக் கூறுவார். | 4.1.2 | பட அட்டைகளை முறையாக ஒழுங்குப்படுத்தி கதையினை விருப்புடன் கூறுவார். | பட அட்டைகளை ஒழுங்குப்படுத்தி கதையினை விருப்புடன் கூறுவார். | பட அட்டைகளை ஒழுங்குப்படுத்தி மற்றவர்கள் உதவியுடன் கதையினை கூறுவார். | பட அட்டைகளை ஒழுங்குப்படுத்தி கதையினை கூறுவதில் இடர்படுவார். |
| | 4.2.1 | இறைவனின் இயல்புகள் மூன்றினைக் குறிப்பிடுவார். | இறைவனின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுவார். | இறைவனின் இயல்பு ஒன்றினைக் குறிப்பிடுவார். | இறைவனின் இயல்புகளை கூறுவதில் இடர்படுவார். |
| 4.3 சமயக் கதைகளி லிருந்து பெறத்தக்க முன்மாதிரி களைக் கூறுவார். | 4.3.1 | திருஞானசம்பந்த ரின் கதையினை சிறந்த அபிநயங்க ளுடனும் பேச்சாற்ற லுடனும் இரசனையுடனும் நாடகமாக நடித்துக் காட்டுவார். | திருஞான சம்பந்தரின் கதையினை அபிநயத்துடன் நாடகமாக நடித்துக் காட்டுவார். | திருஞான சம்பந்தரின் கதையினை மற்றவர் உதவியுடன் நாடகமாக நடித்துக் காட்டுவார் | திருஞான சம்பந்தரின் கதையினை நாடகமாக நடித்துக் காட்டுவதில் இடர்படுவார். |

**வாழ்நாள் பிரயோகம்**

- மெய்யன்புடனும் நம்பிக்கையுடனும் இறைவனை வணங்குதல்.

**எண்ணக்கரு - பண்புவிருத்தி**

**அலகு 05 - திருமுறைகள் - பக்தியுடன் பாடுவோம்**

## அறிமுகம்

**தேவாரத் திருமுறைகளையும் சமய வாசகங்களையும் அறிமுகம் செய்தலும் அதனை மனனம் செய்து பக்தியுடனும் பண்ணோடும் பாடுவதற்கும் அதன் சிறப்பை உணர்ந்து கொள்வதற்கு உரிய சந்தர்ப்பத்தில் பக்தியோடு கூறுவதற்கும் மாணவர்களைப் பயிற்றுவிப்பது இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.**

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 5.0 திருமுறைகள், அறநெறிப் பாடல்களின் உதவியுடன் பண்பு விருத்திக்கான விசேட அம்சங்களை இனங்காண்பார் | திருஞானசம்பந்தர் பாடிய முதல் பதிகத்தினை அறிந்து அதனை இரசனையுடன் பாடுதல். | 5.1 திருமுறைப் பாடல்களைச் செவிமடுத்துப் பக்தியுடன் பண்ணோடு பாடுவார். | 5.1.1 திருஞர்னசம்பந்தர் முதல் முதல் பாடிய திருமுறைபாடலைக் குறிப்பிடுவார்.<br><br>5.1.2 “தோடுடைய செவியன்....” என்ற திருமுறைப்பாடலை பண்ணுடன் பாடுவார்.<br><br>5.1.3 “தோடுடைய செவியன்....” என்ற பதிகத்தை எழுதிக் காட்டுவார். |
| | திருநாவுக்கரசர் பாடிய பாடலை அறிந்து அதனை இரசனையுடன் பாடுதல். | 5.2 திருநாவுக்கரசர் பாடிய “தலையே நீ.....” என்ற பதிகத்தை இரசனையுடன் பாடுவார். | 5.2.1 திருநாவுக்கரசர் பாடிய “தலையே நீ......” என்ற பதிகத்தை பண்ணுடன் பாடுவார்.<br><br>5.2.2 “தலையே நீ வணங்காய்.....” என்ற பதிகத்தின் அடிகளை ஒழுங்குபடுத்தி எழுதுவார். |
| | எமது மூலக்கடவுளான சிவபெருமானை போற்றிப் பாடுவார். | 5.3 சமய வாசகங்களை அறிந்து வாழ்வில் பயன்படுத்துவார். | 5.3.1 சமய வாசகமான “ஓம் நமப் பார்வதி பதயே” “அரஹர மகா தேவா” என்ற வாசகங்களை முறையாக ஓதுவார். |

## கற்றல் வளங்கள்

- திருமுறைப்பாடலகள் எழுதப்பட்ட அட்டைகள் (**‘தோடுடைய செவியன்’ மற்றும் ‘தலையே நீ வணங்காய்’** தேவாரப் பதிகங்கள்)
- திருமுறைப்பாடல் அடங்கிய இறுவட்டு
- ஒலிப்பதிவு நாடா
- சமய வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகள் (‘ஓம் நம பார்வதிபதயே’, ‘அரஹரமகாதேவா’)

## கற்றல் கற்பித்தல் அணுகுமுறை

### செயற்பாடு 1

**படிமுறை 1**

- திருமுறைகளில் தேவாரப் பதிகங்கள் அடங்கும் என்பதைக் கூறுங்கள்.
- தேவாரப் பதிகங்களைப் பாடியருளிய நாயன்மார்கள் மூவரையும் அறிமுகம் செய்யுங்கள்.
- திருமுறைப் பாடல்களைப் பாடுவதற்கு முன்பும் பாடிய பின்பும் '**திருச்சிற்றம்பலம்**' என்று பக்தியுடன் கூறவேண்டும் என்பதை அறிவுறுத்துங்கள்.
- திருமுறைப் பாடல்களைப் பாடும்போது எழுந்து நின்று நெஞ்சிற்கு நேராகக் கைகளைக் கூப்பி பக்தியுடன் பாட வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.




**படிமுறை 2**

- '**திருச்சிற்றம்பலம்**' என்னும் அடியைத் தெளிவாக உச்சரித்துக் காட்டுங்கள்.
- அவ்வடியைச் சரியாக உச்சரித்துப் பழகுவதற்கு மாணவர்களுக்குப் பயிற்சியளியுங்கள்.
- அவ்வடியை மாணவர்கள் சுயமாகக் கூறுவதற்குப் பயிற்சியளியுங்கள்.
- மாணவர் ஒவ்வொருவரும் சரியாக உச்சரிப்பதை உறுதிப்படுத்துங்கள்.

திருச்சிற்றம்பலம்

### செயற்பாடு 2

**படிமுறை 1**

- முன்னர் கற்ற திருஞானசம்பந்தர் கதையை நினைவுபடுத்தி '**தோடுடைய செவியன்**' என்னும் தேவாரத் திருப்பதிகத்தைப் பாடியருளியவர் திருஞானசம்பந்தர் என்பதை மீண்டும் அறிமுகம் செய்யுங்கள்.
- செயல்நூலில் தரப்பட்டுள்ள '**தோடுடைய செவியன்**' எனும் தேவாரப் பதிகத்தை தெளிவாக உச்சரித்து **திருச்சிற்றம்பலம்** என்று கூறி ஆரம்பித்துப் பண்ணோடு பாடிக்காட்டுங்கள்.
- மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.

**படிமுறை 2**

- ஆசிரியர் தேவாரப் பதிகத்தின் ஒவ்வொரு அடியிலும் உள்ள சொற்களைத் தெளிவாக உச்சரித்துக் காட்டுவதுடன், மாணவர்களையும் தெளிவாக உச்சரிக்கப் பழக்குங்கள்.

**திருச்சிற்றம்பலம்**

தோடுடைய செவியன்விடை
யேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந்
தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய
பெம்மானிவ னன்றே.

**திருச்சிற்றம்பலம்**

- பாடல் அடிகள் மாணவர்களுக்கு நன்கு பரிச்சயமானதும் ஆசிரியர் ஒவ்வொரு அடியையும் பண்ணோடு பாடிக்காட்டி மாணவர்களையும் ஒவ்வொரு அடியையும் தெளிவாக உச்சரித்துப் பண்ணோடு பாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- பின்னர் ஆசிரியருடன் சேர்ந்து மாணவர்களைப் பாடச் செய்யுங்கள்.
- மாணவர்களைக் குழுவாகவும் தனித்தனியாகவும் பாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- திருமுறைகளைப் பாடும்போது தொடர்ச்சியாகவே கைகூப்பி நின்று பாடும் கொண்ணிலையை அனுசரிப்பதையும் **திருச்சிற்றம்பலம்** என்று கூறிப் பாடுவதையும் உறுதிப்படுத்துங்கள்.

**படிமுறை 3**

- வீட்டிலும் பாடசாலையிலும் பிரார்த்தனையின்போது திருமுறைப் பாடல்களைப் பக்தியுடன் பாடவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
- தேவாரப்பதிகங்களின் பொருளினை ஆசிரியர் நன்கு விளங்கிக்கொள்வதோடு மாணவர்களுக்கும் மிக இலகுவான முறையில் தெளிவுபடுத்துங்கள்.
- அதுமட்டுமன்றி சைவ சமய நிகழ்வுகள் எங்கு நடைபெற்றாலும் அங்கே திருமுறைப் பாடல்கள் பாடப்படுகின்றது என்பதை எடுத்துக் கூறுவதன் ஊடாக மாணவர்கள் திருமுறைப்பாடல்களின் சிறப்பை உணர்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஆலய வழிபாட்டின்போது திருமுறைப்பாடல்கள் பாடப்படும் பாரம்பரியத்தையும் தெளிவுபடுத்துங்கள்

## செயற்பாடு 3

**படிமுறை 1**

- வகுப்பறையில் ஒலி நாடாவில் அல்லது இறுவட்டில் உள்ள தேவாரப் பாடலை ஒருமுறை முழுமையாக ஒலிக்கச் செய்யுங்கள்.
- மாணவர்களை செவிமடுக்கச் செய்யுங்கள்.

- மீண்டும் ஒவ்வொரு அடியாக ஒலிக்கச் செய்யுங்கள்.
- பாடல் ஒலித்துக்கொண்டிருக்கும் போது இடையிடையே நிறுத்தி செவிமடுக்கச் செய்யுங்கள்
- ஒலித்த பாடலை மீண்டும் மாணவர் செவிமடுக்க வழிப்படுத்தி ஆசிரியர் சேர்ந்து பாடிக்காட்டுங்கள்
- மாணவர்களை ஒலிநாடாவுடன் சேர்ந்து பாட வழிப்படுத்துங்கள்
- செயல்நூலில் தரப்பட்டுள்ள பாடலை மனனம் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 4

**படிமுறை 1**

- **'தலையே நீ வணங்காய்'** தேவாரப் பதிகம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.
- இத் தேவாரப் பதிகத்தைப் பாடியருளியவர் **திருநாவுக்கரசர்** என்பதை எடுத்துக் கூறுங்கள்.
- ஆசிரியர் தேவாரப் பதிகத்தின் ஒவ்வொரு அடியிலும் உள்ள சொற்களைத் தெளிவாக உச்சரித்துக் காட்டுவதுடன், மாணவர்களையும் தெளிவாக உச்சரிக்கப் பழக்குங்கள்.
- தேவாரப்பதிகத்தின் பொருளினை ஆசிரியர் மாணவர்களுக்கும் மிக இலகுவான முறையில் தெளிவுபடுத்தி அதன் சிறப்பை உணர்த்துங்கள்.
- திருமுறைப்பாடல்கள் தொடர்பாக செயற்பாடு **1, 2 மற்றும் 3 இல்** குறிக்கப்பட்டுள்ள படிமுறைகளைப் பின்பற்றி '**தலையே நீ வணங்காய்**' தேவாரப் பதிகத்தை தெளிவாக உச்சரித்துப் பாடுவதற்கும் மனனம் செய்வதற்கும் வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 5

**படிமுறை 1**

- '**ஓம் நம பார்வதி பதேயே**' , '**அரஹரமகாதேவா**' என்னும் வாசகம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.
- அவ் அடியைத் தெளிவாக உச்சரித்துக் காட்டுங்கள்.
- '**ஓம் நம பார்வதி பதயே**' , '**அரஹரமகாதேவா**' என்று நாம் கூறுவதற்கான காரணத்தை மாணவர்களுக்குத் தெளிவு படுத்துங்கள்.
  - சிவபெருமானின சக்தி உமாதேவியார் என்பது
  - அவருக்குப் பார்வதி என்னும் திருநாமம் உள்ளது என்பது
  - மகாதேவன் என்பது சிவபெருமானின் மற்றுமொரு திருநாமம் என்பது
  - பார்வதிதேவிக்குப் பதியாக இருக்கின்றார் என்பது
  - கோயில்களிலும் பிரார்த்தனையின்போதும் ஒருவர் "**ஓம் நம பார்வதி பதயே**" எனக்கூறும்போது மற்றவர்கள் அதற்கு "**அரஹரமகாதேவா**" எனக்கூறுவதற்கு இதுவே காரணம் என்பது
- தோத்திரப் பாடல்களைப் பாடியதன் பின்னரும் பிரார்த்தனையின் பின்னரும் எல்லோரும் பக்தியோடு '**ஓம் நம பார்வதி பதயே**' , '**அரஹரமகாதேவா**' எனக் கூறவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

- பக்தியோடு இவ்வாறு உரத்துக் கூறும்போது எம்மைச்சுற்றியுள்ள தீயவை எல்லாம் விலகிவிடும் என்னும் நம்பிக்கையை மாணவர்களுக்கு உணர்த்துங்கள்.
- சரியாக உச்சரித்துப்பழகுவதற்கு மாணவர்களுக்குப் பயிற்சியளியுங்கள்.
- மாணவர்கள் குழுவாகவும் தனித்தனியாகவும் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- செயல்நூலில் தரப்பட்டுள்ள இந்த அடியைப் பார்த்து மாணவர் ஒவ்வொருவரும் சரியாக உச்சரிப்பதை உறுதிப்படுத்துங்கள்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது :-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| செயலாற்றுகைத் தர நியமம் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | | பாண்டித்திய மட்டத்திற்கு தொலைவில் உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 04 | நிலை 03 | நிலை 02 | நிலை 01 |
| 5.1 திருமுறைப் பாடல்களைச் செவிமடுத்துப் பக்தியுடன் பண்ணோடு பாடுவார். | 5.1.1 | திருஞானசம்பந்தர் பாடிய முதல் பதிகத்தின் முதல் பாடலை கூறி சந்தர்ப்பத்தையும் குறிப்பிடுவார். | திருஞானசம்பந்தர் பாடிய முதல் பதிகத்தின் முதல் பாடலைப் குறிப்பிடுவார். | திருஞானசம்பந்தர் பாடிய முதல் பதிகத்தின் முதல் பாடலை மற்றவர் உதவியுடன் குறிப்பிடுவார். | திருஞானசம்பந்தர் பாடிய முதல் பதிகத்தின் முதல் பாடலை குறிப்பிட இடர்படுவார். |
| | 5.1.2 | ''தோடுடைய செவியன்....'' என்ற முதல் பதிகத்தின் முதல் பாடலைக் பக்தியுடனும் பண்ணுடன் முறையாகப் பாடுவார். | ''தோடுடைய செவியன்....'' என்ற முதல் பதிகத்தின் முதல் பாடலைப் பண்ணுடன் பாடுவார். | ''தோடுடைய செவியன்....'' என்ற முதல் பதிகத்தின் முதல் பாடலை மற்றவர் உதவியுடன் பாடுவார். | ''தோடுடைய செவியன்....'' என்ற முதல் பதிகத்தின் முதல் பாடலைப் பாடுவதற்கு இடர்படுவார். |
| | 5.1.3 | ''தோடுடைய செவியன்....'' என்ற பாடலின் ஐந்து இடைவெளிகளையும் முறையாக எழுதிக் காட்டுவார். | ''தோடுடைய செவியன்....'' என்ற பாடலின் நான்கு இடை- வெளிகளை யேனும் முறையாக எழுதிக் காட்டுவார். | ''தோடுடைய செவியன்....'' என்ற பாடலின் மூன்று இடை - வெளிகளை யேனும் முறையாக எழுதிக் காட்டுவார். | ''தோடுடைய செவியன்....'' என்ற பாடலின் இரண்டு அல்லது ஒரு இடை வெளியை யேனும் முறையாக எழுதிக் காட்டுவார். |
| 5.2 திருநாவுக்கரசர் பாடிய ''தலையே நீ.....'' என்ற பதிகத்தை | 5.2.1 | திருநாவுக்கரசர் பாடிய ''தலையே நீ......'' என்ற பாடலை பக்தியுடனும் பண்ணுடன் முறையாகப் பாடுவார். | திருநாவுக்கரசர் பாடிய ''தலையே நீ......'' என்ற பாடலை பண்ணுடன் பாடுவார். | திருநாவுக்கரசர் பாடிய ''தலையே நீ......'' என்ற பாடலை மற்றவர் உதவியுடன் பாடுவார். | திருநாவுக்கரசர் பாடிய ''தலையே நீ......'' என்ற பாடலை பாடுவதில் இடர்படுவார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரசனையுடன் பாடுவார். | | | | | |
| | 5.2.2 | ‘‘தலையே நீ வணங்காய்.....’’ என்ற பதிகத்தின் நான்கு அடிகளை ஒழுங்குபடுத்தி சரியான முறையில் எழுதுவார். | ‘‘தலையே நீ வணங்காய்.....’’ என்ற பதிகத்தின் அடிகளை எழுதுவார். | ‘‘தலையே நீ வணங்காய்.....’’ என்ற பதிகத்தின் அடிகளை மற்றவர் உதவியுடன் எழுதுவார். | ‘‘தலையே நீ வணங்காய்.....’’ என்ற பதிகத்தின் அடிகளை எழுதுவதில் இடர்படுவார். |
| 5.3 சமய வாசகங்களை அறிந்து வாழ்வில் பயன்படுத்துவார். | 5.3.1 | சமய வாசகமான ‘‘ஓம் நமப் பார்வதி பதயே’’ ‘‘அரஹர மகா தேவா’’ என்ற வாசகத்தினை முறையான உச்சரிப்புடன் ஓதுவார். | சமய வாசகமான ‘‘ஓம் நமப் பார்வதி பதயே’’ ‘‘அரஹர மகா தேவா’’ என்ற வாசகத்தினை ஓதுவார். | சமய வாசகமான ‘‘ஓம் நமப் பார்வதி பதயே’’ ‘‘அரஹர மகா தேவா’’ என்ற வாசகத்தினை மற்றவர் உதவியுடன் ஓதுவார். | சமய வாசகமான ‘‘ஓம் நமப் பார்வதி பதயே’’ ‘‘அரஹர மகா தேவா’’ என்ற வாசகத்தினை ஓதுவதில் இடர்படுவார். |

**வாழ்நாள் பிரயோகம்**

தனது வாழ்வின் இறைவழிப்பாட்டின் போது தோத்திரப்பாடல்களைப் பண்ணுடன் பாடி வழிப்படுதல்.

**எண்ணக்கரு – ஒழுகலாறு விழுமியங்கள்**

**அலகு 06 – ஆசிரியரை மதிப்போம்**

## அறிமுகம்

**மாதா, பிதா, குரு தெய்வம் என்பதற்கிணங்க "அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞானத்தை போதிப்பவர் குரு" எழுத்தறிவித்த ஆசிரியரை எப்போதும் போற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துவது இப்பாடத்தினூடாக எதிர்ப்பார்க்கப்படுகின்றது.**

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 6.0<br>சிறந்த பிள்ளை என்ற வகையில் பின்பற்ற வேண்டிய விதி முறைகளைக் கடைப்பிடிப்பார் | எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்பதற்கு இணங்க ஆசிரியரை மதித்து நடப்போம். | 6.1<br>சிறந்த பிள்ளை என்ற வகையில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை இனங்காண்பார். | 6.1.1<br>சிறந்த பிள்ளைகளாக வாழ்வதற்கு கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகளைக் கூறுவார். |
| | | 6.2<br>பெரியோர்களை மதிக்கும் பண்பினை பின்பற்றுவார். | 6.2.1<br>எம்மைவிட பெரியோர்கள் யார் எனக் கூறுவார்.<br><br>6.2.2<br>பெரியோர்களுடன் மரியாதையுடன் செயற்படுவார் |
| | | 6.3<br>ஆசிரியரை மதித்து செயற்படுவார். | 6.3.1<br>நாற்குரவர்களை அறிவார்.<br><br>6.3.2<br>எழுத்தறிவித்தவர் யார் என்பதைக் கூறுவார்.<br><br>6.3.3<br>ஆசிரியரை மதித்து ஒழுகுவார்.<br><br>6.3.4<br>ஆசிரியரைப் பற்றி ஒரு பாடலைப் பாடுவார். |
| | | 6.4<br>தான் ஒரு சிறந்த பிள்ளையாக செயற்படுவார். | 6.4.1<br>சைவ நற்பண்புகைளக் கடைப்பிக்கும் ஒழுக்க விழுமியங்கள் சிலவற்றைக் குறிப்பிடுவார்.<br><br>6.4.2<br>தமது வாழ்வில் ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிப்பார். |

**கற்றல் வளங்கள்**

பதாதை செய்வதற்குத் தேவையான பொருள்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

செயற்பாடு 1

படிமுறை 1

- மாணவர்களை வகுப்பறையில் அரைவட்ட வடிவில் அமரச்செய்யுங்கள்.
- பின்வரும் வினாக்களை வினவி அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
    - நாம் யார் யாரை மதிக்க வேண்டும்?
    - அவர்களை ஏன் நாம் மதிக்க வேண்டும்?
    - அவர்களை எவ்வாறு மதிக்க வேண்டும்?
- மாணவர்கள் சுயமாகத் தமது கருத்துகளை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கிக் கலந்துரையாடுங்கள்.

படிமுறை 2

- தாமாகமுன்வரும் மாணவர்கள் நால்வரை முன்னால் அழைத்து, செயல்நூலிலுள்ள ஆசிரியரை மதிப்போம் உரையாடலை வாசிக்கச் செய்யுங்கள்.
- இன்னுமொரு குழுவினர் வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாட உள்ளடக்கத்தை மாணவர்கள் கிரகித்துள்ளார்களா என்பதை வினாக்களைக் கேட்பதன் மூலம் உறுதி செய்து கொள்ளுங்கள்.
  உதாரணம்- உரையாடலில் பங்குபற்றியோர் யாவர்?
  பிள்ளைகள் எத்தனை பேர்?
  வகுப்பில் அன்று என்ன படித்திருந்தார்கள்?
  எழுத்து அறிவித்தவன் இறைவன் என்றால் என்ன?

படிமுறை 3

- மாணவர் எண்ணிக்கைக்கேற்ப அவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- மாணவர் அனைவரும் உரையாடலில் பங்கேற்பதை உறுதிசெய்யுங்கள்.

செயற்பாடு 2

படிமுறை 1

- பதாதை தயாரிக்கும் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- பின்வரும் வாசகங்களைக் காட்சிப்படுத்துங்கள்.

ஆசிரியர் கண்கண்ட தெய்வம்

ஆசிரியரைப் பணிநது வணங்குவோம்.

ஆசிரியர் சொற்படி நடப்போம்

ஆசிரியருக்கு எப்போதும் உதவுவோம்.

- ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு பதாதை தயாரிப்பதற்கு தேவையான பொருள்களை வழங்கி மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் பதாதையை உயர்த்திப் பிடித்தபடி வாசகத்தை உரத்து வாசிப்பதற்குப் பயிற்சியளியுங்கள் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் தனித்தனியாக வாசகத்தை உரத்து வாசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படிமுறை 2

- செயல்நூலிலுள்ள பயிற்சிகளைப் பூரணப்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது :-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| செயலாற்றுகைத் தர நியமங்கள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | பாண்டித்திய மட்டத்திற்கு தொலைவில் உள்ளார் |
|---|---|---|---|
| | | நிலை 02 | நிலை 01 |
| 6.1<br>சிறந்த பிள்ளை என்ற வகையில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை இனங்காண்பார் | 6.1.1 | சிறந்த பிள்ளைகளாக வாழ்வதற்கு கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகள் இரண்டினைக் கூறுவார். | சிறந்த பிள்ளைகளாக வாழ்வதற்கு கடைபிடிக்க வேண்டிய நற்பண்பு ஒன்றையேனும் கூறுவார். அல்லது கூற இடர்படுவார். |
| 6.2<br>பெரியோர்களை மதிக்கும் பண்பினை பின்பற்றுவார். | 6.2.1 | எம்மை விட பெரியோர்கள் யார் எனக் கூறுவார். | எம்மை விட பெரியோர்கள் யார் எனக்கூற இடர்படுவார். |
| | 6.2.2 | ஆசிரியர்களுக்கு மரியாதை கொடுத்து செயற்படுவார். | ஆசிரியர்களுக்கு மரியாதை கொடுத்து செயற்படுவதற்கு இடர்படுவார். |
| 6.3<br>ஆசிரியரை மதித்து செயற்படுவார். | 6.3.1 | நாற்குரவர்களான மாதா, பிதா, குரு, தெய்வம் என்போரைக் கூறுவார். | நாற்குரவர்களான மாதா, பிதா, குரு, தெய்வம் என்போரைக் கூற இடர்படுவார். |
| | 6.3.2 | எழுத்தறிவித்தவர் ஆசிரியர் என்பதை எடுத்துரைப்பார். | எழுத்தறிவித்தவர் யார் என்பதைக் கூறுவதற்கு இடர்படுவார். |
| | 6.3.3 | ஆசிரியர்களை எந்நேரமும் மதித்து ஒழுகுவார். | ஆசிரியர்களை மதித்து செயற்படுவதில் பின்வாங்குவார். |
| | 6.3.4 | ஆசிரியரைப் பற்றி ஒரு பாடலைப் பாடுவார். | ஆசிரியரைப் பற்றி ஒரு பாடலைப் பாடுவதற்கு இடர்படுவார். |
| 6.4<br>தான் ஒரு சிறந்த பிள்ளையாக செயற்படுவார். | 6.4.1 | சைவ நற்பண்புகளைக் கடைப்பிக்கும் ஒழுக்க விழுமியங்கள் மூன்றினைக் குறிப்பிடுவார். | சைவ நற்பண்புகளைக் கடைப்பிக்கும் ஒழுக்க விழுமியம் ஒன்றினைக் குறிப்பிடுவார். |
| | 6.4.2 | தமது வாழ்வில் ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிப்பார். | தமது வாழ்வில் ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிப்பதில் இடர்படுவார். |

**வாழ்நாட்பிரயோகம்**

ஆசிரியரை எப்பொழுதும் மதித்துப் போற்றுதல்

**எண்ணக்கரு – சிரத்தை சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**

**அலகு 07 – மகிழ்ந்து உண்போம்**

## அறிமுகம்

**பூமியில் பிறந்த அனைத்து உயிரினங்களும் தாம் உயிர்வாழ்தற்கு, இன்றியமையாத ஒன்று உணவாகும். போசாக்கு மிக்கதாகவும் ஆரோக்கியத்தை தரக்கூடியதுமான உணவை முறையாக உட்கொண்டு மகிழ்ச்சியாக வாழ்வதே இப்பாடத்தினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.**

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 07. சிறப்பான நாளாந்த வாழ்க்கைக் கோலத்திற் காகச் சிறந்த சுகாதாரப் பழக்கவழக்கங் களைக் கடைப்பிடிப்பார் | நாம் உயிர்வாழ்வதற்கு அடைப்படை ஆதாரமாக இறைவன் எமக்கு அளித்த உணவை மதித்து, சுகாதார முறைளையும் கடைப்பிடித்து உண்ணுதல்.. | 7.1 சிறப்பான நாளாந்த வாழ்க்கை முறைகளை ஒழுங்கு முறையில் கூறுவார். | 7.1.1 நாம் நாளாந்தம் உணவு உட்கொள்ளும் ஒழுங்கு முறையினைக் கூறுவார். |
| | | 7.2 சிறந்த சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றுவார். | 7.2.1 உணவை உட்கொள்வதற்கு முன், உட்கொள்ளும் போது, உட்கொண்ட பின் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதாரப் பழக்கங்களைக் கூறுவார். |
| | | 7.3 சைவ முறைப்படி உணவை உட்கொள்வார். | 7.3.1 சைவ முறைப்படி உணவு உட்கொள்ளும் முறையினை செயற்பாட்டு ரீதியாகச் செய்து காட்டுவார். |

**கற்றல் வளங்கள**

- **உணவுகள்**
- **உணவுப் பட அட்டைகள்**
- **காணொளிகள்**
- **வாழை இலை**
- **நீர்**

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

செயற்பாடு 1

படிமுறை 1

- மாணவர்களிடம் தாம் காலையில் என்ன உணவை உண்டீர்கள்? என வினாவுதல்.
    - ஏன் உணவு உட்கொள்கின்றோம்.?
    - எதற்காக உணவு உட்கொள்கின்றோம்.
    - நாம் எவ்வாறு உணவு உட்கொள்ள வேண்டும்.
- எவ்வகையான உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்று மாணவர்களிடம் வினாவி மாணவர்களின் கருத்துக்கு இணங்க, மேலே வினவப்பட்ட வினாக்களுக்கு விடைகளை எடுத்துக் கூறுங்கள்.
- சைவ உணவுகளின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறுங்கள்.

உதாரணம்.
தயிர், பழங்கள், பால், தாவர உணவுகள்.

- உணவை உட்கொள்வதற்கு முன்பும், உணவை உட்கொள்ளும் போதும், உட்கொண்ட பிறகும் நாம் எவ்வாறான சுகாதாரப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும் என மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**செயற்பாடு 02**

- வாழை இலையில் சைவ உணவுகளை பறிமாறும் முறை, அவற்றை அமர்ந்து உட்கொள்ளும் விதம் என்பவற்றை மாணவர்கள் போல செய்து நடித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.
- வாழை இலையில் உணவு உண்பதால் கிடைக்கும் பயன்களை எடுத்துக் கூறுங்கள்.
    - ஆரோக்கியம் மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தி
    - சுவை
    - சுத்தம் மற்றும் சுகாதாரம்
    - சுற்றுச் சூழல் நட்பு
    - பசியை துண்டல்
- எனவே உணவின் சுவையை மேம்படுத்துவதுடன் ஆரோக்கியம் மற்றும் சுற்றுச் சூழல் நன்மைகளையும் கருத்தில் கொண்டு எமது முன்னோர். வழை இலையில் உணவு உட்கொள்ளும் பழக்கத்தை பின்பற்றினார்கள் என மாணவர்களுக்கு வலியுறுத்துங்கள்.

- உரிய நேர்த்திற்கு உணவு உட்கொள்வதுடன் உணவை உட்கொள்வதற்கு தனியாக நேரத்தை ஒதுக்கி வீட்டில் அனைவருடனும் ஒன்றிணைந்து (ஒரு வேளையேனும்) கூட்டாக உட்கொள்ள அறிவுறுத்துங்கள்.

- உணவு உண்ணும் போது தொலைபேசி பயன்படுத்தல், தொலைக் காட்சிப்பார்த்தல், விளையாடுவது, கதைத்துக் கொண்டிருப்பது போன்ற செயற்பாடுகளை தவிர்த்து மன ஒருமைப்பாட்டுடன் உணவை உட்கொள்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 03**

- பெற்றோர்கள் உதவியுடன் மாணவர்களுக்கு சைவ உணவினை சைவ ஒழுகு முறைக்கமைய பரிமாறி சேர்ந்து உண்டு மகிழ்வதற்கு முன்னாயத்தம் ஒன்றினைச் செய்து கொள்ளுங்கள்.
- ஏதேனும் ஒரு நாளில் பாடசாலையில் வழங்கும் காலை போசாக்கு உணவையேனும் இச்செயற்பாட்டிற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.
- வாழை இலைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- பெற்றோர் உதவியுடன் சைவ உணவு வகைகளை தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.
- மாணவர்களை குழுக்களாக்கிக் கொள்ளுங்கள்.
- மாணவர்களை தரையில் விரிப்பினை விரித்து அதில் முறையாக அமர்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- வாழை இலை இட்டு தண்ணீர் தெளிக்கும் முறையினை மாணவர்களுக்கு செயற்பாட்டு ரீதியில் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களை மன ஒருமைப்பாட்டுடன் கீழ்ச் சிந்தாமல் உணவுகளை பரிமாறுவதற்கு வாய்ப்பளித்து வழிப்படுத்துங்கள்.
- எமக்கு இந்த உணவைக் கொடுத்த இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.
- முறையாக உணவை உட்கொள்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- உணவு உண்ட பின்னர் மாணவர்களே அவ்விடத்தை சுத்தப் படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.



**கவனத்திற்கொள்ள வேண்டியது :-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| கணிப்பீட்டு நியதிகள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | பாண்டித்திய மட்டத்திற்கு தொலைவில் உள்ளார் |
|---|---|---|---|
| | | நிலை 02 | நிலை 01 |
| 7.1 சிறப்பான நாளாந்த வாழ்க்கைமுறைகளை ஒழுங்கு முறையில் கூறுவார். | 7.1.1 | நாம் நாளாந்தம் உணவு உட்கொள்ளும் ஒழுங்கு முறையினைக் கூறுவார். | நாம் நாளாந்தம் உணவு உட்கொள்ளும் ஒழுங்கு முறையினைக் கூற இடர்படுவார். |
| 7.2 சிறந்த சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றுவார். | 7.2.1 | உணவை உட்கொள்வதற்கு முன், உட்கொள்ளும் போது, உட்கொண்ட பின் கடைப் பிடிக்க வேண்டிய சுகாதாரப் பழக்கங்களைக் கூறுவார். | உணவை உட்கொள்வதற்கு முன், உட்கொள்ளும் போது, உட்கொண்ட பின் கடைப் பிடிக்க வேண்டிய சுகாதாரப் பழக்கங்களைக் கூற இடர்ப்படுவார். |
| 7.3 சைவ முறைப்படி உணவை உட்கொள்வார். | 7.3.1 | சைவ முறைப்படி உணவு உட்கொள்ளும் முறையினை செயற்பாட்டு ரீதியாக செய்து காட்டுவார். | சைவ முறைப்படி உணவு உட்கொள்ளும் முறையினை செயற்பாட்டு ரீதியாக செய்து காட்ட இடர்படுவார். |

**வாழ்நாள் பிரயோகம்**

**நாம் ஆரோக்கியமான உணவுகளை சுகாதார முறைப்படி தினமும் உட்கொள்ள வழிப்படுத்தல்.**

**குடும்பத்தினருடன் ஒன்றிணைந்து வாழை இலையில் மன ஒருமைப்பாட்டுடன் சைவ உணவை உட்கொள்ள வழிப்படுத்தல்.**

# மூன்றாம் தவணை பாடத்திட்டம்
# தரம் 01

| எண்ணக்கரு | கற்றற்பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|---|
| ஒழுகலாறு, விழுமியங்களும் நியமங்களும் | 1.0 சிறந்த பிள்ளை என்ற வகையில் பின்பற்ற வேண்டிய விதி முறைகளைக் கடைபிடிப்பார். | பல்வேறுப்பட்ட இனத்தவர் களுடன் ஒற்றிணைக் கப்பட்ட எமது சூழலி நாம் மற்றவர்களின் உதவியை பல்வேறு சந்தர்ப்பங்களில் பெறுவதைப் போல் எம்மால் மற்றுவர்களுக்கு ஒரு சிறிய உதவியேனும் செய்வோம். | 1.1 சிறந்த பிள்ளையாக செயற்படுவார். | 1.1.1 சிறந்த பிள்ளையாக செயற்படுவதற்கான நல்ல விழுமியப்பண்புகளை கலந்துரையாடுவார்.<br><br>1.1.2 அவ்விழுமியப் பண்புகளில் பிறருக்கு உதவுதல் என்ற பண்பினை தன்வாழ்வில் கடைப்பிடிப்பதற்கான செயல்களில் ஈடுபடுவார். |
| | | | 1.2 மற்றவர்களுக்கு உதவி செய்யும் சிறந்த மனப்பாங்கு உள்ள பிள்ளைாகச் செயற்பாடுவார். | 1.2.1 தன்னால் இயன்ற உதவிகளை மற்றவர்களுக்கு செய்வதைப் போல், போலச் செய்து காட்டுவார். |
| சுற்றாடல் தொடர்பான கரிசனை | 2.0 தனது சுற்றுச் சூழலை சுத்தமாகவும், நேர்த்தியா கவும் பேணும் வகையில் செயல்படுவார் . | தனது வகுப்பறைச் சூழலை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப் பதற்கு சிறந்த முறையான 5S முறையினைப் பேணுவார். இதன் மூலம் தூய்மையில் இறைவனைக் காணுவார். | 2.1 தமது சுற்றுச்சூழலை சுத்தமாக பேணுவதற்கு ஒத்துழைப்பார். | 2.1.1 தமது பாடசாலை சூழலை சுத்தமாக பேணுவதற்கு செயல்ரீதியாக செயற்படுவார்.<br><br>2.1.2 தனது வகுப்பறையை சுத்தமாக பேணுவதற்கு ஒத்துழைப்பு நல்குவார். |
| | | | 2.2 சுற்றுச்சூழலை அழகாகவும் நேர்த்தியாகவும், முறையகவும் பேணும் வகையில் செயற்படுவார். | 2.2.1 வகுப்பறையை அழகாகவும் நேர்த்தியாகவும் முறையாகவும் பேணும் வகையில் செயல்படுவார்.<br><br>2.2.2 உபகரணங்களை முறையாகப் பயன்படுத்துவார்.<br><br>2.2.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஆக்கத்திறன் மிக்க ஆக்கங்களை முன்வைப்பார்.<br><br>2.2.4<br>சுத்தம் பேணுவதால் கிடைக்கும் நன்மைகளை எடுத்துரைப்பார். |
| ஒழுகலாறு, விழுமியங்களும் நியமங்களும் | 3.0<br>சிறந்த பிள்ளை என்ற வகையில் பின்பற்ற வேண்டிய விதி முறைகளைக் கடைபிடிப்பார். | ஒற்றுமை என்பது தனிநபர்கள், குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் நாடுகளின் வளர்ச்சிக்கு அவசியமான ஒரு பண்பாகும். இவற்றின் மூலம் அமைதி மற்றும் நல்லிணக்கம் செயல்பாடுகள் நிகழ்வதால் ஒரு ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சிகராமான வாழ்க்கைக்கு அவசியமான ஒரு வழிமுறையாக அமையும். | 3.1<br>சிறந்த பிள்ளை என்ற வகையில் ஒற்றுமையாக வாழ்வதற்கு செயற்படுவார். | 3.1.1<br>ஒற்றுமையாக வாழ்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.<br><br>3.1.2<br>ஒற்றுமையை வளர்ப்பது எப்படி என புரிந்துக்கொள்வார்.<br><br>3.1.3<br>தான் மற்றவர்களுடன் எந்நேரமும் ஒற்றுமையுடன் செயற்படுவார். |
| கலாசாரம் நாகரிகம் மற்றும் சமூகக் கலாசார உணர்வு | 4.0<br>சமயம் மற்றும் கலாசார வைபவங்களில் பங்கேற்று அனுபவத்தைப் பெறுவார். | சைவ பாடசாலைகளில் நடைபெறும் முக்கிய சமய விழாக்களில் சரஸ்வதி பூசையும் ஒன்றாகும். சக்தியின் வடிவமான துர்க்கை, லக்சுமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவிகளுக்காக கொண்டாடப் படும் | 4.1<br>விசேட சமய வைபவங்களில் செயல் ரீதியாக பங்கேற்பார். | 4.1.1<br>சரஸ்வதி பூசை எந்த தெய்வத்திற்காக அனுஷ்டிக்கப்படுகின்றது.<br><br>4.1.2<br>நவராத்திரியில் சரஸ்வதி பூசை எப்போது கொண்டாடப் படுகின்றது எனக் கூறுவார்.<br><br>4.1.3<br>சரஸ்வதி பூசை காலங்களில் சுய ஆக்கத்திறன் செயற்பாடுகளில் ஈடுபடுவார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நவராத்திரி காலத்தில் விஜயதசமிக்கு முதல் நாளே சரஸ்வதி பூசை ஆகும். | 4.2 விசேட கலாசார வைபவங்களில் பொருத்தமான ஆடைகளைப் பயன்படுத்துவார். | 4.2.1 சரஸ்வதிபூசைக் காலங்களில் ஆன்மீக சிந்தனைகளைப் பெறுவார்.<br><br>4.2.2 தமது கலாசார உடைகளை அணிந்து ஆலயங்களுக்குச் செல்வார். |
| | | | 4.3 விசேட சமய வைபவங்களில் மரபு ரீதியான கலாசார வழிமுறைகளைப் பின்பற்றுவார். | 4.3.1 பாடசாலையில் நடைபெறும் இக்கலாசார நிகழ்வுக்கு தன்னால் இயன்ற உதவிகளை மேற்கொள்வார்.<br><br>• மாலை கட்டுதல்<br>• குருத்தோலைப் பின்னுதல்<br>• பஜனை பாடுதல் |
| பண்புவிருத்தி | 5.0 சமயத்தை தோற்று வித்தவர் / வழிகாட்டி/ இறைவன் தொடர்பான சமயக் கதைகள் அறநூல்கள், காவியங்கள், புராணங்கள், திருமுறைகள், அறநெறிப் பாடல்களின் உதவியுடன் பண்பு விருத்திக்கான விசேட அம்சங்களை இனங் காண்பார். | சேக்கிழார் எனும் புலவரால் சைவசமயத்தின் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றையும் அவர்கள் சிவபெருமானின் மீது கொண்ட ஆழ்ந்த அன்பை விபரிக்கும் ஒரு படைப்பாற்றலே பெரிய புராணமாகும். இதற்கு இறைவனே அடியெடுத்துக் கொடுத்ததாக வரலாறு. | 5.1 பெரியபுராணத்தின் முதல் பதிகமான "உலகெலாம் உணர்ந்து...." என்ற திருமுறைப் பாடலை செவிமடுத்து தாளத்துடன் இசைப்பார். | 5.1.1 பெரியபுராணத்தை பாடியவர் யார் என்பதைக் கூறுவார்.<br><br>5.1.2 "உலகெலாம் உணர்ந்து...." என்ற பதிகத்தினை செவிமடுப்பார்.<br><br>5.1.3 "உலகெலாம் உணர்ந்து...." என்ற பதிகத்தினை இரசனையுடனும் பண்ணுடனும் பாடுவார். |
| பண்புவிருத்தி | 6.0 சமயத்தை தோற்று விதத்வர் / வழிகாட்டி/ இறைவன் தொடர்பான | ஔவையாரால் எழுதப்பட்ட அற நூல்களில் ஒன்றான ஆத்திச்சூடியை உயிர் எழுத்துக்களின் | 6.1 அறநூல், அறநெறிப்பாடல்களை செவிமடுத்து தாளத்துடன் இசைப்பார். | 6.1.1 அறநெறிப்பாடலில் ஆத்திச்சூடியை செவிமடுத்துக் கூறுவார்.<br><br>6.1.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமயக் கதைகள் அறநூல்கள், காவியங்கள், புராணங்கள், திருமுறைகள், அறநெறிப் பாடல்களின் உதவியுடன் பண்பு விருத்திக்கான விசேட அம்சங்களை இனங் காண்பார். | அடிப்படையில் உருவா க்கப்பட்ட இந்நூல் பல்வேறுப்பட்ட நல்ல அறக் கருத்துக்களை போதிப்பதின் ஊடாக சிறுவயதில் இருந்தே நல்லெண்ண த்திற்கு வித்திடக்கூடி யதாகக் காணப்ப டுகின்றது. | | ஆத்திச்சூடி பாடலை தாளத்துடன் இசைத்துக் காட்டுவார். |
| | | | 6.2<br>அறநூல்கள், அறநெறிப் பாடல்கள் மூலம் பெறத்தக்க படிப்பினைகளைக் கூறுவார். | 6.2.1<br>ஆத்திச்சூடியின் மூலம் நாம் பெறும் நல்லொழுக்கச் செயற்பாடுகளை எடுத்துக் கூறுவார். |
| | | | 6.3<br>ஆத்திச்சூடி என்ற அறநெறிப்பாடல் எடுத்துக்காட்டும் படிப்பினை தன்வாழ்வில் பயன்படுத்துவார். | 6.3.1<br>ஆத்திச்சூடி தொடர்பான கதை ஒன்றினைக் கூறுவார்.<br><br>6.3.2<br>அக்கதையில் தாம் பெற்றுக்கொள்ளும் நல்லொழுக்கச் செயற்பாடுகளை எடுத்துக் கூறுவார். |
| சிரத்தை சுகாதாரம் மற்றும் நல்லாழ்வு | 7.0<br>நாளாந்த செயற் பாடுகளின் போது மனதை ஒருமுகப் படுத்தி உரிய கவனத்துடன் செயல்படுவார் | ஒருவரின் எண்ணங்கள் உணர்வுகள் மற்றும் வெளிப்புற கவன சிதறல்களில் இருந்து மனதை விடுவித்து ஒரு அமைதியான மற்றும் தெளிவான நிலையை அடைவதை அடிப்படையாகக் கொண்டது தியானமாகும். | 7.1<br>எளிய தியானப் பயிற்சியில் ஈடுபடுவார். | 7.1.1<br>சரியான கொண்ணிலையைக் கொண்டு தியானப்பயிற்சியை மேற்கொள்வார்.<br><br>7.1.2<br>தியானப்பயிற்சியை மேற்கொள்ளும் போது உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளை எடுத்துக் கூறுவார்.<br><br>7.1.3<br>தினமும் தியானப்பயிற்சி செய்வதால் மனதில் எழும் ஆரோக்கியமான எண்ணங்களைக் கலந்துரையாடுவார். |

# உள்ளடக்கம்

**விடயம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 01. | பிறருக்கு உதவுவோம் | 01 - 03 |
| 02. | அழகிய வகுப்பறைச் சூழல் | 04 - 06 |
| 03. | ஒற்றுமையாக வாழ்வோம் | 07 - 08 |
| 04. | சரஸ்வதி பூசை | 09 - 11 |
| 05. | பெரிய புராணம் | 12 - 14 |
| 06. | ஆத்திச் சூடி | 15 - 18 |
| 07. | தியானம் செய்வோம் | 19 - 21 |

**எண்ணக்கரு : பண்புவிருத்தி**
**அலகு 01 : பிறருக்கு உதவுவோம்**

## அறிமுகம்

நாம் மனிதர்களாக வாழ்வதற்கு தமது வாழ்வில் உண்மையோதல், தருமம் செய்தல், விட்டுக்கொடுத்தல், பொறுமை, அன்பு, பகிர்துண்ணல், மற்றவர்க்கு உதவுதல் போன்ற விழுமிய பண்புகளை கடைபிடித்து வாழ்வோமானால் நல்ல ஒரு பிரஜையாக மாறலாம் அவற்றில் உதவும் மனப்பாங்கினை ஒழுகுவதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 01. சிறந்த பிள்ளை என்ற வகையில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளைக் கடைபிடிப்பார். | பிறருக்கு உதவும் மனப்பாங்கினை உருவாக்குதல் | 1.1 சிறந்த பிள்ளை என்ற வகையில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை இனங்காண்பார். | 1.1.1 தம்மால் மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடிய சந்தர்ப்பங்களை இனங்கண்டு கூறுவார். |
| | | 1.2 சிறந்த பிள்ளையாக செயற்படுவார். | 1.2.1 தன்னால் இயன்ற உதவிகளை செய்வதற்கு முன்வந்து உதவுவார். |

### கற்றல் வளங்கள்

- படக் கதைகள்
- பட அட்டைகள்
- காணொளி
- கதைகள்

### கற்றல் கற்பித்தல் அணுகுமுறை
**செயற்பாடு 1**
**படிமுறை 1**

- மாணவர்களை வெளியில் பொருத்தமான ஒரு சூழலுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- அவர்களை அரை வட்ட வடிவில் அமரவைத்துக் கொள்ளுங்கள்.
- தமது அன்றாட செயற்பாடுகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்கள் கூறும் விடைகள் ஊடாக, மாணவர்கள் கூறும் கருத்துக்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- மாணவர்கள் கூறும் அன்றாட செயற்பாடுகளைச் செய்வதற்கு எமக்கு யார் யார் உதவுவார்கள் என வினாவுக.
  **உதாரணம்**
  - நீங்கள் பாடசாலைக்கு எவ்வாறு வந்தீர்கள்.?
  - நீங்கள் அணியும் சீருடையை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள்?
- ஆகவே எமக்கு தனித்து வாழ முடியாது. நாம் வாழ்வதற்கு மற்றவர்கள் எமக்கு உதவி செய்கின்றார்கள் என்பதை மாணவர்களுக்கு தெளிவுப்படுத்துங்கள்.

- தமது பெற்றோர் தமக்கு உதவும் விதம் என்பவற்றை பற்றியும் மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- இவ்வாறு உதவும் எமது பெற்றோருக்கு நாமும் உதவ வேண்டும். என்பதை மாணவர்களுக்கு வலியுறுத்தவும்.

## செயற்பாடு 2

**படிமுறை 1**

- தன்னால் மற்றவர்களுக்கு எவ்வாறான உதவிகளை செய்ய முடியும் என்பதனை வினாவுங்கள்.
- ஏன் நாம் உதவி செய்ய வேண்டும்.?
  என்ற வினாக்களுக்கு மாணவர்களின் பதில்களில் இருந்து அவர்களின் மனதில் மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற மனப்பாங்கினை உருவாக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களை சிறிய சிறிய உதவிகளை செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- எமக்கு உதவி செய்பவர்களுக்கு நாம் நன்றி சொல்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- மற்றவர்கள் எமக்கு செய்த உதவியினை மறக்க கூடாது என்ற எண்ணத்தினை உருவாக்குங்கள்.
- உதவி புரிதல் தொடர்பான சிறு கதைகளை தேடி மாணவர்களுக்கு கூறுங்கள்.

**"யாருடைய கை வாங்குவதற்கு நீள்கின்றதோ அவன் மிகத் தாழ்ந்தவன்: யாருடைய கை கொடுப்பதற்கு நீள்கின்றதோ அவன் மிக உயர்ந்தவன்."**

**- சுவாமி விவேகானந்தர்-**

- மாணவர்களை அதனை கூறுவதற்கோ அல்லது வாசிப்பதற்கோ வழிப்படுத்துங்கள்.

**"பயனை எதிர்பாராமல் உதவி செய்"**

## செயற்பாடு 3

**படிமுறை 1**

- மாணவர்களை பொருத்தமான ஒரு சூழலுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவர்களை குழுக்களாக பிரித்து கொள்ளுங்கள்.
- மாணவர்கள் தம்மால் இயன்ற உதவிகளை செய்வதனை போல் செய்து காட்ட உதவுங்கள்.
- அதனை நடகமாக நடித்துக்காட்ட மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 4

**படிமுறை 1**

செயல் நூலில் உள்ள செயற்பாடுகளை செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
இயலாத மாணவர்களுக்கு உதவி புரியுங்கள்.

**கவனத்திற்கொள்ளவேண்டியது:-**

**செயற்பாட்டில் ஈடுபடும் எல்லா சந்தர்ப்பங்களிலும் இடர்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி வழிப்படுத்துங்கள்**

| செயலாற்றுகைத் தர நியமங்கள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | | பாண்டித்திய மட்டத்திற்கு தொலைவில் உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 04 | நிலை 03 | நிலை 02 | நிலை 01 |
| 1.1 சிறந்த பிள்ளை என்ற வகையில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை இனங்காண்பார். | 1.1.1 | தம்மால் மற்றவர்களுக்கு உதவி செய்யக் கூடிய 05 சந்தர்ப்பங்களை கூறுவார். | தம்மால் மற்றவர்களுக்கு உதவி செய்யக் கூடிய 03 சந்தர்ப்பங்களை யேனும் கூறுவார். | தம்மால் மற்றவர்களுக்கு உதவி செய்யக் கூடிய 02 சந்தர்ப்பங்களை யேனும் கூறுவார். | தம்மால் மற்றவர்களுக்கு உதவி செய்யக் கூடிய ஒரு சந்தர்ப்பததையே னும் கூறுவார் அல்லது கூற இடர்படுவார். |
| 1.2 சிறந்த பிள்ளையாக செயற்படுவார். | 1.2.1 | ஏனையவர் களுக்கு செய்யக்கூடிய உதவிகளை நாடகமாக நடித்துக்காட்வார். | உதவிகளை செய்யும் முறைகளை போல் செய்துக்காட்டு வார். | உதவி செய்யும் முறைகளைக் கூறுவார். | உதவி செய்யும் முறைகளை நடிக்கவோ கூறவோ எத்தனிப்பார். |

## வாழ்நாள் பிரயோகத்திற்காக

- தனது வாழ்வில் மற்றவர்களை மதித்து தன்னால் இயன்ற உதவிகளை செய்வதையும் மற்றவர்கள் எமக்கு செய்த உதவிகளை மறக்கமலும் வாழ வழிப்படுத்தல்.

**எண்ணக்கரு : சுற்றாடல் தொடர்பான கரிசனை**
**அலகு 02 : அழகிய வகுப்பறைச் சூழல்**

## அறிமுகம்

தனது வகுப்பறையை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் முறையாக பேணுதலே இப்பாடத்தினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 02. தனது சுற்றுப்புறச் சூழலை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் பேணும் வகையில் செயற்படுவார். | தாம் கல்வி கற்கும் வகுப்பறையை சுத்தமாக ஒழுங்குப்படுத்த மட்டுமன்றி உற்பத்தித் திறனையும் வினைத் திறனையும் மேம்படுத்த ஜப்பானிய 5S எண்ணக்கருவை செயற்படுத்தல். | 2.1 தமது அயற்சூழலை சுத்தமாகப் பேணுவதற்கு ஒத்துழைப்பார். | 2.1.1 வகுப்பறையை ஒழுங்குபடுத்துவதற்கான முறைகளைக் கூறுவார்.<br>2.1.2 தனது நண்பர்களுடன் செயற்பாட்டு ரீதியாக ஒத்துழைப்பார். |
| | | 2.2 அயற்சூழலை அழகாகவும் நேர்த்தியா கவும் பேணும் வகையில் செயற்படுவார். | 2.2.1 நேர்த்தியாக பேணுவதற்கான 5S ஒழுங்கு முறைகளை கூறுவார்.<br>2.2.2 5S முறைக்கமைய தனது வகுப்பறைச் சூழலை ஒழுங்கு படுத்துவதில் செயற்பாட்டு ரீதியாக பங்கெடுத்துக் கொள்வார். |

### கற்றல் வளங்கள்
படங்கள்
தூசி துடைப்பான்
வகுப்பறை சுத்தம் செய்வதற்கு தேவையான உபகரணங்கள்.

### கற்றல் கற்பித்தல் அணுகுமுறை
### செயற்பாடு 1
**படிமுறை 1**
- பாடசாலை நிறைவடையும் நேரங்களில். மாணவர்களை தமது வகுப்பறையை அவதானிக்கச் செய்தல். (முதல் நாள்)
- மாணவர்களை வகுப்பறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கலந்துரையாடச் செய்தல்.
- வகுப்பறையை ஒழுங்கு செய்ய என்ன செய்யலாம்? என்பதனை மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- ஜப்பானிய 5S முறையினை மாணவர்களுக்கு அறிமுகம் படுத்தல்.

5S ஒழுங்குபடுத்தல் முறை

**இந்த ஒழுங்குபடுத்தல் முறையாமையானது ஆசிரியர்கள் விளங்கிகொள்வதற்கு மாத்திரமே மாணவர்களுக்கு இதனை பெயர் வடிவில் வலியுறுத்தாது செயற்பாடு ரீதியாக செயல்படுத்த வழிகாட்டுங்கள்.**

1. **வகைப்படுத்தல் (செய்றி** - Seiri)
   சுற்றாடலில் காணப்படும் தேவையற்ற பொருள்களை இணங்கண்டு அகற்றுதல்.

2. **ஒழுங்குபடுத்தல் (செய்டன்** - Seiton)
   தேவையான பொருள்களை வகைப்படுத்தி, பொருத்தமான இடத்தில் முறையாக அடுக்குதல்.

3. **தூய்மைப்படுத்தல் (செய்சோ** - Seiso)
   தூசுகள் குப்பைக் கூழங்கள் அற்ற வகையில் தினமும் தூய்மைப்படுத்தல்.

4. **நியமப்படுத்தல் (செய்கெட்சு** - Seiketsu)
   தூய்மையாகப் பராமரிக்கும் வழிமுறைகளை ஒழுங்குபடுத்தல்.

5. **ஒழுங்காகப் பேணுதல் (சிட்சுகே** - Shitsuke)
   மேலே குறிப்பிட்ட நான்கு வழி முறைகளையும் ஒழுங்காகத் தொடர்ந்து தக்கவைத்தல்.

இவ்வகையாக மாணவர்களை வகுப்பறையை சுத்தப்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 02**

- வகுப்பறையை 5S முறை அடிப்படையில் செயல் ரீதியாக மாணவர்கள் துலங்குவதற்கு வழிகாட்டுங்கள்.
- ஐந்து செயற்பாடுகளை ஒவ்வொரு மாணவர்களும் செயல்படுத்துகின்றார்களா? என்று மதிப்பீடு செய்து கொள்ளுங்கள்.
- வகுப்பறை சுத்தத்தில் மாத்திரம் இன்றி மாணவர்களை வெளியில் அழைத்துச் சென்று 5S முறை அடிப்படையான இச் செயற்பாட்டில் மாணவர்கள் சுயமாகவே இயங்குவதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு நாளும் தனது புத்தகப் பை 5S முறை அடிப்படையில் ஒழுங்குப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- செயல் நூலில் தமது வகுப்பறையை நிறந்தீட்டுவோம் என்ற செயற்பாட்டினை முறையாக செய்வதற்கு வழிப்படுத்துக.
- செயல் நூலில் உள்ள வகைப்படுத்தல் செயற்பாட்டினை செய்வதற்கு வழிப்படுத்துக.
- வகுப்பறையை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைப்பதால் கிடைக்கும் நன்மைகளை மாணவர்களை கூறுவதற்கு வழிப்படுத்துக.

**கவனத்திற்கொள்ள வேண்டியது:-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| செயலாற்றுகை தர நியமங்கள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | பாண்டித்திய மட்டத்திற்கு தொலைவில் உள்ளார் |
|---|---|---|---|
| | | **நிலை 02** | **நிலை 01** |
| 2.1<br>தமது அயற்சூழலை சுத்தமாகப் பேணுவதற்கு ஒத்துழைப்பார். | 2.1.1 | வகுப்பறையை ஒழுங்குபடுத்துவதற்கான முறைகள் இரண்டினைக் கூறுவார். | வகுப்பறையை ஒழுங்குபடுத்துவதற்கான முறை ஒன்றையேனும் கூற இடர்படுவார். |
| | 2.1.2 | சுயமாகவோ அல்லது தனது நண்பர்களுடன் இணைந்து வகுப்பறையை ஒழுங்குப்படுத்துவார். | சுயமாகவோ அல்லது தனது நண்பர்களுடன் இணைந்து வகுப்பறையை ஒழுங்குப்படுத்துவதில் ஆர்வம் காட்டாது இருப்பார். |
| 2.2<br>அயற்சூழலை அழகாகவும் நேர்த்தியாகவும் பேணும் வகையில் செயற்படுவார். | 2.2.1 | நேர்த்தியாக பேணுவதற்கான 5S ஒழுங்கு முறையில் ஏதேனும் ஒன்று அல்லது இரண்டினை தனது மொழிநடையில் வெளிப்படுத்துவார். | நேர்த்தியாக பேணுவதற்கான 5S ஒழுங்கு முறையில் ஒன்றையேனும் தனது மொழிநடையில் வெளிப்படுத்த இடர்படுவார். |
| | 2.2.2 | சுயமாக அல்லது நண்பர்களுடன் இணைந்து 5S முறைக்கமைய தனது வகுப்பறைச் சூழலை ஒழுங்குபடுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுவார். | சுயமாக அல்லது நண்பர்களுடன் இணைந்து 5S முறைக்கமைய தனது வகுப்பறைச் சூழலை ஒழுங்குபடுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டாமல் இருப்பார். |

## வாழ்நாள் பிரயோகத்திற்காக

- வகுப்பறைச் சூழலிலும், பாடசாலைச் சூழலிலும், வீட்டுச் சூழலிலும், ஏனைய இடங்களிலும் நேர்த்தியை 5S எண்ணக்கரு அடிப்படையில் தினம் தினம் நடைமுறைப்படுத்துவார்.

**எண்ணக்கரு : ஒழுகலாறு விழுமியங்களும் நியமங்களும்.**
**அலகு 03 : ஒற்றுமையாக வாழ்வோம்.**

## அறிமுகம்

நாம் வாழ்வில் ஒற்றுமையாக, வாழ்வதினால் ஏற்படும் நன்மைகளை அறிந்து கொள்வதுடன். ஒற்றுமையாக வாழ சிறந்த நல்ல பண்புகளை கடைப்பிடிப்பதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 3.0 சிறந்த பிள்ளை என்ற வகையில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளைக் கடைப்பிடிப்பார். | தனது வாழ்வில் மற்றவர்களுடன் ஒற்றுமையாக ஒன்றிணைந்து வாழ்வது சிறந்த ஒரு பண்பாகும். | 3.1 தானொரு சிறந்த பிள்ளை என்ற வகையில் ஒற்றுமையாக வாழ்வதற்கான முறைகளை இனங்காண்பார். | 3.1.1 ஒற்றுமையாக வாழ்வதற்குரிய விழுமியங்களைக் குறிப்பிடுதல். |
| | | 3.2 ஒற்றுமையாக வாழ்வதால் ஏற்படும் நன்மைகளை அறிவார். | 3.2.1 ஒற்றுமையாக வாழ்வதால் ஏற்படும் நன்மைகளைக் கூறுதல் |

**கற்றல் வளங்கள்**

- மக்கள் ஒற்றுமையாக செயற்படும் விதத்தினை வெளிப்படுத்தும் காட்சிப்படம்.
- அல்லது தொழிற்சாலையில் வேலைச்செய்யும் காணொளிகள்.
- ஒற்றுமையை வெளிப்படுத்தும் கதைகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள், இறுவட்டுக்கள், காணொளிகள்.

## கற்றல் கற்பித்தல் அணுகுமுறை
## செயற்பாடு 1
### படிமுறை 1

- மக்கள் ஒன்றுக்கூடி ஒற்றுமையாக வேலைச் செய்யும் காணொளி ஒன்றினை, (வயல் வெளிகள், தொழிற்சாலைகள்) காட்சிப்படுத்துக.
- காணொளியில் இடம்பெறும் செயற்பாடுகளைப் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- இவ்வாறு ஒன்றிணைந்து செயற்படுவதினால் ஏற்படும் சாதகமான விளைவுகளைப்பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- வகுப்பறையில் ஒற்றுமையாகச் செயற்படும் சந்தர்ப்பங்களைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**செயற்பாடு 02**

- சக மாணவர்களுடன் ஒன்றுப்பட்டுச் செயற்படும் செயற்பாடுகள் சிலவற்றை மாணவரிடம் கேட்டறியுங்கள்.
- அதனைப் போல எமது நாட்டின் பல்லின மக்களுடனும் ஒன்றிணைந்து செயற்படும் சந்தர்ப்பங்களை எடுத்துரைக்க.
- இதன் மூலம் நாம் அடையும் நன்மைகளைப்பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- எமது நாடு வளம் பெறுவதற்கு நாட்டில் வாழ்கின்ற மக்களின் ஒற்றுமையே பெரும் சக்தியாகத் திகழ்கின்றது என்பதை சிறு கதை மூலம் எடுத்துக்காட்டுக.
- செயல்நூலில் உள்ள கதையை இரசணையுடன் மாணவர்களுக்கு வாசித்துக்காட்டுங்கள்.

**செயற்பாடு 03**

- செயற்பாட்டு நூலில் உள்ள கதையை வாசிக்க வழிப்படுத்துங்கள்
- அதனை செயற்பாட்டு ரீதியாக பாத்திரமேற்று நடிப்பதற்கு வழிப்படுத்துங்கள். (ஆசிரியர் முன்கூட்டியே செயற்பாட்டினை செய்வதற்கு திட்டமிட்டுக்கொள்ளுங்கள்.)
- ஒற்றுமையுடன் செயற்பட்டால் வெற்றி நிச்சயம் என்பதனை எடுத்துக் கூறுங்கள்.
- நாம் யாவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதனை எடுத்துக் கூறுங்கள்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது:-**

சிறப்பாக செய்யும் மாணவர்களை பாரட்டுவதுடன் இடர்படும் மாணவர்களுக்கு தனித்தனியே கவனம் செலுத்தி செயற்பாடுகளை நிறைவு செய்ய வழிப்படுத்துங்கள்.

| செயலாற்றுகை தர நியமங்கள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | | பாண்டித்திய மட்டத்திற்கு தொலைவில் உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 04 | நிலை 03 | நிலை 02 | நிலை 01 |
| 3.1 தானொரு சிறந்த பிள்ளை என்ற வகையில் ஒற்றுமையாக வாழ்வதற்கான முறைகளை இனங்காண்பார். | 3.1.1 | தாம் வாழும் சூழலில் ஒற்றுமையாக வாழ்வதற்கு ஏற்ற விழுமியப் பண்புகள் நான்கினைக் கூறுவார். | தாம் வாழும் சூழலில் ஒற்றுமையாக வாழ்வதற்கு ஏற்ற விழுமியப் பண்புகள் மூன்றினைக் கூறுவார். | தாம் வாழும் சூழலில் ஒற்றுமையாக வாழ்வதற்கு ஏற்ற விழுமியப் பண்புகள் இரண்டினைக் கூறுவார். | தாம் வாழும் சூழலில் ஒற்றுமையாக வாழ்வதற்கு ஏற்ற விழுமியப் பண்பு ஒன்றையேனும் கூறுவார். அல்லது கூற இடர்படுவார். |
| 3.2 ஒற்றுமையாக வாழ்வதால் ஏற்படும் நன்மைகளை அறிவார். | 3.2.1 | ஒற்றுமையாக வாழ்வதனால் கிடைக்கும் நன்மைகள் மூன்றினைக் கூறுவார். | ஒற்றுமையாக வாழ்வதனால் கிடைக்கும் நன்மைகள் இரண்டினைக் கூறுவார். | ஒற்றுமையாக வாழ்வதனால் கிடைக்கும் நன்மை ஒன்றையேனும் கூறுவார். | ஒற்றுமையாக வாழ்வதனால் கிடைக்கும் நன்மை ஒன்றையேனும் கூற இடர்படுவார். |

**வாழ்நாள் பிரயோகம்**

- நாம் வாழும் இந்த பல்லின சமூகம் கொண்ட இந்த நாட்டில் நாம் யாவரும் ஒருவரை ஒருவர் ஏதோ ஒன்றில் தங்கியுள்ளோம். ஆகையால் நாம் அனைவரும் ஒற்றுமையாக, வாழ வேண்டும்.

**எண்ணக்கரு : கலாசாரம் நாகரீகம் மற்றும் சமூக கலாசார உணர்வு**

**அலகு 04 : சரஸ்வதி பூசை**

## அறிமுகம்

கல்விக்கு முக்கியத்தும் பெறும் இடமான பாடசாலையில் கல்வி தெய்வத்துக்காக கொண்டாடப்படும் விழாவினை மாணவர்கள் செயற்பாட்டு ரீதியாக செய்வதே இப்பாடத்தினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 4.0<br>சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான வழிபாட்டு முறைகள், விதிமுறைகளை வெளிப்படுத்துவார். | சைவ பாடசாலைகளில் நடைபெறும் முக்கிய சமயவிழாக்களில் சரஸ்வதி பூசையும் ஒன்றாகும். சக்தியின் வடிவமான துர்க்கை, லக்சுமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவிகளுக்காக கொண்டாடப்படும் நவராத்திரி காலத்தில் விஜயதசமிக்கு முதல் நாளே சரஸ்வதி பூசை ஆகும். | 4.1<br>சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது சரியான வழிபாட்டு முறைகளில் ஈடுபடுவார். | 4.1.1<br>விசேட சமய வைபவங்களில் செயல் ரீதியாக பங்கேற்பார்.<br><br>4.1.2<br>நவராத்திரியில் சரஸ்வதி பூசை எப்போது கொண்டாடப்படுகின்றது எனக் கூறுவார்.<br><br>4.1.3<br>சரஸ்வதி பூசை காலங்களில் சுய ஆக்கத்திறன் செயற்பாடுகளில் ஈடுபடுவார். |
| | | 4.2<br>சைவசமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான விதிமுறைகளைப் பின்பற்றுவார். | 4.2.1<br>சரஸ்வதி பூசைக் காலங்களில் ஆன்மீக சிந்தனைகளைப் பெறுவார்.<br><br>4.2.2<br>தமது கலாச்சார உடைகளை அணிந்து ஆலயங்களுக்குச் செல்வார். |

## கற்றல் வளங்கள்

- காணொளிகள்
- சுவாமி படங்கள்
- பூ மாலைகள்
- பூசை பொருட்கள்
- நைவேத்திய பொருட்கள்
- பூக்கள்
- பாமாலை அடங்கிய காணொளிகள்

## கற்றல் கற்பித்தல் அணுகுமுறை

## செயற்பாடு 1

- இப்பாடத்தினை கற்பிப்பதற்கு பாடசாலையில் நவராத்திரி நடைப்பெறும் காலத்தினை தெரிவு செய்து கொள்க.
- நவராத்திரி காலங்களில் இப்பாடத்தினை செயற்பாட்டு ரீதியாக கற்பிப்பதற்கு திட்டமிட்டுக் கொள்க.
- நவராத்திரி காலங்களில் தங்கள் வகுப்புக்கு ஏற்ற ஒரு நாளை தெரிவு செய்து கொள்ளுங்கள்.
- அத்தினத்தில் மாணவர்களை கலாச்சார உடை அணிந்து பாடசாலைக்கு வருவதற்கு அதிபரின் அனுமதியை பெற்று மாணவர்களின் பெற்றோருக்கு தெரிவிக்கவும்.
- பூசைக்கு தேவையான பூசைப்பொருட்களையும் மாலைகளையும் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.

செயற்பாடு -02

- நவராத்திரி பூசையினை பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடுங்கள்
- ஏன் கொண்டாடுகின்றோம்.
- எந்த தெய்வத்திற்காக கொண்டாடப்படுகின்றது.
- அதன் மூலம் என்ன பயன்
- நவராத்திரி காலத்தில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் எவை என்பவற்றை பற்றி கலந்துரையாடுங்கள்.
- மாணவரின் கலந்துரையாடல்கள் மூலம் மாணவர்களின் பதில்களுடன் நவராத்திரியை பற்றிய விளக்கத்தினை முன்வைக்க
- நவராத்திரி கலாங்களில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய சமய வழிமுறைகளை எடுத்துக்காட்டுங்கள்.
  உதாரணம் :
    - அசைவ உணவு உட்கொள்ளாமை
    - தூய்மை பேணுதல்.
- நவராத்திரி காலத்தில் பாடப்படும் பாடல்களை கேட்பதற்கு தூண்டுதல்.

**செயற்பாடு 03**

- செயற்பாட்டு நூலில் வழங்கப்பட்ட பயிற்சியை செய்வதற்கு துணை புரிதல்.
- சமய வழிபாட்டின் போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய வியங்களை எடுத்துக்காட்டுதல்.
- மாணவர்களுடன் ஒன்றிணைந்து நவராத்திரி காலத்தில் பாராயணப் பாடலில் ஒன்றினை பாடி மகிழ்விக்க உதவுதல்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது:-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| செயலாற்றுகை தர நியமங்கள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | பாண்டித்திய மட்டத்திற்கு தொலைவில் உள்ளார் |
|---|---|---|---|
| | | நிலை 02 | நிலை 01 |
| 4.1 சமயச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது சரியான வழிபாட்டு முறைகளில் ஈடுபடுவார். | **4.1.1** | விசேட சமய வைபவங்களின் செயல் ரீதியாக சுயமாக பங்கேற்று செயற்படுவார். | விசேட சமய வைபவங்களில் மற்றவர்களின் உதவிகளுடன் பங்கேற்று செயற்படுவார். |
| | **4.1.2** | நவராத்திரியில் சரஸ்வதி பூசை எப்போது கொண்டாடப்படுகின்றது எனக் கூறுவார். | நவராத்திரியில் சரஸ்வதி பூசை எப்போது கொண்டாடப்படுகின்றது எனக் கூற இடர்படுவார். |
| | **4.1.3** | சரஸ்வதி பூசை காலங்களில் சுய ஆக்கத்திறன் செயற்பாடுகளில் உற்சாகமாக ஈடுபடுவார். | சரஸ்வதி பூசை காலங்களில் சுய ஆக்கத்திறன் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் பின்னடைவைக் காட்டுவார். |
| 4.2 சைவசமயச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சரியான விதிமுறைகளைப் பின்பற்றுவார். | **4.2.1** | சரஸ்வதிபூசைக் காலங்களில் ஆன்மீக சிந்தனைகளைப் செவிமடுத்துக் கூறுவார். | சரஸ்வதிபூசைக் காலங்களில் ஆன்மீக சிந்தனைகளைப் செவிமடுத்துக் கூறுவதில் இடர்படுவார். |
| | **4.2.1** | சரஸ்வதி பூசை காலங்களில் கலாசார உடை அணிந்து. சைவ சமய அனுஷ்டான முறைகளைக் கடைப்பிடித்துச் செயற்படுவார். | சரஸ்வதி பூசை காலங்களில் கலாசார உடை அணிந்து. சைவ சமய அனுஷ்டான முறைகளைக் கடைப்பிடித்துச் செயற்படுவதில் இடர்படுவார். |

**வாழ்நாள் பிரயோகம்**

- தினமும் சரஸ்வதியை வழிப்பட்டு படிக்க தொடங்குதல்.
- சரஸ்வதி பூசை காலத்தில் ஏனைய சமய கலாசாரங்களை சிறந்த நற்செயலொழுக்கங்களைக் கடைப்பிடிப்பார்.

**எண்ணக்கரு : பண்புவிருத்தி**

**அலகு 05 : பெரிய புராணம்**

**அறிமுகம்**

**பஞ்ச புராணம் பாடும் போது இறுதியில் பெரிய புராணத்தை பாடி நிறைவு செய்தல் வேண்டும். பெரிய புராணத்தை சேக்கிழார் பாடினார். இதனை மனனம் செய்து பாடுவதுடன் இதன் பொருளை அறிந்து வாழ்க்கையில் கடைப்பிடித்தல் இப்பாடத்தின் நோக்கமாகும்.**

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 5.0<br>திருமுறைகள் உதவியுடன் பண்பு விருத்திக்கான விசேட அம்சங்களை இனங்காண்பார். | சேக்கிழார் எனும் புலவரால் சைவசமயத்தின் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றையும் அவர்கள் சிவபெருமானின் மீது கொண்ட ஆழ்ந்த அன்பை விபரிக்கும் ஒரு படைப்பாற்றலே பெரிய புராணமாகும். இதற்கு இறைவனே அடியெடுத்துக் கொடுத்ததாக வரலாறு. | 5.1<br>பெரியபுராணத்தின் முதல் பதிகமான "உலகெலாம் உணர்ந்து...." என்ற திருமுறைப்பாடலை செவிமடுத்து தாளத்துடன் இசைப்பார். | 5.1.1<br>பெரியபுராணத்தை பாடியவர் யார் என்பதைக் கூறுவார். |
| | | | 5.1.2<br>"உலகெலாம் உணர்ந்து...." என்ற பதிகத்தினை செவிமடுப்பார். |
| | | | 5.1.3<br>"உலகெலாம் உணர்ந்து...." என்ற பதிகத்தினை இரசனையுடனும் பண்ணுடனும் பாடுவார். |

**கற்றல் வளங்கள்**

- திருமுறைப் பாடல்கள் அடங்கிய இறுவட்டுக்கள்
- ஒலிப்பதிவு கருவி
- காணொளிகள்
- பாடல் எழுதிய அட்டைகள்
- பாடல் அட்டைகள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

செயற்பாடு 1

- திருமுறைகளில் தேவாரமும், பெரியபுராணமும் அடங்கும் என்பதைக் மாணவர்களுக்கு கூறுதல்.
- திருமுறைகளை பாட முன்பும் பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் என்று பக்தியுடன் சொல்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- திருமுறைகளை பாடும் போது கைகூப்பி நிற்க வேண்டிய நிலையினை அனுசரிக்க வழிப்படுத்துங்கள்.
- எழுந்து அமைதியாக நின்று நெஞ்சிற்கு நேராக கைகளைக் கூப்பி இறைபக்தியுடன் பாடுதல்
- பெரிய புராணத்தினை சேக்கிழார் சுவாமிகள் அருளினர். என்பதையும் அதற்கு இறைவனே அடியெடுத்துக்கொடுத்தார் என்பதையும் குறிப்பிடுங்கள்.

- திருமுறைகளை ஓதும் போது நாம் இறுதியாக பாடவேண்டியது பெரியபுராணம் என்பதை எடுத்துக்காட்டுக.
- அதாவது பஞ்சபுராணத்தில் ஐந்தாவதாக ஓதப்படுவது பெரியபுராணம் என்பதை எடுத்துக்காட்டுங்கள்.

**செயற்பாடு 02**

- பெரியபுராணத்தை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துங்கள் (தெளிவான முறையில் எழுதி காட்சிப்படுத்துங்கள்)
- அதனை தனித்தனி வரிசையாக தெளிவான உச்சரிப்புடன் வாசித்துக் காட்டுங்கள்.
- அதனை தனித்தனி வரிசையாக பிரித்து தெளிவாக உச்சரித்து பண்ணுடன் பாடிக்காட்டுங்கள்
- மாணவர்கள் குழுவாகவும் தனித்தனியாகவும் பெரியபுராணத்தை பாடுவதற்கு பயிற்றுவிக்குக.
- பெரியபுராணப் பாடல் வரிகளைத் தெளிவாக உச்சரித்து பாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 03**

- பெரியபுராணப் பாடல் பொருளினை தனது மாணவர்களுக்கு விளங்கிக்கொள்ளக்கூடியவாறு இலகுவான முறையில் கூறுங்கள்.
- அதனை பாடியவரையும் அந்தப் பாடலின் பொருளையும் மாணவர்களுடன் கலந்துரையாடி இலகுவான மொழி நடையில் மாணவர்களுக்கு தெளிவுப்படுத்துங்கள்.
- இறைவன் மீது அன்பு காட்டுபவர்களுக்கு இறைவன் கட்டாயம் அருள் புரிவார் என்பதை தெளிவுப்படுத்துங்கள்.
- இப்பாடலை தாம் தினமும் வீட்டிலும் பாட வேண்டும் என்பதனை வழிப்படுத்தங்கள்.

**செயற்பாடு 04**

- மாணவர்கள் இருவர் இருவராக குழுக்களாக அமைத்துக் கொண்டு பெரிய புராணக்கதை முதல் வரியினை ஒருவரை பாட வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் மற்றவரை இரண்டாம் வரியினை பாட வழிப்படுத்துங்கள் இவ்வாறு மாறிப் பாடத் தூண்டுதல்.
- முதல் வரியைப் பாடயவர் இரண்டாம் வரியைபாடவும் இரண்டாம் வரியைப் பாடியவர் முதலாம் வரியைப் பாடவும் மாறி மாறிப் பாட வழிப்படுத்துங்கள்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது:-**

**செயற்பாட்டில் ஈடுபடும்போது இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| செயலாற்றுகை தர நியமங்கள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | பாண்டித்திய மட்டத்திற்கு தொலைவில் உள்ளார் |
|---|---|---|---|
| | | **நிலை 02** | **நிலை 01** |
| 5.1 பெரியபுராணத்தின் முதல் பதிகமான ‘‘உலகெலாம் உணர்ந்து....’’ என்ற திருமுறைப்பாடலை செவிமடுத்து தாளத்துடன் இசைப்பார். | **5.1.1** | பெரியபுராணத்தை பாடியவர் யார் என்பதைக் அறிந்து கூறுவார். | பெரியபுராணத்தை பாடியவர் யார் என்பதைக் அறிந்து கூறுவதில் இடர்படுவார். |
| | **5.1.2** | ‘‘உலகெலாம் உணர்ந்து....’’ என்ற பதிகத்தின் முதல் வரியைக் செவிமடுத்துக் கூறுவார். | ‘‘உலகெலாம் உணர்ந்து....’’ என்ற பதிகத்தின் முதல் வரியைக் செவிமடுத்துக் கூற இடர்படுவார். |
| | **5.1.3** | ‘‘உலகெலாம் உணர்ந்து....’’ என்ற பதிகத்தினை பக்தியுடனும் பண்ணுடனும் முழுமையாகப் பாடுவார். | ‘‘உலகெலாம் உணர்ந்து....’’ என்ற பதிகத்தினை பக்தியுடனும் பண்ணுடனும் முழுமையாகப் பாட இடர்படுவார். |

## வாழ்நாள் பிரயோகத்திற்காக

- நாள்தோறும் தவறாது பெரிய புரணத்தைப் (உலகெலாம்...) பாடுதல்

**எண்ணக்கரு : பண்பு விருத்தி**

**அலகு 06 : ஆத்தி சூடி**

## அறிமுகம்

அறநெறிப்பாடல்களில் ஆத்திசூடியும் ஒன்றாகும். ஆத்திசூடியை ஔவையார் பாடினார். இதன் வரிகளை மனனம் செய்து பாடுவதுடன் அதன் பொருளை அறிந்து அவற்றை வாழ்க்கையில் கடைபிடித்தல் இப்பாடத்தின் நோக்கமாகும்.

| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றுகை தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதிகள் |
|---|---|---|---|
| 6.0 சமயத்தை தோற்று வித்தவர் / வழிகாட்டி/ இறைவன் தொடர்பான சமயக் கதைகள் அறநூல்கள், காவியங்கள், புராணங்கள், திருமுறைகள், அறநெறிப் பாடல்களின் உதவியுடன் பண்பு விருத்திக்கான விசேட அம்சங்களை இனங்காண்பார். | ஔவையாரால் எழுதப்பட்ட அற நூல்களில் ஒன்றான ஆத்திச்சூடி உயிர் எழுத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு நூலாகும். பல்வேறுப்பட்ட நல்ல அறக்கருத்துக்களை போதிப்பதினூடாக சிறுவயதில் இருந்தே நல்லெண்ணத்திற்கு வித்திடக்கூடியதாகக் காணப்படுகின்றது. | 6.1 அறநூல், அறநெறிப்பாடல்களை செவிமடுத்து தாளத்துடன் இசைப்பார். | 6.1.1 அறநெறிப்பாடலில் ஆத்தி சூடியை செவிமடுத்துக் கூறுவார். |
| | | | 6.1.2 ஆத்தி சூடி பாடலை தாளத்துடன் இசைத்துக் காட்டுவார். |
| | | 6.2 அறநூல்கள், அறநெறிப்பாடல்கள் மூலம் பெறத்தக்க படிப்பினைகளைக் கூறுவார். | 6.2.1 ஆத்தி சூடியின் மூலம் நாம் பெறும் நல்லொழுக்கச் செயற்பாடுகளை எடுத்துக் கூறுவார். |
| | | 6.3 ஆத்தி சூடி என்ற அறநெறிப்பாடல் எடுத்துக்காட்டும் படிப்பினைகளை தன்வாழ்வில் பயன்படுத்துவார். | 6.3.1 ஆத்தி சூடி தொடர்பான கதை ஒன்றினைக் கூறுவார். |
| | | | 6.3.2 அக்கதையில் தாம் பெற்றுக்கொள்ளும் நல்லொழுக்கச் செயற்பாடுகளை எடுத்துக் கூறுவார். |

**கற்றல் வளங்கள்**

- ஔவையாரின் படம்
- ஔவையார் தொடர்பான இறுவெட்டுக்கள்
- சிறுகதைகள்
- பாடல்கள்
- பாடல்களை ஓதும் ஒலிப்பதிவுகள்
- காணொளிகள்

## கற்றல் கற்பித்தல் அணுகுமுறை

செயற்பாடு 1

**படிமுறை 1**

- மாணவர்களை பொருத்தமான ஒரு சூழலில் அரைவட்டமாக வைத்துக் கொள்ளுதல்.
- ஔவையார் பற்றிய ஓர் அறிமுகத்தை மாணவர்களுக்கு வழங்கவும்.
- (புலவர்களில் சிறந்த பெண் புலவர். அதிகமான அறநெறிப் பாடல்கள், பக்தி பாடல்கள் போன்றவற்றை பாடியவர். சைவத்தினை மட்டும் அல்லாது தமிழையும் வளர்த்த பெருமை கொண்டவர்.)
- ஔவையார் பல அறநெறிப்பாடல்களைப் பாடினார். அவற்றில் உங்களைப் போன்ற சின்னஞ் சிறுவர்களுக்காக அகர வரிசையில் சிறந்த வரிகளை கொண்ட நற்கருத்துக்களை தரும் நூல் ஆத்திசூடியை இயற்றினார். என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுக.
- ஆத்திசூடிப் பாடல் வரிகளைச் சரியாகவும் தெளிவாகவும் எழுதி காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்களை வாசிக்க வழிப்படுத்துக.
- ஆத்திசூடியின் பாடல் வரிகளின் கருத்துக்களை மாணவர்களுக்கு சுருக்கமாக தெளிவுபடுத்தி மாணவர்களை பொருளறிந்து மீண்டும் ஆத்திசூடியை கூறுவதற்கு வழிப்படுத்துக.

### செயற்பாடு 2

- ஆத்திசூடிப் பாடல்கள் உணர்த்தும் கதைகளை மாணவர்களுடன் இலகுவான நடைமுறையில் கலந்துடையாடுக.
- ஆத்திசூடி பாடல்கள் உணர்த்தும் சிறுவர் கதைகளை காணொளிகளின் மூலம் தேடி அறிந்து காட்சிப்படுத்துங்கள்.
- இக்கதைகள் உணர்த்தும் தத்துவங்களை மாணவர்களிடம் கலந்துரையாடுங்கள்
- (மாணவர்களுக்கு விளங்கும் வகையில் தொடங்கி அதனை விளங்கவைக்கவும்)
- கதைகளில் எடுத்துக்காட்டும் ஆத்திசூடி வரிகளை தனித்தனியாக எழுதி காட்சிப்படுத்துங்கள்.

### செயற்பாடு 3

- மாணவர்களை ஏற்ற சூழல் ஒன்றுக்கு அழைத்துச் சென்று ஆத்தி சூடியை தனித்தனியாக எழுதி அட்டைகளை பகிர்ந்து வழங்குங்கள்
- தனக்கு கிடைத்த அட்டையினை வாசிக்க வழிப்படுத்துக.
- சிறப்பாக வாசிக்கும் மாணவர்களைப் பாராட்டுவதுடன் இடர்படுபவர்களுக்கு உதவுங்கள்.
- அட்டைகளை மாற்றி மாற்றி வழங்கி மூன்று அல்லது நான்கு அட்டைகளையாவது வாசிக்கத் தூண்டுங்கள்.
- மூன்று நான்கு முறை தெளிவாகவும் உச்சரிப்புடனும் வாசிக்கத் தூண்டுங்கள்.

### செயற்பாடு 3

- ஆத்திசூடி வரிகளை இலகுவான ஓசைநயத்துடன் படிக்காட்டுவதுடன் மாணவர்களையும் பாட வழிப்படுத்துக.
- (பாடல்களைப் பாடுவதற்கு பொருத்தமான காணொளிகளை பார்ப்பதற்கும் கேட்பதற்கும் வழிப்படுத்துங்கள்)
- அனைவரும் ஒன்றினைத்து பாட வழிப்படுத்துக.

- தனித்தனிக் குழுவாக பாட சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மீண்டும் மீண்டும் பாடி பாடலை மனனம் செய்வதற்கு உதவி புரியுங்கள்.
- சிறிய வயதிலிருந்தே ஆத்திசூடி கூறும் அறிவுரைகளுக்கேற்ப நாளாந்தம் பாடசாலையில் தனது வீட்டுச் செயற்பாடுகளிலும் செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்துக.
- ஆத்திசூடி கருத்துக்களைக் கடைப்பிடிப்பதால் எமது வாழ்வில் ஏற்படும் சாதகமான விளைவுகளை மணவர்களுக்கு தெளிவாக விளக்குக.

**செயற்பாடு 05**

- பாடல் வரிகளை பொருத்தமாகப் பொருத்துவதற்கு வழிப்படுத்துக.
- முதலில் குழுவாக சரியாக வரிகளை பொருத்தி வாசித்துக்காட்ட வழிக்காட்டுக.
- தனித்தனியாக வரிகளில் வரும் சொற்களை இனங்கண்டு பொருத்த வழிப்படுத்துக.
- பொருத்திய வரிகளைப் பாடிக்காட்ட வழிக்காட்டுக.

**கவனத்திற் கொள்ளவேண்டியது:-**

**செயற்பாட்டில் ஈடுபடும் போது இடர்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு தேவையான மேலதிக உதவிகளையும் வழிக்காட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| செயலாற்றுகை தர நியமங்கள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | பாண்டித்திய மட்டத்திற்கு தொலைவில் உள்ளார் |
|---|---|---|---|
| | | நிலை 02 | நிலை 01 |
| அறநூல், அறநெறிப்பாடல்களை செவிமடுத்து தாளத்துடன் இசைப்பார். | 6.1.1 | அறநெறிப்பாடலில் ஆத்திச்சூடியை செவிமடுத்துக் இரண்டு அடிகளைக் கூறுவார். | அறநெறிப்பாடலில் ஆத்திச்சூடியை செவிமடுத்துக் ஒரு அடியேனும் கூற இடர்படுவார். |
| | 6.1.2 | ஆத்திச்சூடி பாடலை தாளத்துடன் முழுமையாக இசைத்துக் காட்டுவார். | ஆத்திச்சூடி பாடலை ஏனையோரது உதவியுடன் முழுமையாக தாளத்துடன் இசைத்துக் காட்டுவார் அல்லது இசைத்துக் காட்ட இடர்படுவார். |
| அறநூல்கள், அறநெறிப்பாடல்கள் மூலம் பெறத்தக்க படிப்பினைக் கூறுவார். | 6.2.1 | ஆத்திச்சூடியின் மூலம் நாம் பெறும் நல்லொழுக்கச் செயற்பாடுகள் இரண்டேனும் எடுத்துக் கூறுவார். | ஆத்திச்சூடியின் மூலம் நாம் பெறும் நல்லொழுக்கச் செயற்பாடுகள் ஒன்றையேனும் எடுத்துக் கூற இடர்படுவார். |
| ஆத்திச்சூடி என்ற அறநெறிப்பாடல் எடுத்துக்காட்டும் படிப்பினை தன்வாழ்வில் பயன்படுத்துவார். | 6.3.1 | ஆத்திச்சூடி தொடர்பான கதை ஒன்றினைக் சுயமாக முன்வந்து இரசணையுடன் கூறுவார். | ஆத்திச்சூடி தொடர்பான கதை ஒன்றினைக் ஏனையோரது உதவியுடன் முன்வந்து கூறுவார். அல்லது கூற இடர்படுவார். |
| | 6.3.2 | அக்கதையில் தாம் பெற்றுக்கொள்ளும் நல்லொழுக்கச் செயற்பாடுகள் இரண்டை அறிந்து கூறுவார். | அக்கதையில் தாம் பெற்றுக்கொள்ளும் நல்லொழுக்கச் செயற்பாடு ஒன்றையேனும் கூறுவார் இல்லது கூற இடர்படுவார். |

**வாழ்நாள் பிரயோகம்**

- அறநெறி நூலான ஆத்திச் சூடி பாடல்களின் படிப்பினைகளை தனது அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடித்தல்.
- ஆத்திசூடி பாடல்களில் கருத்துக்களுக்கு ஏற்ப ஒழுகுதல்.

**எண்ணக்கரு : கலாசாரம் நாகரிகம் மற்றும் சமூக கலாசார உணர்வு**

**அலகு 07 : தியானம் செய்வோம்.**

## அறிமுகம்

**தியானம் என்பது மனதை ஒருமுகப்படுத்தி, அமைதியையும் தெளிவையும் பெறுவதற்கான ஒரு பழங்கால பயிற்சி. இது உடல் மற்றும் உள நலத்திற்கு பல நன்மைகளை தருவதுடன், மன ஒருமைப்பாட்டினையும் கற்றுத் திறன் அதிகரிப்பதினையும் ஏற்படுத்துவதே இப்பாடத்தின் நோக்கமாகும்.**

| **கற்றல் பேறு** | **உள்ளடக்கம்** | **செயலாற்றுகை தர நியமங்கள்** | **கணிப்பீட்டு நியதிகள்** |
|---|---|---|---|
| நாளாந்த செயற்பாடுகளின் போது மனதை ஒருமுகப்படுத்தி உரிய கவனத்துடன் செயல்படுவார். | ஒருவரின் எண்ணங்கள் உணர்வுகள் மற்றும் வெளிபுற கவன சிதறல்களில் இருந்து மனதை விடுவித்து ஒரு அமைதியான மற்றும் தெளிவான நிலையை அடைவதை அடிப்படையாகக் கொண்டது தியானமாகும். | 7.1 எளிய தியானப்பயிற்சியில் ஈடுபடுவார். | 7.1.1 சரியான கொண்ணிலையைக் கொண்டு தியானப்பயிற்சியை மேற்கொள்வார். |
| | | | 7.1.2 தியானப்பயிற்சியை மேற்கொள்ளும் போது உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளை எடுத்துக் கூறுவார். |
| | | | 7.1.3 தினமும் தியானப்பயிற்சி செய்வதால் மனதில் எழும் ஆரோக்கியமான எண்ணங்களைக் கலந்துரையாடுவார். |

**கற்றல் வளங்கள்**

விரிப்பு
காணொளிகள்
பாட அட்டைகள்

## கற்றல் கற்பித்தல் அணுகுமுறை

### செயற்பாடு 1

**படிமுறை 1**

- தியானம் என்பது என்ன என்பதினை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- தியானம் என்பது மனதை ஒரு குறிப்பிட்ட பொருள், எண்ணம் செயல்பாடு அல்லது உணர்வு மீது குவிப்பதன் மூலம் மனதை அமைதிபடுத்தும் ஒரு செயற்பாடாகும்.
- தியானம் செய்வதினால் மன ஆரோக்கியத்துக்கு பல நன்மைகள் ஏற்படுகின்றன என கலந்துரையாடுங்கள்.

  - மன அழுத்தத்தைக் குறைக்கும்.
  - பதற்றத்தைக் குறைக்கும்
  - கவனத்தை அதிகரிக்கும்.
  - உறக்கத்தை அதிகரிக்கும்
- (மாணவர்களுக்கு ஏற்ற வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.)

### செயற்பாடு 02

**படிமுறை 01**

- மாணவர்களை கவனச்சிதறல்கள் இல்லாத ஒரு அமைதியான இடத்திற்கு அழைத்துச் சொல்லுங்கள்.
- மாணவர்களை தரையில் விரிப்பொன்றின் மீது சௌகரியமாக அமர செய்யுங்கள்.
- முதுகு முள்ளந்தண்டு நேராக இருக்கும் வண்ணம் இலகுவாக இருக்கும் படி அறிவுறுத்தவும்.
- ஆரம்பத்தில் 2 – 3 நிமிடங்கள் தியானம் செய்ய வழிப்படுத்துங்கள் பிறகு நேரத்தினை படிப்படியாக அதிகரிக்க செய்யுங்கள்.
- கண்களை மெதுவாகவும் மூடிக்கொள்வதற்கு வழிப்படுத்துங்கள், பிறகு மூக்கு வழியாக வளியை உள்ளெடுத்து வெளியிடுமாறு கூறி அவை இயல்பாகவே நடைபெறும் விதத்தினை உணர வையுங்கள்.
- உங்கள் மனதில் தோன்றும் வேறு எண்ணங்களுக்கு விடுத்து சுவாசிக்கும் தன்மையை உணரும் படி கூறுங்கள், ஓம் என்ற மந்திரத்தினை 7 அல்லது 9 தடவை கூறி இவ்வாறு பயிற்சிகளை மேற்கொள்ள உதவுங்கள்.

**படிமுறை – 02**

- தியானத்தை மேற்கொண்ட பிறகு அவர்களின் உணர்வுகளை பற்றி கலந்துரையாடுங்கள். மீண்டும் ஒருமுறை மன ஒருமைப்பாட்டால் நாம் நன்றாக படிக்க முடியும் என வலியுறுத்துங்கள்.

**கவனத்திற்கொள்ள வேண்டியது:-**

**செயற்பாட்டில் ஈடுபடும் போது இடர்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு தேவையான மேலதிக உதவிகளையும் வழிக்காட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்துங்கள்.**

| கணிப்பீட்டு நியதிகள் | க.இ | பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் | பாண்டித்திய மட்டத்திற்கு தொலைவில் உள்ளார் |
|---|---|---|---|
| | | **நிலை 02** | **நிலை 01** |
| எளிய தியானப்பயிற்சியில் ஈடுபடுவார். | 7.1.1 | சரியான கொண்ணிலையைக் கொண்டு சுயமாக செயற்பாடு ரீதியில் தியானப்பயிற்சியை மேற்கொள்வார். | ஏனையோரின் உதவியுடன் சரியான கொண்ணிலையைக் கொண்டு செயற்பாடு ரீதியில் தியானப்பயிற்சியை மேற்கொள்வார். அல்லது மேற்கொள்ள இடர்படுவார். |
| | 7.1.2 | தியானப்பயிற்சியை மேற்கொள்ளும் போது உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகள் இரண்டையேனும் எடுத்துக் கூறுவார். | தியானப்பயிற்சியை மேற்கொள்ளும் போது உள்ளத்தில் ஏற்படும் உணர்வு ஒன்றைக் கூறுவார். அல்லது கூற இடர்படுவார். |
| | 7.1.3 | தினமும் தியானப்பயிற்சி செய்வதால் மனதில் எழும் ஆரோக்கியமான எண்ணங்களை கலந்துரையாடி சுயமாக முன்வந்து இரண்டு நன்மைகளைக் கூறுவார். | தினமும் தியானப்பயிற்சி செய்வதால் மனதில் எழும் ஆரோக்கியமான எண்ணங்களை கலந்துரையாடி ஏனையோர் உதவியுடன் இரண்டு / ஒன்று நன்மைகளைக் கூறுவார். அல்லது கூற இடர்படுவார். |

## வாழ்நாள் பிரயோகம்

- தினமும் தியானம் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதினை வழிப்படுத்துவதுடன் செய்யும் ஆர்வத்தினையும் ஏற்படுத்துங்கள்.